பக்கங்கள்: 20 விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 01 வள்ளுவர் ஆண்டு 2047 தை 11, செவ்வாய்க்கிழமை 24.01.2017 கதிர் 80

# மைத்திரி கொண்டு வருவது 'சம்பந்தன் அரசமைப்பு'!

## அதனால் நாட்டுக்கு ஆபத்து எச்சரிக்கின்றார் கெஹலிய

கொழும்பு, ஜனவரி 24

**தற்போதைய அரசமைப்பின் முதலாவது அத்தியாயத்தின் முதல் மூன்று ஷரத்துக்களையும் நீக்கிவிட்டு 'சம்பந்தன் அரசமைப்பை' நிறைவேற்ற ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முயற்சி எடுத்துள்ளார். அதனால் நாட்டுக்குப் பேராபத்து என எச்சரித்துள்ளார் கூட்டு எதிரணியின் நாடாளுமன்ற உறுப்பினர் கெஹலிய ரம்புக்வெல.**

எதிர்வரும் 27 ஆம் திகதி நுகேகொடையில் நடைபெறும் கூட்டு எதிரணியின் கூட்டம் தொடர்பான விடயங்களைத் தெளிவுபடுத்தும் வகையில் பத்தரமுல்லையில் உள்ள கூட்டு எதிரணியின் பிரதான அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

இருபது வருடங்களுக்கு மேலாக அரசியலில் ஈடுபட்டுள்ளமையால் அரசியலில் இருந்து விலகத் தாம் எண்ணியுள்ளார் எனக் கூறிய அவர், எனினும்

பக்கம் 20 »

## 35 கிலோ கேரளக் கஞ்சா மீட்பு!

கொழும்பு, ஜன.24

தலைமன்னாரில் இருந்து மன்னார் ஊடாக கொழும்புக்கு கேரளக் கஞ்சாப் பொதிகளை அதிசொகுசுக் கார் ஒன்றில்

பக்கம் 20 »

## முஸ்லிம் அமைச்சர் எதிரணிக்கு?

கொழும்பு, ஜன.24

தற்போது அமைச்சரவை அந்தஸ்துடன் பதவி வகிக்கும் மூத்த முஸ்லிம் அமைச்சர் ஒருவர் கூட்டு எதிரணி எதிர்வரும் வெள்ளிக்கிழமை 27ஆம் திகதி

பக்கம் 20 »

## கிழக்குப் பல்கலை மாணவர்கள் 10 பேர் கைது!

சாவகச்சேரி ஜன.24

கிழக்குப் பல்கலைக்கழகத்தின் நிர்வாகச் செயற்பாடுகளுக்குத் தடங்கல்களை ஏற்படுத்தினார்கள் என்ற குற்றச்சாட்டில் கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்கள் 10 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

பக்கம் 20 »

## நாடு தழுவிய ரீதியில் அரசுக்கு எதிராக ஜே.வி.பி. போராட்டம்

கொழும்பு, ஜன.24

நாட்டின் பெறுமதிமிக்க வளங்களை வெளிநாடுகளுக்கும் தனியார் நிறுவனங்களுக்கும் வழங்குவதற்கு எதிராக பொதுமக்களை ஒன்று திரட்டி நாடு தழுவிய ரீதியில் எதிர்வரும் முதலாம் திகதி முதல் போராட்டங்களை நடத்தப் போவதாக ஜே.வி.பி. அறிவித்துள்ளது. (உ)


## அர்ஜுனா மகேந்திரன் மீள நிதி அமைச்சில்?

கொழும்பு, ஜன.24

மத்தியவங்கியின்முன்னாள் ஆளுநராக இருந்து, பிணைமுறி தொடர்பான விசாரணைகளை அடுத்து அப் பதவியில் இருந்து விலகிய அர்ஜுன மகேந்திரன் தற்போது நிதி அமைச்சின் ஆலோசகராக பணியாற்றிவருகின்றார் என்று ஊழல் தடுப்பு முன்னணி குற்றம் சுமத்தியிருக்கின்றது.

பக்கம் 20 »

### அளப்பு அருணாசலம்




## ஆசிரியர்களின் போராட்டம் ஒரு வாரத்துக்கு ஒத்திவைப்பு



யாழ்ப்பாணம், ஜன.24

மூன்று ஆசிரியர்களுக்கு வடமாகாணக் கல்விப் பணிப்பாளரால் வழங்கப்பட்ட பணித் தடை உத்தரவு, ஆசிரிய இடமாற்றம் ஆகிய பிரச்சினைகளை ஒட்டி இலங்கை ஆசிரியர் சங்கம் முன்னெடுத்த கவனவீர்ப்புப் போராட்டம் முதலமைச்சர் சி.வீ.விக்னேஸ்வரன் எழுத்து மூலம் வழங்கிய கோரிக்கையை அடுத்து ஒரு

பக்கம் 20 »

## சு.க. முதல்வர்களுடன் சந்திரிகாவும் பேச்சு

கொழும்பு, ஜன.24

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் நேற்று முன்தினம் பேச்சு நடத்திய சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் ஏழு மாகாண முதலமைச்சர்களுடனும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நேற்று தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு பேசினார்.

மஹிந்த ராஜபக்ஷவுடன் அவர்கள் நடத்திய பேச்சு விவ

பக்கம் 20 »

**சுவிஸுக்கு எனப் புறப்பட்டுச் சென்ற**

## வடமராட்சி இளைஞர் முகவரால் ஆபிரிக்காவில் அடித்துக் கொலை



வடமராட்சி, ஜன.24

வடமராட்சியில் இருந்து முகவர் ஊடாக சுவிஸ் நாட்டுக்குச் செல்வதற்காகப் புறப்பட்டுச் சென்ற இளைஞர் ஒருவர் மேற்கு ஆபிரிக்காவில் வைத்து அடித்துக் கொலை செய்யப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கரவெட்டி மத்தியைச் சேர்ந்த மனோகரன் இரவிச்சந்திரன் (வயது - 22) என்று விசேட

பக்கம் 20 »

## நித்தம்புவவில் கோர விபத்து 2 பேர் பலி! 35 பேர் படுகாயம்!!



கொழும்பு,ஜன.24

கொழும்பு- கண்டி பிரதான வீதியின் நித்தம்புவ பட்டலிய பகுதியில் நேற்றுக் காலை இடம்பெற்ற விபத்தில் இருவர் உயிரிழந்துள்ளமையோடு 35 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

பஸ் ஒன்றும் கன்டர் ரக லொறி ஒன்றும் மோதிக்கொண்டமையாலேயே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இதன்போது பஸ்ஸில் பயணித்த இருவர் பலியாகியுள்ளனர். காயமடைந்தவர்கள் வதுபிட்டிவல வைத்தியசாலையில்

பக்கம் 20 »

## தவறான தேசியக் கொடியே நெடுந்தாரகையில் பறந்தது?

யாழ்ப்பாணம், ஜன.24

அண்மையில் குறிகட்டுவானிலிருந்து நெடுந்தீவுக்கான 'நெடுந்தாரகை' படகுச் சேவை ஆரம்பிக்கப்பட்டபோது அந்தப் படகில் ஏற்றப்பட்ட தேசியக் கொடி தவறான முறையில் அமைந்திருந்ததாகக் கொழும்பு ஆங்கில நாளிதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

பௌத்தத்தின் நான்கு அடிப்

பக்கம் 20 »

## விசுவமடுவில் குளவிகள் கொட்டியதில் 39 மாணவர்கள், 7 ஆசிரியர்கள் பாதிப்பு

முல்லைத்தீவு,ஜன.24

முல்லைத்தீவு விசுவமடு மகா வித்தியாலயத்துக்கும் விஸ்வநாதன் ஆரம்பப் பாடசாலைக்கும் இடையில் உள்ள மரமொன்றில் இருந்த குளவிக்கூடு கலைந்து மாணவர்களையும், ஆசிரியர்களையும் துரத்தித் துரத்திக் கொட்டியதால்

பக்கம் 20 »



## கச்சதீவில் ஒதுங்கிய நெடுந்தீவு மீனவரை கடற்படையினர் மோசமாகத் தாக்கினர்!

### ஆட்சேபித்து நெடுந்தீவில் இன்று கண்டனப் போராட்டம்

நெடுந்தீவு ஜன.24

நெடுந்தீவில் இருந்து கடலுக்கு மீன்பிடிக்கச் சென்ற மூன்று மீனவர்கள் எரிபொருள் தீர்ந்த நிலையில் கச்சதீவில் கரையொதுங்கியபோது அங்குள்ள கடற்படையினர் அவர்களைக் கடுமையாகத் தாக்கிக் காயப்படுத்திய பின்னர் திருப்பி அனுப்பியுள்ளனர்.

கடற்படையினரின் மனிதாபிமானமற்ற இந்தச் சம்பவம் தொடர்பாகத் தாங்கள் கவலையடைந்துள்ளனர் என நெடுந்தீவுக் கடற்றொழிலாளர்கள் தெரிவித்துள்ளனர்.

கடற்படையின் செயலைக் கண்டித்து தாங்கள் இன்று செவ்வாய்க்கிழமை கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்றை முன்னெ

பக்கம் 20 »

# வறட்சி இயற்கையின் கொடூரமே அல்ல; நாம் இழைத்த கொடூரத்தின் விளைவே!

## வடக்கு விவசாய அமைச்சர் ஐங்கரநேசன் விவரிப்பு



நாட்டில் ஏற்பட்டிருக்கும் வறட்சிக்குப் பலரும் இயற்கையையே குற்றம் சாட்டிவருகிறார்கள். இயற்கை வஞ்சித்துவிட்டது என்றும் இயற்கையின் கொடூரம் என்றும் குறிப்பிட்டு வருகின்றார்கள். உண்மையில் வறட்சி இயற்கையின் கொடூரம் அல்ல இயற்கைக்கு நாம் இழைத்த கொடூரத்தின் விளைவுதான் வறட்சி என்று வடக்கு விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் சுட்டிக்காட்டியுள்ளார்.

வடக்கு விவசாய அமைச்சின் 2016ஆம் ஆண்டுக்குரிய சாதனை விவசாயிகளைக் கௌரவிக்கும் உழவர் பெருவிழா நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது. ஆயிரக்கணக்கான விவசாயிகள் திரண்டிருந்த இந்நிகழ்ச்சிக்குத் தலைமை வகித்து உரையாற்றியபோதே அமைச்சர் பொ.ஐங்கரநேசன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் கூறியவை வருமாறு :-

'தெய்வம் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள் பெய்யெனப் பெய்யும் மழை' - என்று திருவள்ளுவர் தனது திருக்குறளில் குறிப்பிட்டிருக்கிறார். இதனைச் சரியா எனப் பார்ப்பதற்கான வாய்ப்பு எனக்குக் கிடைக்கவில்லை. ஆனால், இயற்கையைத் தொழுத விவசாயிகள் பெய்யெனச் சொன்னால் பெய்யும் மழை என்பதை நான் உறுதியாக நம்புகின்றேன். எமது முன்னோர்கள் இயற்கையோடு இயைந்து வாழ்ந்தவர்கள். அப்போதெல்லாம் மாரி பொய்க்கவில்லை, இயற்கை எங்களை வஞ்சிக்கவில்லை.

நாங்கள் இப்போது பசுமைப்புரட்சியின் பெயரால் விவசாய நிலங்களை வன்புணர்ச்சி செய்து வருகிறோம். நச்சு விவசாய இரசாயனங்களால் பூமியின் மேனியெங்கும் நனைத்து வருகிறோம். ஆழ்குழாய்க் கிணறுகளைத் தோண்டி நிலத்தடி நீரையெல்லாம் வீணாக வாரியிறைத்து வருகிறோம். இயற்கைக்கு நாங்கள் இழைத்துவரும் இத்தகைய கொடூரங்களின் விளைவாகவே கடும் வறட்சியும் பெரும் வெள்ளமும் ஏற்படுகின்றது.



இயற்கையின் இந்தச் சீற்றங்களை இயற்கையின் கொடூரங்களாகப் புரிந்து கொள்ளாமல் இயற்கை எங்களுக்கு விடுத்திருக்கும் எச்சரிக்கைகளாகவே எடுத்துக்கொள்ள வேண்டும். இந்த எச்சரிக்கைகளை உதாசீனம் செய்யாமல் எமது விவசாயச் செயன்முறைகளை மீளவும் இயற்கையோடு இயைந்ததாக நாங்கள் மாற்றிக்கொள்ள வேண்டும். தவறின், இயற்கை எங்களை ஏதோ ஒரு வழியில் தண்டிப்பது தவிர்க்க முடியாததாகவே இருக்கும் - எனறார்.





உழவர் பெருவிழாவில் வறட்சியை எதிர்கொள்ளவல்ல விவசாய முறைமைகள் தொடர்பாகக் கண்காட்சி ஒன்றை வட மாகாண விவசாயத் திணைக்களமும், கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களமும் இணைந்து ஏற்பாடு செய்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (உ)

# காணாமற்போனவர்களின் விடயத்தில் பதில் கூற முடியாத கையறு நிலையில் அரசும் கூட்டமைப்பும்!

## விசனத்துடன் கருத்துரைக்கிறார் சிவசக்தி ஆனந்தன் எம்.பி.

யாழ்ப்பாணம், ஜன.24

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையும், இலங்கை அரசாங்கமும் இணைந்து எடுத்த தீர்மானத்தை நடைமுறைப்படுத்தும்படி வலியுறுத்தவேண்டிய பாரிய பொறுப்பு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் ஐயாவுக்கும் இருக்கின்றது ஆகவே, இந்தப் பொறுப்புக்களில் இருந்து நாங்கள் விலக முடியாது என வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தெரிவித்துள்ளார்.

காணாமற்போனவர்களின் உறவுகளால் மேற்கொள்ளப்பட்ட உண்ணாவிரதப்போராட்டத்தில் கலந்து கொண்டு ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த போதே இவ்வாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்தும் தெரிவிக்கையில் –

காணாமற்போனோரின் உறவுகள் காலவரையறையற்ற உணவுத் தவிர்ப்பு போராட்டம் ஒன்றை மேற்கொண்டுள்ளார்கள். இவர்களுக்கு ஆதரவாக வடக்கு, கிழக்குப் பகுதிகளில் உள்ள காணாமற் போனவர்களின் உறவுகளும் இந்தப் போராட்டத்தை முன்னெடுத்துள்ளார்கள். காணாமற் போனவர்களின் உறவுகள் கடந்த 7 வருடங்களாகத் தமது பிள்ளைகள், உறவுகளை மீட்டுத்தரும்படி வடக்கு, கிழக்கு, தெற்கு எனப் பல போராட்டங்களை நடத்தியிருந்தார்கள். இதற்கு அப்பால் பல்வேறுபட்ட இடங்களில் தமது பிள்ளைகளைக் கண்டு பிடித்துத் தருமாறு பதிவுகளைச் செய்துள்ளார்கள். ஜனாதிபதி ஆணைக்குழு, பொலிஸ், இராணுவம், மனித உரிமை ஆணைக்குழு, செஞ்சிலுவைச் சங்கம் என ஒவ்வொருவரும் கிட்டத்தட்ட 10இற்கும் மேற்பட்ட இடங்களில் பதிவுகளை மேற்கொண்டுள்ளார்கள்.

வடக்கு, கிழக்கு, தெற்கு என ஜனாதிபதி ஆணைக்குழுவில் 24 ஆயிரத்திற்கு மேற்பட்டவர்கள் காணாமற் போகச் செய்யப்பட்டனர் எனப் பதிவு செய்யப்பட்டுள்ளது. அதிலும் தமிழ் பேசும் மக்கள் என்று பார்த்தால் 19 ஆயிரத்திற்கு மேற்பட்டவர்கள் காணாமற் போகச் செய்யப்பட்டுள்ளார்கள். கடந்த ஆட்சிக் காலத்தில் காணாமற் போகச் செய்யப்பட்டவர்கள் தொடர்பில் ஓமந்தை முகாமிலும், செட்டிகுளம் முகாமிலும் பதிவுகள் இருந்தன.

2015ஆம் ஆண்டுக்குப்பின்னர் புதிய அரசாங்கம் வந்துள்ளது. புதிய பிரதமர், புதிய பாதுகாப்புச் செயலாளர் வந்து இரண்டு வருடங்கள் ஆகிவிட்டன. இன்னும் கூட இந்த காணாமற் போகச் செய்யப்பட்டவர்கள்




இருக்கின்றார்களா, இல்லையா என ஒழுங்கு முறையில் கூற முடியாது இருக்கின்றது.

2015 ஆம் ஆண்டு ஐ.நா. மனித உரிமை பேரவையில் இலங்கை அரசாங்கமும், ஐ.நாவும் இணைந்து ஒரு தீர்மானம் நிறைவேற்றியிருந்தன.

குறிப்பாகப் போர்க்காலத்தில் காணாமற்போனவர்கள் தொடர்பில் முறையான விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டும், பங்கரவாத தடைச்சட்டத்தை நீக்க வேண்டும், மக்களின் காணிகள் ஒப்படைக்கப்பட வேண்டும், இலங்கையின் இனப்பிரச்சினைக்கு நிரந்தரமான அரசியல் தீர்வு கொண்டு வரப்பட வேண்டும் என தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. இவற்றில் எதனையுமே இந்த அரசாங்கம்நடைமுறைப்படுத்தவில்லை.

ஒன்றரை வருடங்கள் கடந்தும் காணாமற்போனோர் தொடர்பான ஓர் அலுவலகத்தைத் திறக்க முடியாத நிலையில் அரசாங்கம் உள்ளது. காணாமற் போனோர் தொடர்பில் நியமிக்கப்பட்ட ஆணைக்குழுவின் அறிக்கையைக் கூட ஜனாதிபதியோ, பிரதமரோ, முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவே முழுமையாக நடைமுறைப்படுத்தமாட்டோம் எனக் கூறுகின்ற நிலைமைதான் இருக்கிறது.

இந்த நிலையில் இந்த மக்கள் ஒரு விரக்தியின் விளிம்பிற்குத் தள்ளப்பட்டுள்ளார்கள். 7 வருட போராட்டங்கள் மூலம் எதுவுமே நிறைவேறாத நிலையில்தான் இந்தச் சாகும் வரையிலான போராட்டத்தை முன்னெடுத்துள்ளார்கள்.

ஆட்சி மாற்றத்துக்காக இந்த நல்லாட்சி அரசாங்கத்துக்கும், கடந்த நாடாளுமன்ற மற்றும் மாகாணசபைத் தேர்தல்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் வாக்களித்த இம்மக்களது நியாயமான இந்த போராட்டத்துக்குப் பதில் வழங்க வேண்டிய பொறுப்பு அனைவருக்கும் இருக்கிறது.

குறிப்பாக ஐ.நா. மனித உரிமைகள் பேரவையும், இலங்கை அரசாங்கமும் இணைந்து எடுத்த தீர்மானத்தை நடைமுறைப்படுத்தும்படி வலியுறுத்த வேண்டிய பொறுப்பு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் ஐயாவுக்கும் இருக்கிறது.

ஆகவே, இந்தப் பொறுப்புக்களில் இருந்து நாங்கள் விலக முடியாது. இந்த நல்லாட்சி அரசாங்கத்தையும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பையும் நம்பி வாக்களித்த இம்மக்களுக்கு இந்த அரசாங்கம் வந்து இரண்டு வருடங்கள் கழிந்தும் அவர்கள் இருக்கின்றார்களா, இல்லையா என அரசாங்கத்துடன் பேசி ஒரு தீர்வை எடுத்துக் கொடுக்க முடியாத நிலையில்தான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இருக்கிறது.

ஆகவே, ஒரு பாரதூரமான நிலைமைக்கு இந்த மக்கள் தள்ளப்பட்டுள்ளார்கள். இவர்களுக்கு ஏதாவது நெருக்கடிகள், உயிராபத்துக்கள் ஏற்படுமாக இருந்தால், அதற்கான பொறுப்புக்களை அனைவரும் ஏற்க வேண்டியுள்ளது.

குறிப்பாக ஜனாதிபதி, பிரதமர், கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் உள்ளிட்ட நாங்கள் அனைவரும் பொறுப்புச் சொல்ல வேண்டியுள்ளது. இந்த அரசாங்கம் காணாமற்போனவர்கள் இருக்கின்றார்களா, இல்லையா எனக் கூற வேண்டும்.

மஹிந்தகாலத்தில்காணாமற்போனவர்கள் இல்லை என்றால் அவர்களுக்கு என்ன நடந்தது என்பது தொடர்பில் விசாரணை நடத்த வேண்டும். இதற்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்தொடர்ந்தும்அழுத்தம் கொடுக்க வேண்டும். நாம் அது தொடர்பில் தொடர்ந்தும் பேசுவோம். - என்றார். (உ-100)

# காணாமற் போனோரின் உறவுகள் மழைக்கு மத்தியிலும் வவுனியாவில் சாகும்வரை உண்ணாவிரதம் ஆரம்பித்தனர்












## திருமலையிலும் உண்ணாவிரதம்

கடத்தப்பட்டு, காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளைத் தேடிக் கண்டறியும் குடும்பங்கள் வவுனியாவில் ஆரம்பித்துள்ள சாகும் வரையிலான உண்ணாவிரதப் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து, திருகோணமலையிலும் உண்ணா விரதப் போராட்டம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

கிழக்கு ஆளுநர் அலுவலகத்துக்கு முன்பாக முன்னெடுக்கப்படும் இந்த உண்ணாவிரதப் போராட்டத்தில் கடத்தப்பட்டு, காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் கலந்து கொண்டுள்ளனர். (ஐ)

வவுனியா, ஜன.24

காணாமற் போனோரின் உறவுகள் சாகும் வரையிலான உண்ணாவிரதப் போராட்டத்தை நேற்று ஆரம்பித்துள்ளனர்.

கடத்தப்பட்டு, காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளைத் தேடிக்கண்டறியும் குடும்பங்களின் சங்கத்தின் ஏற்பாட்டில் இந்தப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

வவுனியா கந்தசுவாமி ஆலயம் முன்பாக ஒன்று கூடிய காணாமல் போனோரின் உறவுகள், அங்கு விசேட வழிபாட்டை மேற்கொண்டனர்.

பின்னர் அங்கிருந்து ஊர்வலமாகச் சென்று வவுனியா தபால் நிலையம் அருகில் உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்தனர்.

இந்த உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்கள் தெரிவித்துள்ளவை வருமாறு:-

நேற்று மழைக்கு மத்தியிலும் அது தொடர்ந்தது.

இலங்கை அரச படைகள் மற்றும் அரச துணை ஆயுத குழுக்களால் எமது உறவுகள் கடத்திச்செல்லப்பட்டமையைக் கண்கண்ட சாட்சிகளாக நாம் உள்ளோம்.

அரசால் நியமிக்கப்பட்ட பலதரப்பட்ட ஆணைக் குழுக்கள், உள்ளூர் மற்றும் சர்வதேச மனித உரிமை அமைப்புகள், ஜனாதிபதி, பிரதமர், எதிர்க்கட்சித் தலைவர், தமிழ் மக்களின் அரசியல் அதிகாரம் பெற்றுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, சர்வதேச சமூகம் என்று சகல தரப்புகளிடமும் முறையிட்டும் வருடங்கள் பல கடந்த நிலையிலும் எமது உறவினர்கள் விடுவிக்கப்படவில்லை. அதற்கான நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை.

இந்த நிலையில், சாத்வீக ரீதியாக சகல கவனவீர்ப்பு மற்றும் அழுத்த போராட்டங்களை நாம் நடத்தினோம். எமது உறவினர்கள் தொடர்பில் உரிய தீர்வு எமக்கு வழங்கப்படவில்லை. இதன் காரணமாகவே உரிய பதிலை வழங்குமாறு கோரி சாகும் வரையிலான உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளோம்.-எனத் தெரிவித்தனர்.

உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டவர்களுக்காக பந்தல் அமைக்கமுற்பட்ட சமயம் வீதி ஓரத்தில் பந்தல் அமைக்க முடியாது. அது போக்குவரத்துக்கு இடையூறாக அமையும் என்று கூறித் தடுத்து நிறுத்தினர்.

இதன் போது அந்த இடத்துக்கு வந்து சேர்ந்த வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்சிவசக்தி ஆனந்தன், வடமாகாண சபை உறுப்பினர் செ.மயூரன் ஆகியோர் பொலிஸாருடன்பேசி பந்தல் அமைக்க அனுமதி கோரினர்.

இந்த நிலையில் நகரசபை அனுமதி வழங்கினால் அமைக்க முடியும் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

அங்கு வந்த நகரசபைச் செயலாளரிடம் பந்தல் அமைக்க அனுமதி கோரப்பட்டிருந்தது. போக்குவரத்துக்கு இடையூறு இல்லாது பந்தல் அமைக்குமாறு அவர் அனுமதி வழங்கினார். இதனையடுத்து பந்தல் அமைக்கப்பட்டு உண்ணாவிரதம் ஆரம்பிக்கப்பட்டது.

இந்த உண்ணாவிரதப் போராட்டத்துக்கு ஓட்டோ உரிமையாளர்கள், சிவில் அமைப்புக்கள், பொதுமக்கள் எனப் பலரும் தமது ஆதரவை வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ-100-81)

# டெங்கு நோயாளர் எண்ணிக்கை வலிகாமம் பகுதியில் அதிகரிப்பு

வலிகாமம் பகுதியில் வலி. தெற்கு, வலி தென்மேற்கு ஆகிய பிரதேசங்களில் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்த வண்ணம் உள்ளது.

இருபது தினங்களுக்குள் 34 டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர்.

டெங்கு நோயின் பரம்பலைக கட்டுப்படுத்த முன்வந்துள்ள சுகாதாரப் பிரிவினர், டெங்கு நோயை ஏற்படுத்தக் கூடிய சூழலை வைத்திருந்த 10 பேருக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுத்துள்ளனர்.

யாழ். மாவட்டத்தில் பருவ மழை ஏமாற்றியபோதிலும் டெங்கு நோய்த்தாக்கம் குறிப்பிட்ட பிரதேசங்களில் அதிகரித்துள்ளது.

இதையடுத்து நோயாளர் அதிகமாக இனங்காணப்பட்ட இடங்களில் புகையூட்டல் நடவடிக்கையை மேற்கொண்டுள்ள சுகாதாரப் பகுதியினர், பொலிஸாருடன் இணைந்து மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் வீடுவீடாகச் சென்று பிரசாரத்திலும் சோதனை நடவடிக்கையிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

வலி.தெற்கு பிரதேசத்தில் உடுவில் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் இணுவில், மல்வம் ஆகிய இடங்களில் கடந்த 20 நாள்களுக்குள் 25 நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர். இதே போல் வலி.தென்மேற்கு பிரதேசத்தில் சண்டிலிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் சாவல்கட்டு, பண்டத்தரிப்பு, இளவாலை, சண்டிலிப்பாய் ஆகிய இடங்களில் 9 டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர்.

இதையடுத்து, நோயாளர் இனங்காணப்பட்ட கிராமங்களில் சுகாதாரப் பரிசோதகர் பொலிஸாருடன் இணைந்து வீடு வீடாகச் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர். டெங்கு நோயை ஏற்படுத்தக் கூடிய சூழலை வைத்திருந்த 10 பேருக்கு எதிராகச் சட்ட நடவடிக்கையும் எடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ-58)

## வெளிவாரி வணிகமாணி மாணவருக்கு!

யாழ்ப்பாணம், ஜன.24

யாழ்ப்பாணப் பல்கலைக் கழக, திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தால் வணிகமாணி (புதிய மற்றும் பழைய பாடத்திட்டம்) பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களின் நன்மை கருதி திசைமுகப்படுத்தும் நிகழ்வு (Orientation Programme) ஒவ்வொரு சனி மற்றும் ஞாயிற்றுக் கிழமைகளில் நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

இதற்கான நேர அட்டவணையை எமது இணையத்தள முகவரியில் (www.jfn.ac.lk/codl) பார்வையிடலாம்.

இவ்வாறு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (உ)

# மஹிந்தவுடன் மீண்டும் பேச்சு நடத்துவது சிந்தித்துச் செயற்பட வேண்டிய விடயம்!

## தென் மாகாண முதலமைச்சர் ஸான் விஜேலால் சில்வா

கொழும்பு, ஜன.24

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் மீண்டும் ஒரு தடவை பேச்சு நடத்துவது தொடர்பாக மீண்டுமொரு முறை சிந்திக்க வேண்டும். இது சிந்தித்துச் செயற்பட வேண்டிய விடயம் என்று தென் மாகாண முதலமைச்சர் ஸான் விஜேலால் சில்வா தெரிவித்துள்ளார்.

ஊடக சந்திப்பொன்றில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

மஹிந்த ராஜக்ஷவுடன் நேரடியாகப் பேச்சு நடத்த வேண்டும் என்று தான் நாம் எதிர்பார்த்துச் சென்றோம். ஆனால், அவர் வேறு தரப்பினரையும் அழைத்திருந்தார்.

அவர்களை அங்கு அழைத்தமைக்கான காரணம் என்ன என்று எனக்குத் தெரியாது.

நூற்றுக்கு நூறு வீதம் சாதகமான பிரதிபலன் கிடைக்கும் என்ற எதிர்பார்ப்புடன் நாம் செல்லவில்லை.

இருப்பினும், பாதகமாகசிந்திப்பவர்களும் நாம்அல்ல. இரண்டுக்கும் இடைப்பட்ட நிலைப்பாட்டுடனேயே அங்குசென்றோம்.

பொது எதிர்க்கட்சியுடன் நடத்திய பேச்சு முழுமையாக தோல்வியடைந்தது. அதனால், இரண்டாவது சுற்று பேச்சுக்குச் செல்வதா என்பது தொடர்பில் தான் மீண்டும் ஒருமுறை சிந்தித்துப் பார்க்க வேண்டும்.- என்றார். (ஐ)

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, editor@kalaikkathir.lk
தொலைநகல் (fax) : 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600


## யதார்த்தத்தைப் புரிவது அவசியம்

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை முழு நேர அரசியலிலிருந்து ஒதுக்கும்படியான வற்புறுத்தல் - அல்லது அழுத்தம் - பலம்மிக்க நாடுகள் இரண்டிலிருந்து வந்திருப்பதாக செய்திகள் வெளியாகியிருக்கின்றன.

இரண்டு நாடுகள் தரப்பிலும் சில இராஜதந்திரிகள், மஹிந்தவுக்கு மிக நெருக்கமானவர் ஒருவரைச் சந்தித்து அவர் மூலம் இந்த அழுத்தத்தைக் கொடுத்தனர் என்றும் கூறப்பட்டது.

வெளியே கசிந்திருக்கும் தகவல்கள், இந்தியாவும் அமெரிக்காவுமே அவை என்பதனைச் சுட்டுகின்றன. மஹிந்த ராஜபக்ஷவுக்கு நெருக்கமானவர் என்று கூறப்படுபவர் முன்னாள் அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் என்றும் அச்செய்திகள் கோடிகாட்டுகின்றன. பெரும்பாலும் இத்தகவல்கள் மறுக்கப்பட முடியாதவையே.

அந்த நாடுகள் அப்படி அழுத்தம் கொடுப்பதற்கும் காரணங்கள் உள்ளன. அந்த அழுத்தத்தைத் தெரியப்படுத்துவதற்கான தொடர்பாளராகப் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸை அவை தெரிவு செய்தமைக்கும் நியாயங்கள் உள்ளன.

மஹிந்த ராஜபக்ஷ 2015 ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டு தோற்கும்வரை, அவரது வெளிவிவகார அமைச்சராக இருந்தவர் பீரிஸ்தான். அதிகாரத்தில் மஹிந்த இருந்தபோது அவரது வெளிநாட்டுத் தரப்புக்களுடன் விடயங்களைக் கையாண்டவர் பீரிஸே. அது மட்டுமன்றி, சு.கவில் இன்னும் அங்கத்துவம் வகிக்கும் மஹிந்த ராஜபக்ஷவுக்காக, அந்தக் கட்சிக்கும் புறம்பாக ஒரு 'டம்மி' கட்சியைத் தொடங்கி இயக்கி வருபவரும் பீரிஸ்தான்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான சு.கவிலிருந்து வெளியேற வேண்டிய தேவை - நிர்ப்பந்தம் - மஹிந்தவுக்கு ஏற்படும்போது அவர் தொடர்ந்து அரசியலை முன்னெடுப்பதற்காக அந்த 'டம்மி' கட்சியைத் தயார் செய்து வைத்துக்கொண்டு காத்திருப்பவரும் பீரிஸ்தான்.

எனவேதான், மஹிந்தவை அரசியலைவிட்டு ஒதுங்கச் சொல்லும் அழுத்தத்தை - செய்தியை - மஹிந்தவுக்குத் தெரியப்படுத்துவதற்கும் தோதான பிரமுகராக பீரிஸைத் தேர்ந்தெடுத்தன இந்த இரு நாடுகளும் என்பதும் தவறாக இருக்க முடியாது.

இதேசமயம், பக்கத்து நாட்டின் புலனாய்வு அதிகாரி ஒருவரும் மஹிந்த ராஜபக்ஷவை ஒதுங்கச்சொல்லும் ஆலோசனையை நாசூக்காகத் தெரியப்படுத்தியமை பற்றிய தகவலும் கூட இப்போது கசிந்துள்ளது.

போதாக்குறைக்கு, கொழும்பில் உள்ள அமெரிக்கத் தூதுவரே வெளிப்படையாக இதே போன்ற கருத்தை கூட்டு எதிரணியினரிடம் கூறியிருக்கின்றார் என்றும் செய்திகள் வந்துள்ளன. அதுவும் மஹிந்த ராஜபக்ஷவின் இல்லத்தில், அவரது கூட்டு எதிரணிப் பிரமுகர்களுடன் தாம் நடத்திய சந்திப்பின்போதே அமெரிக்கத் தூதுவர் இந்தக் கருத்தை வெளியிட்டிருக்கின்றார்.

"மஹிந்த ராஜபக்ஷவை உங்கள் கூட்டு எதிரணியின் தலைவராக நீங்கள் ஏற்பதன் மூலம், உங்களுக்கு எந்த ஆதாயமும் கிட்டப்போவதில்லை." - என அமெரிக்கத் தூதுவர் வெளிப்படையாகவும் பட்டவர்த்தனமாகவும் எடுத்துரைத்தார் எனத் தெரிகின்றது.

இவை எல்லாம் மஹிந்தவை அரசியலில் இருந்து ஒதுங்க வைப்பதற்கான தேவையும், கட்டாயமும் அந்த நாடுகள் மற்றும் தரப்புகளுக்கு இருப்பதையே காட்டுகின்றன.

அந்த நாடுகளின் நிகழ்ச்சி நிரலில் சிக்குண்டதாலேயே, மஹிந்த ராஜபக்ஷ தாமே எதிர்பாராத விதத்தில் - தாம் தமக்கு வசதியும் சாதகமானதும் என்று கருதி முற்கூட்டியே நடத்திய - ஜனாதிபதித் தேர்தலில் அதிர்ச்சித் தோல்வியடைந்து வீட்டுக்கு நடையைக் கட்டவேண்யவரானார்.

மேற்படி இரு நாடுகள் மட்டுமல்ல, அவற்றுடன் சேர்ந்த ஐரோப்பிய நாடுகள் மற்றும் பிற சக்திகளின் விருப்பத்துக்குரிய தெரிவாக இருப்பது மைத்திரி - ரணில் கூட்டு அரசுதான்.

அதைக் குழப்பி, மஹிந்த ராஜபக்ஷ எங்கே மீண்டும் அதிகாரத்துக்கு வந்து விடுவாரோ என்ற பீதி, இந்த மேற்குலக இராஜதந்திர மட்டங்களில் இருக்கின்றது. அதனாலேயே இந்த அழுத்த வேலையை அவை ஆரம்பித்திருக்கின்றன.

மஹிந்தவின் மீள்வருகை தென்னிலங்கைக்கும் நல்லதோ, இல்லையோ - ஒட்டுமொத்த இலங்கையின் நலனுக்கும் நல்லதோ, இல்லையோ, மேற்படி மேற்குலக இராஜதந்திரத்தின் எதிர்பார்ப்புக்கும் நிகழ்ச்சி நிரலுக்கும் உகந்ததேயல்ல. மைத்திரி - ரணில் கூட்டு அரசைத் தக்க வைப்பதே அவற்றின் சர்வதேச இராஜதந்திர நிகழ்ச்சி நிரலுக்கு அமைவானது. எனவே, அதைக் காப்பாற்றுவதற்காக எந்த எல்லை வரையும் போக அவை தயங்க மாட்டா என்பதன் ஆரம்ப சமிக்ஞையே இந்த அழுத்தம்.

மைத்திரி - ரணில் கூட்டரசைக் காப்பாற்றுவதில் இந்தத் தரப்புக்களுக்கு உள்ள அதீத விருப்பை இப்போக்கு எடுத்துக் காட்டுகின்றது. ஆனால் நாங்களோ, யுத்தத்தின் இறுதியில் இடம்பெற்ற மனித உரிமை மீறல், யுத்தக் குற்றங்கள், மனிதாபிமான சட்ட மீறல்கள் ஆகியவை தொடர்பில் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்சிலில் இலங்கையும் சேர்ந்து நிறைவேற்றிய தீர்மானத்தின் சரத்துக்களை இலங்கை நடைமுறைப்படுத்தாமல் இழுத்தடித்தல், ஏதோ இந்த மேற்குலகு மைத்திரி - ரணில் கூட்டணியைக் குத்திக் கிளறி, இரண்டில் ஒன்று கண்டுவிடும் என்று, பேசிக் கொண்டும் - நம்பிக் கொண்டும் - இருக்கின்றோம்.

தமது சர்வதேச இராஜதந்திர மற்றும் பூகோள நலனுக்கு இலங்கையின் அதிகாரம் மைத்திரி - ரணில் போன்ற கூட்டிடம் இருப்பது உகந்தது என்று கருதும் மேற்குலகு , இயன்றவரை அந்த அரசைத் தக்க வைக்கவே இசைந்து கொடுக்குமேயின்றி, பாதிக்கப்பட்ட தரப்பான தமிழருக்கு நீதி கிடைப்பதற்காக அவ்விடயத்தில் உறுதியான நிலைப்பாடு எடுக்காது.

இந்த யதார்த்தத்தைப் புரிந்து கொள்வது நீதி தேடி அலையும் சிறுபான்மையினரான எமது தமிழருக்கு அவசியமானது.



# வரலாற்றில் இவ்வருடம் கூடிய நீர்த்திட்டங்கள் ஆரம்பிக்கப்படும்

## நகரத்திட்டமிடல் அமைச்சர் ஹக்கீம் தெரிவிப்பு

வரலாற்றில் ஆகக் கூடிய நீர்த் திட்டங்களை ஆரம்பிக்கும் வருடமாக இந்த வருடம் அமைய உள்ளது. நீர் வளத் துறையில் இந்த வருடத்தில் புரட்சி ஒன்று ஏற்படுத்தப்படும் என்று நகரத் திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

சிறுநீரக நோயால் பாதிக்கப்பட்டுள்ள பொது மக்களுக்கு நிவாரணம் வழங்கும் நோக்கமாக நீர் விநியோக சபை நீர் விநியோகத்திட்டங்களை ஆரம்பித்துள்ளது.

ஹேவாஹெட்ட பின்னகொல நீர்விநியோகத் திட்டத்தைப் பொதுமக்களிடம் கையளிக்கும் நிகழ்வில் அமைச்சர் கலந்துகொண்டு உரையாற்றினார். இதன் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

வரலாற்றில் ஆகக் கூடிய நீர்த் திட்டங்களை ஆரம்பிக்கும் வருடமாக இந்த வருடம் அமைய உள்ளது.

இதற்கமைவாக 300 மில்லியன் ரூபா செலவில் இந்த வருடத்தில் நீர் விநியோகத் திட்டங்கள் பல ஆரம்பிக்கப்பட்டுள்ளன. 2020 ஆம் ஆண்டளவில் இவை பொதுமக்களிடம் கையளிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.


குண்டசாலையில் ஹாரகம நீர்த் திட்டம் 23 பில்லியன் ரூபா செலவில் ஆரம்பிக்கப்படும். இதன் மூலம் இரண்டு இலட்சத்து 50 ஆயிரம் குடும்பங்கள் நன்மையடையவுள்ளன. இந்தத் திட்டத்துக்கு இந்திய அரசு கடனுதவி வழங்கியுள்ளது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் கோரிக்கைக்கு அமைய இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் பரிந்துரையின் அடிப்படையில் இந்தக் கடன் தொகைக்கான வட்டி வீதத்தைக் குறைக்க முடிந்துள்ளது.

சுமார் 4 இலட்சம் நீர்ப் பாவனையாளர்களுக்காக கண்டி வடக்கு நீர்த்திட்டம் எதிர்காலத்தில் ஆரம்பிக்கப்பட உள்ளது. இதற்காக 33 ஆயிரம் மில்லியன் ரூபா செலவிடப்படவுள்ளது. அனுராதபுரம், பொலன்னறுவை போன்ற மாவட்டங்களில் சுத்தமான குடிதண்ணீரை வழங்குவதற்கு இவ்வருடத்தில் துரிதமான பணிகள் ஆரம்பிக்கப்படும்.''-என்றார். (எ)

# ஊழல் மோசடிகளில் ஈடுபட்டோர் மீது மக்களே தீர்மானம் எடுக்க வேண்டும்

## ஜே.வி.பி.தலைவர் அனுரகுமார கூறுகிறார்



கொழும்பு, ஜன.24

ஊழல் மோசடிகளில் ஈடுபட்டவர்கள் தொடர்பில் மக்களே தீர்மானம் எடுக்க வேண்டுமென ஜே.வி.பி கட்சியின் தலைவர் அனுர குமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

மஹரகமவில் ஆரம்பிக்கப்பட்ட ஊக்குவிப்புச் சங்கத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் தமது உரையில் மேலும் தெரிவித்தவை வருமாறு;

இலங்கை சட்டங்களின் அடிப்படையில் பத்து ரூபாலஞ்சம் பெற்றுக் கொண்டவருக்கு எதிராகக் கூட நடவடிக்கை எடுக்கப்பட முடியும் என்ற போதிலும், கோடிக்கணக்கில் மோசடி செய்தவர்களுக்கு எதிராக எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

ஊழல் மோசடிகளில் ஈடுபட்டவர்களுக்கு எதிராக வழக்குத் தொடர்வதாகத் தெரிவித்து ஆட்சி பீடம்ஏறிய அரசுதற்போது யாருக்கு எதிராக வழக்குத் தொடர்வது யாருக்கு எதிராக வழக்குத் தொடரக்கூடாது என்று ஆய்வு செய்துவருகின்றது.

எனவே, மோசடிகளில் ஈடுபட்டவர்களுக்கு, பொலிஸ் நிதிக் குற்றப் புலனாய்வுப் பிரிவு, நீதித்துறை ஆகியன தண்டனை வழங்காவிடில், மக்களே தண்டனையை வழங்க வேண்டிய சூழ்நிலை உருவாகும்.

அலுவலகங்களிலிருந்து மோசடிகள் துடைத்தெறியப்படல் வேண்டும். இது, எதிர்வரும் 2020ஆம் ஆண்டளவில் இடம்பெறவுள்ள தேர்தலுக்கு முன்னர் மேற்கொள்ளப்படல் வேண்டும். எவ்வாறாயினும், அதற்கு முன்னரும் இதைச் செய்வதற்கு நாம் தயாராக உள்ளோம்.

அரசின் நடவடிக்கைகளால் நாடு பெரிய பொருளாதார நெருக்கடியை எதிர்நோக்கி வருகின்றது. மக்களின் பிரச்சினைகள் எவைக்கும் அரசுதீர்வு வழங்கவில்லை.

2020ஆம் ஆண்டுக்கு முன்னர் சரியான வாய்ப்பொன்று கிடைக்குமாயின் தற்போது ஆட்சியிலுள்ள அரசைக் கவிழ்ப்பதற்குத் தயாராக உள்ளோம்.- என்றார். (எ)

### நாளை

25.01.2017
புதன்கிழமை

நட்சத்திரம் : மூலம் மு.இ 7.48 வரை
திதி : திரயோதசி பி.இ. 4.58 வரை

சுபநேரம் : 5.06 – 6.38 வரை
இராகுகாலம் : 12.36 – 2.06 வரை

## ஜனாதிபதியின் முக்கிய முடிவுகள் இவ் வாரத்தில் வெளியாகும் - ராஜித

மக்களுக்கு நன்மைபயக்கும் வகையிலான தீர்மானங்கள் சிலவற்றை, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, இந்த வாரம் அறிவிப்பார் என்று, சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

களுத்துறை மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற வைபவமொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இந்த விடயத்தைத் தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் தெரிவித்தவை வருமாறு:-

இரத்தப் பரிசோதனை மற்றும் ஏனைய பரிசோதனைகளை தனியார் பிரிவின் ஊடாகச் செய்ய முடியாது எனன்று ஜனவரி முதலாம் திகதி முதல் தடை விதித்தேன். அது கொழும்பு தேசிய வைத்திய சாலைக்கு மட்டுமல்ல, நாடளாவிய ரீதியில் உள்ள சகல வைத்தியசாலைகளிலும் நடைமுறைப்படுத்தப்படும்.

இரத்தப் பரிசோதனைகள், கொழும்பு தேசிய வைத்தியசாலையில் மட்டும் கடந்த சில தினங்களில் மட்டும் 50 சதவீதத்தால் அதிகரித்துள்ளது.- என்றார். (ஐ)

## நிதி அமைச்சின் சந்திப்புகளில் மகேந்திரனைத் தவிருங்கள்!

### ஊழல் தடுப்பு முன்னணி ஜனாதிபதிக்குக் கடிதம்

கொழும்பு, ஜன.24

மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜுன் மகேந்திரன், தற்போது நிதி அமைச்சின் ஆலோசகராகப் பணியாற்றி வருகின்றார் என்று ஊழல் தடுப்பு முன்னணி குற்றம் சுமத்தியுள்ளது.

நிதி அமைச்சின் சந்திப்புக்களில் மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜுன் மகேந்திரன் பங்குப்பற்றுவதை தடுக்கக் கோரி ஊழல் தடுப்பு முன்னணி, ஜனாதிபதிக்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளது.

அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

மத்திய வங்கி பிணை முறி மோசடி தொடர்பில் விசாரணைகள் மேற்கொள்ள புதிய ஆணைக்குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது. அதை நாம் வரவேற்கிறோம்.

மத்திய வங்கிப் பிணை முறி மோசடி தொடர்பில் குற்றம் சுமத்தப்பட்டுள்ள அர்ஜுன் மகேந்திரன், எவ்வாறு நிதி அமைச்சின் ஆலோசகராகப் பணியாற்றமுடியும்.

அர்ஜுன் மகேந்திரன் தற்போதைய மத்திய வங்கி ஆளுநர் இந்திரஜித் குமாரசுவாமி உள்ளிட்ட பலருடன் நிதி அமைச்சின் கூட்டங்களில் ஒவ்வொரு செவ்வாய்க்கிழமை மற்றும் வியாழக்கிழமைகளில் கலந்துக் கொள்கின்றார். இந்த விடயம் தொடர்பில் விரைவில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட வேண்டும்.- என்றுள்ளது.

ஊழல் தடுப்பு முன்னணி, ஜனாதிபதிக்கு நேற்று இந்தக் கடிதத்தை அனுப்பி வைத்துள்ளது. (ஐ)

## இல்ல மெய்வன்மை போட்டிகள்

கொடிகாமம், ஜன.24

கச்சாய் அரசினர் தமிழ்க் கலவன் வித்தியாலய இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று செவ்வாய்க் கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு வித்தியாலய மைதானத்தில் அதிபர் சா. குலசிங்கம் தலைமையில் நடைபெறும்.

இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக மருத்துவ பீட சமுதாயத்துறையைச் சேர்ந்த யோசேப்பின் திருமகள் சிவசங்கரும் சிறப்பு விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய உடற்கல்வி பிரதிக் கல்விப் பணிப்பாளர் பிரதீபா கிருஷ்ணபிள்ளையும் கலந்து கொள்வர். (ச)

* * *

முல்லைத்தீவு,ஜன.24

முல்லைத்தீவு மகா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி நாளை புதன்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு வித்தியாலய மைதானத்தில் அதிபர் த.யோகானந்தராசா தலைமையில் நடைபெறும்.

பிரதம விருந்தினராக வடக்கு மாகாணசபை உறுப்பினர் து.ரவிகரன் கலந்து கொள்வார்.

* * *

சாவகச்சேரி, ஜன.24

மட்டுவில் தமிழ்க்கலவன் வித்தியாலய இல்ல மெய்வன்மைப் போட்டி நாளைமறு தினம் வியாழக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு வித்தியாலய மைதானத்தில் அதிபர் சி.சுந்தரலிங்கம் தலைமையில் நடைபெறும்.

முதன்மை விருந்தினராகத் தென்மராட்சி கல்வி வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் சி.சிவநாதனும், சிறப்பு விருந்தினராக வித்தியாலயத்துக்கான மைதானத்தை அன்பளிப்பாக வழங்கிய பழைய மாணவர்களான கு.ராதாகிருஷ்ணன் தம்பதியினரும் கலந்து கொள்வர்.

## யாழ். மாவட்ட செயலகத்தில் வெளிவிவகார அமைச்சின் கோன்சியூலர் அலுவலகம்


யாழ். மாவட்டச் செயலகத்தில் அமைக்கப்பட்டுள்ள வெளிவிவகார அமைச்சின் கொன்சியூலர் அலுவலகம் நாளை மறுதினம் 26 ஆம் திகதி வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீரவால் திறந்து வைக்கப்படவுள்ளது.

வட பகுதி மக்கள் வெளிவிவகார அமைச்சின் கொன்சியூலர் பிரிவின் சேவையைப் பெற்றுக் கொள்வதற்கு இதுவரை காலமும் கொழும்புக்குச் செல்ல வேண்டிய நிலைமை காணப்பட்டது.

கடந்த ஆண்டு நல்லூர் திருவிழா காலத்தின் போது வெளிவிவகார அமைச்சின் கொன்சியூலர் பிரிவின் நடமாடும் சேவை நடத்தப்பட்டது. இதன்போது, வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், கொன்சியூலர் பிரிவு இங்கு ஆரம்பிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை முன் வைத்திருந்தார்.

இந்த நிலையில் புதிய அலுவலகம் நாளை மறுதினம் 26 ஆம் திகதி வெளிவிவகார அமைச்சர் மங்களசமரவீரவால் திறந்து வைக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## சமஷ்டிக்குத் தடையாக இருந்தமையே விமல் சிறைக்குச் செல்லக் காரணம்



கொழும்பு, ஜன.24

சமஷ்டி அரசியல் அமைப்பை உருவாக்குவதற்குப் பெரும் தடையாக இருந்த காரணத்தினாலேயே விமல் வீரவன்ஸ சிறையில் அடைக்கப்பட்டுள்ளார் என்று நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற தேசிய சுதந்திர முன்னணியின் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

மேற்குலகுக்கு அடிமைப்பட்ட அரசைக் கவிழ்த்து வீட்டுக்கு அனுப்புவதே சிறையில் அடைக்கப்பட்டுள்ள விமல் வீரவன்ஸவுக்குச் செய்யக்கூடிய கைம்மாறாகும்.

இதற்காக மூன்றாவது விடுதலைப் போராட்டத்தை நடத்த வேண்டியுள்ளது. - என்றார்.

இதேவேளை, சமஷ்டி அரசியல் முறைமை ஒன்றை உருவாக்குவதற்கு எதிராக ஒன்றிணைந்த எதிர்க்கட்சி முழு வீச்சுடன் செயற்படும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் தினேஷ் குணவர்தன இந்த நிகழ்வின் போது குறிப்பிட்டார். (ஐ)

## காந்தியடிகளின் சிரார்த்த தின நிகழ்வு

யாழ்ப்பாணம்,ஜன.24

அகில இலங்கை காந்தி சேவா சங்கத்தின் ஏற்பாட்டில் அண்ணல் காந்தியடிகளின் 69 ஆவது சிரார்த்ததின நிகழ்வு எதிர்வரும் 30 ஆம் திகதி திங்கட்கிழமை யாழ்ப்பாணத்தில் நடைபெறும்.

அன்றைய தினம் முற்பகல் 10 மணிக்கு யாழ்.போதனா வைத்தியசாலைக்கு முன்னால் உள்ள மகாத்மா காந்தியடிகளின் திருவுருவச் சிலையடியில் சங்கத்தின் தலைவரும் யாழ். பல்கலைக்கழக மெய்யியல்துறை விரிவுரையாளருமான ந.சிவகரன் தலைமையில் நிகழ்வு இடம்பெறும்.

மௌன வணக்கம், அடிகளாரின் திருவுருவச் சிலைக்கு மலர்மாலை அணிவித்து மரியாதை செலுத்துதல். மலரஞ்சலி, ரகுபதிராகவ பாடல் இசைத்தல், நினைவுரை ஆகிய நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன. இந்நிகழ்வில் காந்தி பக்தர்களும், அபிமானிகளும், பொது மக்களும் கலந்து சிறப்பிக்க முடியும் என்று சங்கத்தின் பொதுச் செயலாளர் எம்.ஷாந்தன் சத்தியகீர்த்தி தெரிவித்துள்ளார். (இ)

## மோசடி தொடர்பான விவாதம் நாடாளுமன்றில் வலுவிழக்கும்

### பந்துல குணவர்த்தன எம்.பி.கூறுகிறார்



கொழும்பு, ஜன.24

இலங்கை மத்திய வங்கியின் பிணை முறிப்பத்திர மோசடி தொடர்பில் விசாரணை நடத்த ஜனாதிபதி விசேட ஆணைக் குழுவை நியமிப்பதன் மூலம் நாளைய தினம் (இன்று) நாடாளுமன்றத்தில் நடைபெறும் மோசடி தொடர்பான விவாதம் வலுவற்றதாகிவிடும் என்று கூட்டு எதிர்க்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்தன நேற்றுத் தெரிவித்துள்ளார்.

மத்திய வங்கியின் பிணை முறிப் பத்திர விவகாரம் தொடர்பாக விசாரணை நடத்த ஜனாதிபதி விசேட ஆணைக்குழுவை நியமித்துள்ளமை தொடர்பாகக் கருத்து வெளியிடும் போதே பந்துல குணவர்தன இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

டி.யூ .குணசேகரவின் கோப் அறிக்கை வெளியிடப்படுவதற்கு முன்னர் நாடாளுமன்றத்தைக் கலைத்தமை போல், ஜனாதிபதி நாளைய தினம் (இன்று) நாடாளுமன்றத்தில் விவாதம் நடைபெறவுள்ள நிலையில், விசேட ஜனாதிபதி ஆணைக் குழுவை நியமித்துள்ளார் என்று அவர் மேலும் குறிப்பிட்டார்.

இதேவேளை, பிணை முறிப்பத்திர விவகாரம் தொடர்பில் கோப் குழு அறிக்கை வெளியிட்டுள்ள நிலையில், ஜனாதிபதி ஆணைக்குழு அவசியமற்றது என்று மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் நளின் ஜயதிஸ்ஸ குறிப்பிட்டுள்ளார். (ஐ)

## பிணைமுறி தொடர்பான விசாரணைக்கு நியமனமாகும் ஜனாதிபதி ஆணைக்குழு

கொழும்பு, ஜன.24

இலங்கை மத்திய வங்கியின் பிணைமுறி கொடுக்கல் வாங்கல் பற்றி எழுந்துள்ள குற்றச்சாட்டுக்கள் தொடர்பாகப் புலனாய்வு மற்றும் விசாரணை மேற்கொண்டும் அதற்குரிய சட்ட நடவடிக்கைகளை எடுப்பதற்காக ஜனாதிபதி விசேட விசாரணை ஆணைக் குழுவை நியமிப்பதற்கு ஜனாதிபதி நடவடிக்கை எடுத்து வருகிறார்.

இந்த விடயம் தொடர்பாகச் சட்டமா அதிபருக்கு ஆலோசனை வழங்கப் பட்டுள்ளது.

உயர் நீதிமன்ற நீதியரசர், மேல் நீதிமன்ற நீதியரசர் மற்றும் கணக்காய்வு நிபுணர் ஆகியோரை உள்ளடக்கிய மூன்று பேர் அடங்கிய ஜனாதிபதி ஆணைக் குழுவை நியமிப்பதற்கான வர்த்தமானி அறிவித்தல் இந்த வாரம் வெளியிடப்படவுள்ளது.

இந்த ஆணைக்குழுவின் விதந்துரைகளுடனான அறிக்கை மூன்று மாதத்தினுள் நிறைவுசெய்யப்படும் என்றும் ஆணைக் குழுவின் செயற்பாடுகள் வெற்றி பெறுவதற்குத் தேவையான ஒத்துழைப்பை வழங்குமாறும் ஜனாதிபதி சம்பந்தப்பட்ட தரப்பினரிடம் கோரிக்கை விடுத்துள்ளார். (ஐ)

## கணினி வன்பொருள் கற்கை நெறிக்கு விண்ணப்பம்

தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகார சபையின் கீழ் கணினி வன்பொருள் கற்கை ஒரு வருடகால இலவசப் பயிற்சி நெறிக்கு யாழ்ப்பாணம் பயிற்சி நிலையத்துக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்தாரிக.பொ.த சாதாரண தரத்தில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். விண்ணப்ப முடிவுத் திகதியன்று 25 வயதுக்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும்.

தகுதி உடையவர்கள் முழுப்பெயர், முகவரி மற்றும் பிறந்த திகதி, தேசிய அடையாள அட்டை, கல்வித்தகைமைகள், தொலைபேசி இலக்கம் ஆகியவற்றைக் கொண்ட சுயவிபரக் கோவையை மாவட்டமுகாமையாளர், இல, 44, சோமசுந்தரம் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு எதிர் வரும் 10ஆம் திகதிக்கு முன்னர் அனுப்ப வேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

முன்னாள் எம்.பி. பரராஜசிங்கம் படுகொலை:

## பிள்ளையான் உட்பட நால்வருக்கு மறியல் பெப்.6 வரை நீடிப்பு



மட்டக்களப்பு,ஜன.24

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் படுகொலை செய்யப்பட்டமை தொடர்பில் கைதுசெய்யப்பட்ட 4 பேரையும் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 6 ஆம் திகதிவரை விளக்கமறியல் வைக்குமாறு மட்டக்களப்பு மாவட்ட நீதிவானும் நீதிவான் நீதிமன்ற மேலதிக நீதிபதியுமான எம்.பி.முகைதீன் நேற்று திங்கட்கிழமை உத்தரவிட்டார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் 2005 ஆம் ஆண்டு மட்டக்களப்பு புனித மரியாள் இணைப் பேராலயத்தில் நடைபெற்ற நத்தார் நள்ளிரவு ஆராதனையில் கலந்துகொண்டிருந்தபோது சுட்டுக் கொல்லப்பட்டிருந்தார். இந்தக் கொலைச் சம்பவம் தொடர்பில் சந்தேக நபரான சிவநேசதுரை சந்திரகாந்தன் (பிள்ளையான்) உட்பட 4 பேர் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

கிழக்கு மாகாணத்தின் முன்னாள் முதலமைச்சரும் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சித் தலைவருமான சிவநேசதுரை சந்திரகாந்தன், தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் முன்னாள் தேசிய அமைப்பாளரும் முன்னாள் மாகாண சபை உறுப்பினருமான பிரதீப் மாஸ்டர் என அழைக்கப்படும் எட்வின் சில்வா மற்றும் கிருஷ்ணானந்தராஜா, கஜன் மாமா எனப்படும் கனகநாயகம், இராணுவப் புலனாய்வு உத்தியோகத்தர் எம்.கலீல் ஆகியோருக்கே விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது. (ச)

## கிழக்கு மாகாணம் நிரந்தரமாக பிரியுமாயின் தமிழ் இனத்தைக் காப்பாற்றுவது எம் கடமை

கூட்டமைப்பின் மாகாண உறுப்பினர் கலையரசன் தெரிவிப்பு



பெரியநீலாவணை,ஜன.24

முஸ்லிம் மக்களிடையே வடக்கு,கிழக்கு தொடர்பாக மாறுபட்ட கருத்துக்கள் முன்வைக்கப்படுகின்றன. வடக்கு, கிழக்கு மாகாணங்கள் இணைவில் குழப்பம் ஏற்பட்டு கிழக்கு மாகாணம் நிரந்தரமாகத் தனியாகப் பிரியுமாக இருந்தால் தமிழ் இனத்தைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு எங்களிடம் இருக்கிறது. அதற்குரிய கைங்கரியங்களை நாங்கள் மேற்கொள்வோம்.

-இவ்வாறு கிழக்கு மாகாணசபை உறுப்பினர் தவராசா கலையரசன் தெரிவித்தார்.

அம்பாறை பெரிய நீலாவணையில் மக்கள் சகவாழ்வு அமைப்பும், சனசமூக நிலையமும் இணைந்து ஏற்பாடு செய்திருந்த புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களைப் பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில்கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

கிழக்கு மாகாணத்தில் 11 ஆசனங்களை வைத்துக் கொண்டு இனங்களுக்கிடையே நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்காக முஸ்லிம் முதலமைச்சரை நியமிப்பதில் ஒத்துழைப்பு வழங்கியிருந்தோம்.

அவ்வாறான ஒத்துழைப்பை நாங்கள் வழங்கிய போதும் இந்த மாகாணத்தைப் பொறுத்தவரையில் சமத்துவம் பேணப்படவில்லை என்ற உண்மையையும் கூறியே ஆக வேண்டும். இதுதான் தமிழர்களது இன்றைய நிலை.

எதிர்காலத்தில் தமிழ்த் தேசிய அரசியலை முன்னெடுக்க வருபவர்கள் முழு நேர அரசியல் பணி செய்பவர்களை அரசியல் தலைவர்களாக்க வேண்டும். அதாவது பிரதேச சபை, மாகாண சபை, நாடாளுமன்றத் தேர்தல் என எதுவாக இருந்தாலும் சரி, எமது மக்களின் பணிகளைச் செவ்வனே செய்யக்கூடியவர்களைத் தெரிவு செய்ய வேண்டியது உங்கள் ஒவ்வொருவரினதும் தலையாய கடமையாகும்.

அம்பாறை மாவட்டத்தில் எல்லைக் கிராமமாக இருக்கும் இந்த பெரிய நீலாவணை கிராமம் யுத்த சூழ்நிலைகளின் போது பல இன்னல்களுக்கு முகங்கொடுத்து பல உயிர்களை இழந்து நிற்கும் ஒரு கிராமமாகும். எமது ஒட்டுமொத்த தமிழ் இனமும் ஒரு நிரந்தர விடுதலையைப் பெற வேண்டும் என்பதற்காகத்தான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புச் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றது.-என்றார். (ச)

## கஞ்சாவுடன் தம்பதி கைது!

திருகோணமலை,ஜன.24

திருகோணமலை அலஸ் தோட்டம் பகுதியில் கஞ்சா வைத்திருந்த குற்றச்சாட்டின் பேரில் 3 பேரை நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை பொலிஸார் கைது செய்தனர்.

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பைச் சேர்ந்த 38 வயதுடைய கணவர், 29 வயதுடைய மனைவி மற்றும் திருகோணமலை கும்புறுப்பிட்டியைச் சேர்ந்த 18 வயதுடைய இளைஞன் ஆகியோரே கைதுசெய்யப்பட்டவர்கள் ஆவர்.

கணவன், மனைவி ஆகிய இருவரும் கஞ்சாவை விற்பனை செய்ய முயன்றனர் எனப் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலை அடுத்து, இவர்கள் தங்கியிருந்த இடத்தைப் பொலிஸார் சுற்றிவளைத்தனர். இதனை அடுத்தே இவர்களிடம் ஒவ்வொரு கிலோகிராம் கஞ்சாவாகப் பொதி செய்யப்பட்ட இரண்டு பொதிகளைப் பொலிஸார் கைப்பற்றினர்.

இவர்கள் இருவரிடமும் மேற்கொள்ளப்பட்ட விசாரணையின்போது, இளைஞர் ஒருவரிடமும் 50 கிராம் கஞ்சா இருந்தமையும் தெரியவந்தது. (ச)

## சட்டவிரோத மின்சாரம் இருவர் கைது!

அக்கரைப்பற்று,ஜன.24

அம்பாறை அக்கரைப்பற்றுப் பகுதியில் சட்டவிரோதமாக மின்சாரம் பெற்ற இருவரை நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை பொலிஸார் கைதுசெய்தனர்.

மேற்படி பிரதேசங்களில் இலங்கை மின்சார சபையின் கொழும்பு தலைமைக் காரியாலய புலனாய்வுப் பிரிவினரும், பொலிஸாரும் இணைந்து சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டனர். இதன் போது இவர்களின் வீடுகளில் பொருத்தப்பட்டுள்ள மின்மானிகளில் குளறுபடி செய்து சட்டவிரோதமாக மின்சாரம் பெற்றமை தெரியவந்துள்ளது.

இதனை அடுத்தே இவர்கள் கைது செய்யப்பட்டனர். (ச)

புத்தர் சிலை உடைப்புச் சம்பவங்கள்:

## எட்டு விசேட பொலிஸ் குழுக்கள் களத்தில் இறங்கி விசாரணை

திருகோணமலை,ஜன.24

திருகோணமலை மாவட்டத்தில் சில இடங்களில் புத்தர் சிலைகள் உடைக்கப்பட்ட சம்பவங்களுடன் தொடர்புடைய நபர்களைக் கைதுசெய்யும் நோக்கில், எட்டு விசேட பொலிஸ் குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன என பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தக் குழுக்களில் நான்கு குழுக்கள் சிவில் உடைகளிலும் ஏனைய நான்கு குழுக்கள் சீருடைகளிலும் செயற்படும் வண்ணம் நியமிக்கப்பட்டு, விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன எனத் தெரிவிக்கப்படுகிறது.

கிழக்குப் பிராந்தியத்துக்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் சுமித் எதிரிசிங்கவின் ஆலோசனைக்கு அமைய திருகோணமலைக்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ் மா அதிபர் நிமால் பெரேராவின் மேற்பார்வையில், இவ் விசேட பொலிஸ் குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன.

அண்மைக்காலங்களில், திருகோணமலை மாவட்டத்தின் சில இடங்களில் ஆங்காங்கே புத்தர் சிலைகள் உடைக்கப்பட்டிருந்தன. இந்தச் சம்பவங்களுடன் தொடர்புடையவர்களைக் கைது செய்யும் நோக்கிலே இந்தப் பொலிஸ் குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளதுடன், சந்தேகநபர்கள் விரைவில் கைதுசெய்யப்படுவார்கள் எனவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ச)

## புகை விசிறும் கருவிகள் அன்பளிப்பு

ஏறாவூர்,ஜன.24

கிழக்கு மாகாணத்தில் டெங்கு நுளம்புகளை விரட்டியடிக்கும் முகமாக உள்ளூராட்சி மன்றங்களுக்குப் புகை விசிறும் கருவிகள் வழங்கப்பட்டு வருகின்றன. இதன் ஒரு கட்டமாக நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை மட்டக்களப்பு மாவட்டம், ஏறாவூர் நகர சபை மற்றும் ஏறாவூர்ப்பற்று பிரதேசசபை ஆகியவற்றுக்கு கிழக்கு மாகாண முதலமைச்சர் செய்னுலாப்தீன் நஸீர் அஹமட் தலா இரண்டு புகை விசிறும் கருவிகளை வழங்கினார்.

வழங்கப்பட்டுள்ள ஒவ்வொரு புகை விசிறும் கருவிகளும் சுமார் 4 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதி கொண்டனவாகும். (ச)

## 4 ஆயிரம் பேருக்கு கிழக்கில் வேலைவாய்ப்பு

எதிர்வரும் ஏப்ரல் மாதத்துக்குள் கிழக்கு மாகாணத்தில் 4 ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்பு வழங்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது என்று முதலமைச்சர் நஸீர் அஹமட் நேற்றுத் தெரிவித்தார்.

இந்த மாகாணத்திலுள்ள அரசதிணைக்களங்கள் மற்றும் அரசநிறுவனங்களில் 3 ஆயிரம் வெற்றிடங்களும், ஆசிரியர்களுக்கான 5 ஆயிரம் வெற்றிடங்களும் காணப்படுகின்றன. இந்த வெற்றிடங்கள் நிரப்பப்பட உள்ளன. மேலும், பாடசாலைகளில் காவலாளிகள், நூலக உதவியாளர்கள் மற்றும் காரியாலய உதவியாளர்கள் ஆகியவற்றுக்கு ஆயிரம் வெற்றிடங்கள் நிலவுகின்றன என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச)

## ஆசிரியர் போட்டிப் பரீட்சையின் வெட்டுப்புள்ளியை குறைக்குக!

கிழக்கு மாகாணசபை அமர்வில் பிரேரணை

மட்டக்களப்பு,ஜன.24

கிழக்கு மாகாணத்திலுள்ள பட்டதாரி ஆசிரியர்களை நியமனம் செய்வதற்கான போட்டிப் பரீட்சையின் வெட்டுப்புள்ளியை குறைக்குமாறு கோரி இன்று செவ்வாய்க்கிழமை நடைபெறும் கிழக்கு மாகாணசபை அமர்வில் பிரேரணை ஒன்று சமர்ப்பிக்கப்பட உள்ளது என்று கிழக்கு மாகாண சபை உறுப்பினர் ஆர்.எம். அன்வர் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

கிழக்கு மாகாணத்திலுள்ள பட்டதாரி ஆசிரியர்களை இங்குள்ள பாடசாலைகளில் காணப்படும் ஆயிரத்து 134 ஆசிரியர் வெற்றிடங்களுக்கு நியமிப்பதற்கான போட்டிப்பரீட்சைக்கு, கிழக்கு மாகாண பொது சேவைகள் ஆணைக்குழுவால் கடந்த வருடம் ஓகஸ்ட் முதலாம் திகதி விண்ணப்பங்கள் கோரப்பட்டன, இந்தப் பரீட்சைக்குச் சுமார் 5 ஆயிரத்து 701 பட்டதாரிகள் தோற்றினர். இதில் 40 புள்ளிகளுக்கு மேல் பெற்ற சுமார் 305 ஆசிரியர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

இதனால், இந்த மாகாணத்தில் காணப்படும் வெற்றிடங்களுக்கு அமைவாக ஏனைய மாகாணங்களான வடக்கு, வடமத்திய மற்றும் வடமேல் மாகாணங்களில் 30 அல்லது 35 ஆக வெட்டுப்புள்ளியைக் குறைத்து பட்டதாரி ஆசிரியர்களை உள்ளீர்த்தால், அதன் மூலம் கிழக்கு மாகாண பாடசாலைகளில் இன்னும் அதிகமான பட்டதாரி ஆசிரியர்களை உள்ளீர்க்க முடியும்.-என்றார். (ச)


மணமக்கள்

☎0114320017- 8

அலுவலக நேரம்
திங் - வெள் : 08.30 a.m - 05.00 p.m
சனி : 08.30 a.m - 02.00 pm

| மணமகன் விபரம் | மணமகள் விபரம் |
|---|---|
| 7149 \| மு<br>1984 \| கொழும்புத்துறை \| 158 cm<br>Technician Officer \| இலங்கை<br>திருவோணம்(மகரம்) \| செ: 12 | 7071\| ந<br>1987 \| கொழும்புத்துறை\| 157 cm<br>Beautician \| இலங்கை<br>சுவாதி (துலாம்) \| கி.பா: 34\| செவ்: 1 |
| 3723 \| வே<br>1981 \| பருத்தித்துறை \| 165 cm<br>DS officer \|இலங்கை<br>பூசம்(கடகம்) \|கி.பா: 60\|சூரி செ: 08 | 6578 \| வி<br>1987\| யாழ்நகர்<br>Studying ( CIMA)\| இலங்கை\| செவ்:4<br>உத்திரட்டாதி (மீனம்) \| கி.பா: 24 |
| 5460 \| வே<br>1980\| கொக்குவில் \| 180 cm<br>Health Inspector \| இலங்கை<br>சுவாதி (துலாம்) \|கி.பா: 18\|செவ்:12 | 6948 \| வே<br>1987\| கோண்டாவில் \| 170 cm<br>Business \|இலங்கை<br>பூராடம் (தனுசு) \| கி.பா: 42 |
| 7253 \| வே<br>1980\| அளவெட்டி \| 165 cm<br>Doctor \| இலங்கை<br>ரேவதி (மீனம்) \|கி.பா: 02 | 4175 \| வி<br>1987\| சங்கானை \| 164 cm<br>Doctor \| இலங்கை<br>விசாகம் (துலாம்) \| கி.பா: 29 |
| 3471 \| வே<br>1980 \| சுன்னாகம் \| 173 cm<br>Accountant \| இலங்கை<br>உத்தரம் (கன்னி) | 6801 \| வே<br>1978\| காரைநகர் \| 162 cm<br>Music Teacher \| இலங்கை<br>பூசம்(கடகம்) \|கி.பா: 55 |

அருந்ததி

www.arunthathee.com | 0777164524

480 /2c, காலி வீதி, வெள்ளவத்தை 011 406 32 82 | 20, கே.கே.எஸ் வீதி, கொக்குவில் 021 492 75 27

(C-172)

# ரோம் பிரகடனத்தில் இலங்கை கையெழுத்திட வேண்டும்; வலியுறுத்துகிறார் ஐ.நா. சிறப்பு அறிக்கையாளர் ஜுவான்!



கொழும்பு, ஜன.24

பயங்கரவாதத் தடைச்சட்டத்தை உடனடியாக இல்லாதொழிக்க வேண்டும் என்றும் சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் தொடர்பான ரோம் பிரகடனத்தில் கையெழுத்திட வேண்டும் என்றும், இலங்கை அரசாங்கத்திடம், ஐ.நாவின் சிறப்பு அறிக்கையாளர் ஜுவான் மென்டஸ் வலியுறுத்தியுள்ளார்.

சித்திரவதைகள் மற்றும் ஏனைய கொடூரமான, மனிதாபிமானமற்ற அல்லது இழிவுபடுத்தும் நடவடிக்கைகள், தண்டனைகள் தொடர்பான ஐ.நா. சிறப்பு அறிக்கையாளரான, ஜுவான் மென்டஸ் இலங்கைக்கு மேற்கொண்ட பயணம் தொடர்பான அறிக்கையை வெளியிட்டுள்ளார்.

2016 ஏப்ரல் 29ஆம் திகதி தொடக்கம், மே 7ஆம் திகதி வரை இலங்கையில் மேற்கொண்ட பயணத்தின் போது கண்டறியப்பட்ட விடயங்களை உள்ளடக்கியதாக அந்த அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கை எதிர்வரும், மார்ச் மாதம் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 34 ஆவது அமர்வில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும், குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு:-

பயங்கரவாத தடைச்சட்டத்தை இலங்கை உடனடியாக இல்லாமல் ஒழிக்க வேண்டும்.

பயங்கரவாதத் தடைச்சட்டத்துக்குப் பதிலாக வரையப்படும் புதிய சட்டத்தில், சந்தேக நபர் ஒருவர் கைதுசெய்யப்பட்ட பின்னர், சட்டவாளரை சந்திக்க அனுமதிக்க முன்னர் வாக்குமூலம் பெற வழிவகுக்கும் முன்மொழிவும் விலக்கிக் கொள்ளப்பட வேண்டும்.

சித்திரவதை குற்றச்சாட்டுகள் தொடர்பாக விசாரணை செய்து வழக்குத் தொடுப்பதற்கான பணியகம் ஒன்று உருவாக்கப்பட வேண்டும்.

குற்றமிழைத்தவர்கள் தப்பித்துக் கொள்ளும் கடந்தகால கலாசாரத்தில் இருந்து விடுபட்டு, இந்தப் பணியகம் சுதந்திரமாகச் செயற்படுவதை சட்டமா அதிபர் பணியகம் உறுதிப்படுத்த வேண்டும்.

தேசிய பாதுகாப்புப் படைகளில் அங்கம் வகிப்பவர்களை விலக்கி, சாட்சிகளுக்குப் பாதுகாப்பு அளிக்கும் திட்டம் காத்திரமான வகையில் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தை அங்கீகரிக்கும் ரோம் பிரகடனத்தில் இலங்கை கையெழுத்திட வேண்டும்.

இலங்கையில் சித்திரவதைகள் மற்றும் ஏனைய கொடூரமான, மனிதாபிமானமற்ற அல்லது இழிவுபடுத்தும் நடவடிக்கைகள், தண்டனைகள் என்பன ஆயுத மோதல்களின் ஒரு மரபுரிமையாகவே இருந்து வந்திருக்கிறது.

அரசின் அதிகாரத்துக்கு எதிராகக் குறிப்பாக, அதன் பாதுகாப்புப் படைகளுக்கு எதிராக, குறைந்தபட்ச பாதுகாப்பு உத்தரவாதமற்ற நிலையிலேயே இலங்கை மக்கள் தொடர்ந்து வாழ்ந்து வருகின்றனர்.

தற்போதைய சட்ட வரைமுறை மற்றும் ஆயுதப்படைகள், காவல்துறை, சட்டமா அதிபர் பணியகம் மற்றும் நீதித்துறை கட்டமைப்புகளில் போதிய மறுசீரமைப்புகள் மேற்கொள்ளப்படாமையால், சித்திரவதைகள் நீடித்து நிலைத்திருக்கும் ஆபத்து உள்ளது.

சித்திரவதைகளை இல்லாமல் செய்வதற்கும், எல்லா அதிகாரிகளும் சர்வதேச நியமங்களுக்கு இணங்கிச் செயற்படுவதை உறுதிப்படுத்திக் கொள்வதற்கும், இந்த நிறுவகங்களில் கட்டமைப்பு ரீதியான மறுசீரமைப்புகளை இலங்கை அவசரமாகவும், விரிவான அடிப்படையிலும் மேற்கொள்ள வேண்டும்.- என்றும் அவர் தனது அறிக்கையில் வலியுறுத்தியுள்ளார்.

## பொன்சேகாவின் தகவல்களின் அடிப்படையில் கோட்டாபயவிடம் விரைவில் விசாரணை!



கொழும்பு, ஜன.24

லசந்த விக்கிரமதுங்க படுகொலை தொடர்பாக, முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோட்டாபய ராஜபக்ஷவிடம் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் விரைவில் விசாரணைகளை மேற்கொள்ளவுள்ளனர்.

இந்தப் படுகொலை நடந்த போது இராணுவத் தளபதியாக இருந்த பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவிடம், கடந்த வாரம் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் ஐந்து மணிநேரம் விசாரணைகளை மேற்கொண்டிருந்தனர்.

இந்த விசாரணையின் போது, சரத் பொன்சேகா வெளியிட்ட தகவல்களின் அடிப்படையில், கோட்டாபய ராஜபக்ஷவிடம் விசாரணைகளை மேற்கொள்ள குற்றப் புலனாய்வுப் பிரிவினர் திட்டமிட்டுள்ளனர்.

இதற்காகக் கோட்டாபய ராஜபக்ஷ விரைவில் குற்றப் புலனாய்வுப் பிரிவுக்கு அழைக்கப்படுவார் என்று பொலிஸ் தலைமையக வட்டாரங்களை மேற்கோள்காட்டி செய்தி ஒன்று வெளியாகியுள்ளது.

அத்துடன், சரத் பொன்சேகாவின் சாட்சியங்களின் அடிப்படையில், படுகொலை நடந்த காலப்பகுதியில், கோட்டாபய ராஜபக்ஷவின் கீழ் செயற்பட்ட உயர்மட்ட படை அதிகாரிகள் பலரும் விசாரணைக்கு அழைக்கப்படவுள்ளனர் என்றும் கூறப்படுகிறது.

## லசந்த படுகொலை தொடர்பில் இன்று மீண்டும் பொன்சேகாவிடம் விசாரணை!

கொழும்பு, ஜன.24

சண்டே லீடர் பத்திரிகையின் ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்க படுகொலை தொடர்பாக முன்னாள் இராணுவத் தளபதியும், தற்போதைய அமைச்சருமான பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவிடம், மீண்டும் இன்று விசாரணை நடத்தப்படவுள்ளது.

பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா இராணுவத் தளபதியாக இருந்த காலகட்டத்தில், லசந்த விக்கிரமதுங்க படுகொலை செய்யப்பட்டிருந்தார்.

இந்தப் படுகொலையில் இராணுவப் புலனாய்வுப் பிரிவினருக்குத் தொடர்புகள் இருக்கின்றன என்று தகவல்கள் வெளியாகியிருந்தன.

இந்நிலையில், பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவிடம், கடந்த வெள்ளிக்கிழமை குற்றப் புலனாய்வுப் பிரிவினர் ஐந்து மணிநேரம் விசாரணைகளை மேற்கொண்டிருந்தனர்.



இந்த விசாரணைகளின் போது, முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மற்றும் முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோட்டாபய ராஜபக்ஷ ஆகியோரின் நேரடி உத்தரவுகளைப் பெற்று, நீதிக்குப் புறம்பான செயல்களை மேற்கொள்ளும் தனியான குழுவொன்று இராணுவத்தில் இயங்கியது என்பதை, பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா ஒப்புக் கொண்டுள்ளார்.

இந்த நடவடிக்கைகள் மேஜர் ஜெனரல் கபில ஹெந்த விதாரண மூலமாகவே மேற்கொள்ளப்பட்டன என்றும் அவர் கூறியுள்ளார்.

இதுபற்றிய தகவல்களை பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா கடந்த வெள்ளிக்கிழமை இரவு தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றிலும் வெளிப்படுத்தினார்.

அதில் அவர், முன்னாள் ஜனாதிபதியும் முன்னாள் பாதுகாப்புச் செயலருமே, லசந்த படுகொலைக்கு பொறுப்புக் கூற வேண்டியவர்கள். போர் தொடர்பாக எமக்குள் கருத்து வேறுபாடு இருந்தாலும் லசந்த விக்கிரமதுங்கவுக்கும் எனக்கும் இடையில் குரோதம் இருக்கவில்லை என்றும் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், லசந்த விக்கிரமதுங்க படுகொலை தொடர்பான மேலதிக தகவல்களைப் பெறுவதற்காக, பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவிடம் இன்று மீண்டும் விசாரணைகள் நடத்தப்படவுள்ளன என்று செய்திகள் வெளியாகியுள்ளன.

## மீரிகம - குருநாகல் நெடுஞ்சாலை நிர்மாணப் பணிகள் விரைவில்!

கொழும்பு, ஜன.24


மத்திய அதிவேக நெடுஞ்சாலையில் மீரிகம, குருநாகல் பிரிவுக்கு இடையிலான நிர்மாணப் பணிகள் விரைவில் ஆரம்பிக்கப்பட உள்ளன என்று திட்டப்பணிப்பாளர் வி.மொஹான் தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

மீரிகம - குருநாகல் நெடுஞ்சாலைகளுக்கான காணிகளை சுவீகரிக்கும் நடவடிக்கைகள் தற்போது இடம்பெறுகின்றன. தேசிய ஒப்பந்தக்காரர்கள் இதற்கான நிர்மாணப் பணிகளுக்கு பொறுப்பாகச் செயற்படுவார்கள்.

இவர்களுக்கு ஆரம்ப கட்டமாக கொடுப்பனவுகளை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதற்கான அமைச்சரவை அங்கீகாரத்தைப் பெறுவதற்காக அடுத்த வாரத்தில் ஆவணம் சமர்ப்பிக்கப்பட உள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## இலங்கை – அமெரிக்க கடற்படைகளுக்கு இடையிலான கூட்டு வலுப்பெற்றுள்ளது!

### அமெரிக்கத் தூதுவர் கூறுகிறார்



கொழும்பு, ஜன.24

அமெரிக்க கடற்படையின் ஏவுகணை நாசகாரி போர்க்கப்பலான யு.எஸ்.எஸ். ஹொப்பரின் கொழும்பு பயணத்தின் மூலம், இலங்கை- அமெரிக்க கடற்படைகளுக்கு இடையிலான கூட்டு மேலும் வலுப்படுத்தப்பட்டுள்ளது என்று அமெரிக்கத் தூதுவர் அதுல் கெசாப் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்;

கடல்சார் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு இலங்கை கடற்படை பங்காளராக இணைந்து கொண்டுள்ளமையை அமெரிக்கா மதிக்கிறது என்றும் தெரிவித்துள்ளார்.

காலைக்கதிர்
Kalaikkathir



# முல்லை. பிலவுக்குடியிருப்பு கிராமத்தில் மீள்குடியமர்த்துமாறு மக்கள் கோரிக்கை

## மாதிரிக் கிராமத்தில் தொடர்ந்து அவலப்படுகின்றனர் அவர்கள்

முல்லைத்தீவு, ஜன.24

கரைதுறைப்பற்று பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட கேப்பாபுலவு பிலவுக்குடியிருப்பு கிராமத்தில் தம்மை மீள் குடியமர்த்துமாறு அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அங்கு 64 குடும்பங்களுக்குச் சொந்தமான காணிகள் உள்ளன என்றும் அவற்றில் தங்களை மீள்குடியமர அனுமதிக்குமாறும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்த விடயம் தொடர்பாகப் பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவித்துள்ளவை வருமாறு:-

யுத்தம் காரணமாகக் கடந்த 2008 ஆம் ஆண்டு சொந்த நிலங்களிலிருந்து வெளியேறிய நாங்கள், மீண்டும் 2012 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 23 ஆம் திகதி மாதிரிக் கிராமத்தில் மீள்குடி யேற் றப்பட்டோம்.

வவுனியா மெனிக்பாம் நலன்புரி நிலையத்தில் இருந்து 2012 ஆம் ஆண்டு சொந்த நிலத்தில் மீள்குடியமர்த்துவதாகத் தெரிவித்து அழைத்து வந்து, மாதிரிக் கிராமம் ஒன்றில் எம்மை மீள் குடியமர்த்தியுள்ளனர்.

மாதிரிக் கிராமங்களில் குடியமர்த்தப்பட்டபோது எமது காணிகளில் விமானப் படையினர் நிலைகொண்டிருந்தனர். தற்போது, விமானப் படையினர் இந்தப் பகுதியில் இருந்து விலகிச் சென்றுள்ளனர்.

இந்த விடயம் தொடர்பில் மக்கள் வனவளப் பாதுகாப்பு அதிகாரிகளைச் சந்தித்துக் கலந்துரையாடிய போது, காணிகளின் அளவீடு தொடர் பில் எமக்கு எதுவும் தெரியாதுள்ளது. அரச அதிபர் உள்ளிட்ட அதிகாரிகள் காணிகளை அளவீடு செய்தால் தாம் காணிகளை விடுவிப்போம் என்று வனவளப் பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்தனர்.

மாதிரிக் கிராமத்தில் வாழ்வதால் பொருளாதார ரீதியில் நாம் பின்தங்கிய நிலையில் உள்ளோம்.

காணிகளை இழந்து பொருளாதார ரீதியில் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளோம். எங்களைச் சொந்த இடங்களில் மீள்குடியமர்த்துங்கள்.- என்று அவர்கள் தெரிவித்தனர்.

இதேவேளை, இன்று 24 ஆம் திகதி நிலஅளவையாளர்கள் மற்றும் வனவளப் பாதுகாப்பு அதிகாரி கள் உள்ளிட்டவர்கள் புலக் குடியிருப்புக்குச் சென்று நில அளவீடுகளை மேற் கொள்ளவுள்ளனர் என்று கரை துறைப்பற்று பிரதேச செயலாளர் சிவபாலன் குணபாலன் தெரிவித்துள்ளார். (ஐ-81)







ஒட்டுசுட்டான் பிரதேசத்துக்கான வன்னிக் குறோஸ் மகளிர் பேரவை மற்றும் வன்னிக்குறோஸ் கல்வி மேம்பாட்டுப் பேரவைக்கான அங்குரார்ப்பணம் நிகழ்வு என்பன நேற்றுமுன்தினம் ஒட்டுசுட்டான் வைமன் முன்பள்ளியில் வன்னிக் குறோஸ் சுகாதார நிறுவனத்தின் வன்னி மாவட்ட இணைப்பாளர் ச.ரூபன் தலைமையில் நடைபெற்றன.

மகளிர் பேரவையின் தலைவியாக திருமதி ச. சத்தியவாணி, செயலாளராக திருமதி ஆ.சகிலா, பொருளாளராக திருமதி ம. நித்தியகலா ஆகியோருடன் பதின்மூன்று உறுப்பினர்களும் தெரிவுசெய்யப்பட்டனர்.

கல்வி மேம்பாட்டுப் பேரவைக்கான தலைவராக அதிபர் ப. பரமேஸ்வரன், செயலாளராக கற்சிலைமடு வித்தியாலயத்தின் அதிபர் வி. பன்னீர்செல்வம், பொருளாளராக ஆசிரியர் ச.சிவதயாநிதி ஆகியோருடன் பதின்மூன்று உறுப்பினர்களும் தெரிவுசெய்யப்பட்டனர். இந்த நிகழ்வில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளருமான வைத்தியர் சி.சிவமோகன், வன்னிக் குறோஸ் கலாசார பேரவையின் முல்லைத்தீவு மாவட்டத்தின் தலைவர் சி.நாகேந்திரராசா, செயலாளர் சி.வேதவனம் ஆகியோர் கலந்து கொண்டனர். (ஐ-81)

# புதுக்குடியிருப்பு கலாசாரப் பேரவைக்கு தெரிவுசெய்யப்பட்டது புதிய நிர்வாகம்

வன்னிக்குறோஸ் கலாசார பேரவையின் புதுக்குடியிருப்பு பிரதேச கலைஞர்களுக்கான ஒன்றுகூடலும் புதுக்குடியிருப்பு பிரதேச கலாசாரப் பேரவையின் நிர்வாகத் தெரிவும் கடந்த சனிக்கிழமை புதுக்குடியிருப்பு கலாசார மண்டபத்தில் முல்லை. மாவட்டத்தின் கலாசாரப் பேரவைத் தலைவர் சி.நாகேந்திரராசா தலைமையில் இடம் பெற்றது.

இதன்போது புதுக்குடியிருப்பு பிரதேசத்துக்கான கலாசாரப் பேரவை நிர்வாகம் தெரிவு செய்யப்பட்டது. தலைவராக பாடகர் நாகராஜன், செயலாளராக கவிஞர் ஜெயம் ஜெகன், பொருளாளராக கவிஞர் யோ. புரட்சி ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். மேலும் 15 பேர் நிர்வாக சபை உறுப்பினர்களாக தெரிவுசெய்யப் பட்டனர்.

இந்நிகழ்வில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிவமோகன், புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் ம.பிரதீபன், புதுக்குடியிருப்பு பிரதேசவர்த்தகசங்கத்தலைவர் த. நீதன் எனப் பலர் கலந்து கொண்டனர்.

2017 ஆம் ஆண்டில் நடைபெறும் கலாசார நிகழ்வுகளில் தமிழர்களின் பாரம்பரிய கலைகளான பறை, கரகாட்டம், கும்மி, கோலாட்டம், நாட்டுக் கூத்துக்கள் என்பவற்றை நடத்துவது எனவும் தீர்மானிக்கப் பட்டது. (ம-81)

# மடு பாடசாலை மாணவர்களுக்கு அப்பியாசக் கொப்பிகள் வழங்கல்




மன்னார் மடு கல்வி வலயத்தின்கீழ் இயங்கும் சிலபாடசாலைகளுக்கு வடக்கு மாகாண மீன்பிடி போக்குவரத்து அமைச்சு அப்பியாசக் கொப்பி களை வழங்கியுள்ளது. இந்தப் பாடசாலைகளில் வறுமைநிலையில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு வழங் குவதற்காகவே இவை வழங்கப் பட்டன.

அமைச்சர்பா.டெனிஸ்வரனின் 2016 ஆம் ஆண்டு பிரமாண அடிப்படையிலான மூலதன நன்கொடை நிதியிலிருந்து இக் கொப்பிகள் வழங்கப்பட்டன. இந்த நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை மேற்படி அமைச்சின் மன்னாரில் அமைந்துள்ள உப அலுவலகத்தில் இடம்பெற்றது.

மடு கல்விவலயத்துக்குக் கீழ் இயங்கிவரும் மறத்தி கன்னாட்டி றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலையின் மாணவர்களுக்கு 48 அப்பியாசக் கொப்பிகளும், பரப்புக்கடந்தான் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை மாணவர்களுக்கு 80 கொப்பிகளும், சின்னவலயன் கட்டு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை மாணவர்களுக்கு 212 அப்பியாசக் கொப்பிகளுமாக அந்தந்தப் பாடசாலைப் பொறுப்பாசிரியர்களிடம் அவை கையளிக்கப்பட்டன. (ஐ-7)

# முல்லை. வெட்டுவாய்க்காலில் கருவாடு பதனிடல் நிலையம்



முல்லைத்தீவு – வெட்டுவாய்க்கால் கன்னிகா மாற்றுத்திறனாளிகள் குழு கருவாடு பதனிடல் செயற்பாட்டை முன்னெடுப்பதற்காக அமைத்த கட்டடம் கடந்த வாரம் திறந்து வைக்கப்பட்டது.

மாற்றுத்திறனாளிகளின் வாழ்வாதாரத் தொழில் முயற்சிக்காக அமைக்கப்பட்ட இக்கட்டடத்தின் திறப்பு விழாவில் வரோட் நிறுவன இயக்குநர் கிறிற்றியோன் அடிகளார், முல்லைத்தீவு பங்குத் தந்தை அந்தோனிப்பிள்ளை அடிகளார், வட்டுவாகல் கன்னிமார் ஆலய அர்ச்சகர் தெ.பசிர்தன் ஐயா, வட மாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன், முல்லைத்தீவு மாவட்ட சமூக சேவை உத்தியோகத்தர் ந.தசரதன் மற்றும் பலர் கலந்து கொண் டனர். (ம)

# புதுமுறிப்பு விக்னேஸ்வரா வித்தியாலய பொங்கல் விழாவும் பரிசில் வழங்கலும்



கிளிநொச்சி ஜன.24

கிளிநொச்சி புதுமுறிப்பு விக்னேஸ்வரா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டியை முன்னிட்டு நடத்தப்பட்ட மரதன் ஓட்டப்போட்டியில் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசு வழங்கும் நிகழ்வும் பொங்கல் விழாவும் கடந்த சனிக்கிழமை மேற்படி வித்தியாலயத்தில் நடைபெற்றன.

வித்தியாலய அதிபர் த. கண்ணபிரான் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் கலந்துகொண்டு பரிசில்களை வழங்கிக் கௌரவித்தார்.

இந்த நிகழ்வில் வித்தியாலய ஆசிரியர்கள், மாணவர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (ம-81)

# காய்ந்து கருகிவிட்ட நெற்பயிர்கள்! வாடிய முகத்துடன் விவசாயிகள்!!

## கைகொடுத்து உதவுமா மத்திய, மாகாண அரசுகள்?

எஸ்.நிதர்சன்

வடமாகாணத்தை இம்முறை வறட்சி வாட்டிவதைத்க, வாடிய முகங்களுடன் வானத்தைப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள் விவசாயிகள். மழை வரும், எஞ்சியுள்ளகொஞ்சப் பயிர்களையாவது காப்பாற்றலாம் என்ற எண்ணத்தில் விவசாயிகள் இருக்க, மழையோ விவசாயிகளைத்தொடர்ந்து ஏமாற்றி வருகின்றது. வடமாகாணத்தைப் பொறுத்தவரை விவசாயம் மிக முக்கியமான வாழ்வாதாரத் தொழிலாக இருக்கின்றது. பலஆயிரக்கணக்கான விவசாயிகள் விவசாயத்தையே வாழ்வாதாரத் தொழிலாகக் கொண்டு இயங்கிவருகின்றார்கள்.

ஆனால், இம்முறை விவசாயத்தை நம்பி நெற்செய்கைக்குப் பணத்தைப் போட்ட விவசாயிகள் பணத்தை எடுக்க முடியுமா என்ற ஏக்கத்தோடு வானத்தைப் பார்த்து காத்துக்கொண்டிருக்கிறார்கள்.வடக்கு மாகாண விவசாய அமைச்சு கடந்த வாரம் வெளியிட்ட அறிக்கையின் பிரகாரம் மாகாணத்தில் செய்கைபண்ணப்பட்டநெற்பயிர்களில் கிட்டத் தட்ட 25 வீதமானவை முற்றாக அழிவடைந்து விட்டன எனவும் மேலும் சுமார் பலஆயிரம் ஹெக்ரேயர் நிலப்பரபபில் செய்கை பண்ணப்பட்ட நெற்பயிர்கள் அழிவின் விளிம்பில் உள்ளன எனவும் தெரிவித்திருந்தது.

கடந்த வாரம் விவசாய அமைச்சு தெரிவித்திருந்த தகவலில் இரண்டு நாள்களுக்கு, அதாவது மேலும் அடுத்த சில தினங்களுக்கு மழைபெய்யாதுவிடின் விவசாயிகள் பெரியளவில் இழப்புக்களைச் சந்திக்கப்போகிறார்கள் எனவும் வடமாகாணம் அரிசித் தேவையில் பெரும் தட்டுப்பாட்டை எதிர்நோக்கப் போவதாகவும் எச்சரித்திருந்தது. உண்மையில் அவ்வாறுதான் நடக்கப் போகின்றதுஎன்பதைத்தான் காலநிலை எமக்குக் கட்டியம் கூறி நிற்கின்றது.

குறிப்பாக கார்த்திகை, மார்கழி, தை மாதங்களில் வடக்கு மாகாணத்தைப் பொறுத்தவரையில் பருவமழை கொட்டித் தீர்ப்பது வழமையாகும். ஆகவே, இந்தப் பயிரை நம்பி இம்முறையும் விவசாயத்தில் ஈடுபட்ட நெற் செய்கையாளர்கள் மழைவராததால் பெரும் பாதிப்புக்களைஎதிர்நோக்கி இருக்கிறாங்கள். குறிப்பாக, பெரும் வயல் நிலங்கள் வறண்டு வெடித்துப்போய் இருப்பதையும் காணக்கூடியதாக இருக்கிறது.

வடக்கில் அதிகளவிலான நெற்செய்கை மேற்கொள்ளப்பட்ட கிளிநொச்சி மாவட்டத்தில் இம் முறை மிகப் பெரிய நீர்ப்பாசனக் குளமான இரணைமடுக்குளத்திலும் அபிவிருத்தித் திட்டங்கள் மேற்கொள்ளப்படுகின்றமையால் நீர் தேக்காமை காரணமாக அந்த மாவட்டத்திலும் செய்கை பண்ணப்பட்ட தொண்ணூறு வீதமான பயிர்கள் முற்றாக அழிந்து கருகும் நிலை ஏற்பட்டிருக்கின்றது.

இந்நிலையில், வடமாகாணத்தை வறட்சியால் பாதிக்கப்பட்ட மாகாணமாகப் பிரகடனப்படுத்த வேண்டுமென்ற கோரிக்கை மாகாணசபையில் எழுந்திருக்கிறது. இந்த மாகாணத்தை வறட்சியால் பாதிக்கப்பட்ட மாகாணமாகப் பிரகடனப்படுத்தி, வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு முழுமையான நிவாரணத்தை வழங்க வேண்டுமென வடமாகாண சபை வலியுறுத்தியிருக்கின்றது.

மாகாணத்தின் நிலைமையின் தீவிரத்தைப் பொறுத்துமேற்கொள்ளப்படவேண்டிய நடவடிக்கையாகவும் இது அமைந்திருக்கின்றது. விவசாயத்தில் நெற்பயிர்ச் செய்கைக்காகக் கடன்பட்டும் நகைகளை அடகுவைத்தும் விவசாயத்தில் ஈடுபட்ட விவசாயிகள் கடனை எவ்வாறு மீளச்செலுத்துவதுஎன்பது எனத்தெரியாது கலங்கி நிற்கும் நிலைமையை வடக்கின் பல பாகங்களிலும் நாங்கள் காணக் கூடியதாக இருக்கிறது.

குறிப்பாக, வடமாகாணத்தின் ஐந்து மாவட்டங்களிலும் சுமார் 73 ஆயிரம் கெக்ரேயர் நிலப்பரப்பில் அதாவது, சுமார் இரண்டு லட்சத்துக்கும் மேற்பட்ட ஏக்கர் பரப்பளவில் நெற்செய்கை பண்ணப்பட்டது. இந்த நெற்பயிர்களில் சுமார் பத்துவீதத்தையாவது காப்பாற்றலாம் என்பதும் கேள்விக்குறியாகவே இருக்கிறது. இந்நிலையில், வடமாகாணத்தை வறட்சி மாகாணமாகப் பிரகடனப்படுத்துவதன் ஊடாகவே பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நஷ்டஈடுகளைப் பெற்றுக் கொடுக்கமுடியும்.

உண்மையில், விவசாயிகளுக்கான பாதிப்பு என்பது அதாவது, மழையில்லாமல் பயிர்கள் கருகிப் போயிருக்கின்றனஎன்பது விவசாயிகளுக்கான உடனடிப் பிரச்சினை மட்டுமாக இருக்காது. மிக நீண்ட காலப்பிரச்சினையாக இருக்கப்போகின்றதென்பதே உண்மை. இதற்காகப் பெற்ற கடன்களைத் திரும்பச் செலுத்துவதில் விவசாயிகள் பெரும் சிரமங்களையும் பாதிப்புக்களையும் எதிர்நோக்கவேண்டிய நிலையும் இருக்கின்றது.

அதேவேளயில், கொடுத்த கடனை மீளப் பெறுவதில் கடன் கொடுத்தவர்கள் அவர்களை விரட்டக் கூடிய



சூழலும் எதிர்காலத்தில் இருக்கிறது. ஆக, இயற்கை மிகப் பெரியதொரு சிக்கலுக்கு பிள்ளையார் சுழிபோட்டுச் சென்றிருக்கின்றது என்றே கூற வேண்டும். இவ்வாறானநிலையில், நெற்செய்கையில் ஈடுபட்ட இந்த விவசாயிகள் அதாவ்து, நாட்டின் முதுகெலும்பாக இருக்கக்கூடிய விவசாயிகளைக் காப்பாற்ற வேண்டிய மிகப் பெரிய பொறுப்பு மத்திய மாகாண அரசுகளுக்கு இருக்கிறது.

ஏற்கெனவே விவசாயத்தில் போதிய இலாபம் கிடைப்பதில்லை என்பதால் விவசாயிகள் விவசாயத்தை விட்டு ஒதுங்கும் நிலையே காணப்படுகிறது. இது நாட்டுக்கும் சமூகத்துக்கும் ஏதுவாக அல்லது சாதகமான நிலையாக இருக்கப்போவதில்லை. எனவே, விவசாயத்தில் ஈடுபடுவோரை ஊக்குவிக்க வேண்டிய கடப்பாடு மத்திய,மாகாண அரசுகளுக்கு இருக்கின்றது.

இந்நிலையில், விவசாயிகள் இவ்வாறான நெருக்கடிகளுக்கு ஆளாகும் போது அந்த நெருக்கடிகளில் இருந்து அவர்களை மீள்விப்பதே அவர்கள் தொடர்ந்தும் விவசாயத்தை நாடிச் செல்வதற்கு ஏதுவான காரணியாக இருக்கும். ஆகவே, இவ்வாறான நெருக்கடியான நிலைமைகளின் போது மத்திய மாகாணஅரசுகள் விவசாயிகளைக் கைவிடுகின்றமையானது எதிர்காலத்தில் அவ்வாறான விவசாயிகள் விவசாயத்தையே முற்றுமுழுதாகக் கைவிட்டு, வேறுதிசைகளுக்கு வேறு தொழில் தேடிச் செல்லக்கூடிய நிலைமையே ஏற்படும். இதுநாட்டுக்கு மிகப் பெரிய பாதிப்பாக அமையும்.

இந்நிலையில், விவசாயத்தில் அல்லது பொருளாதாரத்தில் முதுகெலும்பாக இருக்கக்கூடிய விவசாயிகளை இந்தச் சிக்கல்களில் இருந்து மீட்டெடுத்துஅவர்களுக்குரிய இழப்பீடுகளை வழங்கி, அவர்களுக்குக் கைகொடுத்து தூக்கிவிடுவதே நாட்டுக்கும் இந்தமக்களுக்கும் சமூகத்துக்கும் மத்திய, மாகாண அரசுகள் செய்கின்ற அல்லதுசெய்யப்போகின்ற மிகமுக்கியமான கடமையாக அமையும். ■



விவசாய அமைச்சு தெரிவித்திருந்த தகவலில் இரண்டு நாள்களுக்கு, அதாவது மேலும் அடுத்த சில தினங்களுக்கு மழைபெய்யாதுவிடின் விவசாயிகள் பெரும் இழப்புக்களைச் சந்திக்கப்போகிறார்கள் எனவும் வடமாகாணம் அரிசித் தேவையில் பெரியளவில் தட்டுப்பாட்டை எதிர்நோக்கப் போவதாகவும் எச்சரித்திருந்தது. உண்மையில் அவ்வாறுதான் நடக்கப் போகின்றது என்பதைத்தான் காலநிலை எமக்குக் கட்டியம் கூறி நிற்கின்றது.

காலைக்கதிர் Kalaikkathir





# “ஓ! அமெரிக்கா ...!! எங்கே போகிறாய்...?” 71

பொன்.வேணு கிருஷ்ணா

ஆளும் உயரடுக்கிற்குள்ளாக, தந்திரோபாயம் தொடர்பாகக் கூர்மையான பிளவுகள் இருக்கின்றன என்பது, தேர்தலுக்குப் பின்னர் வெடித்த முன்கண்டிராத அரசியல் மோதல்களில் வெளிப்பட்டது. ஆயினும், தலைமை ஜனநாயகக் கட்சியினர் மற்றும் குடியரசுக் கட்சியினரிடம் இருந்து ட்ரம்ப் மீது வருகின்ற தாக்குதல்கள் அவர் அதி-வலது கொள்கையை முன்னெடுக்க உறுதி பூண்டமையை மையமாகக் கொண்டவையாக இல்லை, மாறாக அமெரிக்கப் போர் திட்டமிடலின் திசை குறித்ததாகவே இருக்கின்றன. கிளிண்டனை ஆதரித்த பெருநிறுவன உயரடுக்கு மற்றும் இராணுவ-உளவு எந்திரத்தின் கன்னைகள் ரஷ்யாவை நோக்கிய மூர்க்கமான நிலைப்பாட்டில் இருந்து எந்தப் பின்வாங்கலும் இருக்கக் கூடாது என்பதை உறுதிசெய்ய விரும்பின என்றால், ட்ரம்ப், இப்போதைக்கு, தனது வாய்வீச்சுத் தாக்குதல்களை சீனாவுக்கு எதிராகவும், மிக சமீபத்தில், ஜேர்மனிக்கு எதிராகவும், செலுத்தியிருக்கிறார்.

இந்த மோதல்கள் எத்தனை கடுமையாக இருந்தபோதும்கூட, ஆளும் வர்க்கத்தின் அத்தனை பிரிவுகளுமே பின்வரும்




உறுதிப்பாடுகளில் ஒன்றுபட்டு நிற்கின்றன:

1) அமெரிக்க ஏகாதிபத்தியம் போர் அபாயம் ஏற்படினும் கூட தனது உலகளாவிய நலன்களைப் பின்தொடர வேண்டும்.

2) தொழிலாள வர்க்கத்தின் சமூக நலன்கள் மற்றும் அரசியல் உரிமைகள் மீதான தாக்குதல் தீவிரப்படுத்தப்பட வேண்டும்.


ட்ரம்ப் பேசுவதும் ட்வீட் செய்வதும் தனக்காக மட்டுமல்ல ஆளும் வர்க்கத்தின் சார்பாகத்தான் என்பது பில்லியனர்களையும் இராணுவத் தளபதிகளையும் கொண்ட அவரது அமைச்சரவைத் தேர்வுகள் சொற்பமான எதிர்ப்புடன் செனட் ஊர்ஜிதப்படுத்தல் நடைமுறைகளைக் கடந்து செல்கின்றன என்ற உண்மையின் மூலமாக நிரூபணமாகிறது.

ஒபாமாவைப் பொறுத்தவரை, உள்வரும் நிர்வாகத்தின் அரசியல் அங்கீகாரத்தைத் திட்டவட்டம் செய்வதற்கென்றே புதனன்று நடந்த தனது இறுதி பத்திரிகையாளர் சந்திப்பை அர்ப்பணித்திருந்தார், வெற்றி பெற்றிருக்கும் நிலையில், அவரது சிந்தனைகளையும் அவரது விழுமியங்களையும் கொண்டு முன்செல்வதே ட்ரம்புக்கு முறையானதாயிருக்கும் என்று அறிவித்தார்.

ட்ரம்ப் பதவிக்கு அமர்த்தப்பட்டதன் மூலம், ஆளும் வர்க்கம் ஒரு கட்டுக்கதை மயமான அமெரிக்க கடந்த காலத்தின் - அந்நிலத்தில் முதலாளித்துவ வெகுசிலராட்சி மக்களைச் சுரண்டும் சுதந்திரம் கொண்டிருக்கும். அத்துடன், மனம் விரும்பும் மட்டத்துக்கு சூழலை அசுத்தப்படுத்த முடியும்; அங்கு தொழிலாள வர்க்கம் அரசுக் கல்வி, மருத்துவப் பராமரிப்பு மற்றும் ஓய்வுக்கால பாதுகாப்பு ஆகியவற்றுக்கான உரிமை உள்ளிட எந்த முக்கியமான சமூக உரிமைகளும் அற்றதாய் இருக்கும்; அங்கு பொலிஸ் கேள்வி கேட்பாரின்றி மனிதர்களை முடமாக்கலாம்; கொல்லலாம்; அங்கே பெரு நிறுவனங்கள் தொழிலாளர்களுக்கு அடிமாட்டு ஊதியம் வழங்கலாம், விருப்பம்போல் அவர்களை வேலையை விட்டு நீக்கலாம், குழந்தைத் தொழிலாளர்களையும் கூடப் பயன்படுத்தலாம்; அங்கே அடிமட்ட எண்ணங்கள் சிடுமூஞ்சித்தனத்துடன் ஊக்குவிக்கப்படும். அத்துடன் அத்தியாவசியமான ஜனநாயக உரிமைகள் கழுத்து நெரிக்கப்படும்- புத்துயிர்ப்பை எதிர்பார்க்கிறது.

. ( With the accession of Trump, the ruling class anticipates the revival of a mythic American past—a land where the capitalist oligarchy is free to exploit the population and pollute the environment to its heart's content; where the working class is deprived of any significant social rights, including the right to public education, medical care and retirement security; where police can maim and kill with no questions asked; where corporations can underpay workers, fire them at will and even use child labouμr; and where the basest prejudices are cynically encouraged and essential democratic rights are trampled upon.)

ஆனால், 1930களின் மாபெரும் தொழிற்றுறைப் போராட்டங்களைச் சிறிதாக்கும் அளவுக்கான ஒரு வீச்சில் சமூக மோதல் கட்டவிழ்த்துவிடப்படாமல் ஒரு முதலாளித்துவ நரகம் பற்றிய இந்த கொடுங்கனவான மற்றும் திகிலூட்டும் சிந்தனை, அடையப்பட முடியாது. வரவிருக்கும் அரசியல் மற்றும் சமூக அதிர்ச்சிகள் அமெரிக்கத் தொழிலாள வர்க்கத்தை நடவடிக்கைக்குள் தள்ளும். ஐயுறவுவாதிகள் -பல்கலைக்கழக கல்வியறிஞர்கள் மற்றும் வசதியான நடுத்தர வர்க்கத்தின் மார்க்சிச-விரோத போலி-இடது அரசியல் அமைப்புகளின் மத்தியில் இவர்களை ஏராளமாகக் காணலாம்- பரந்த தொழிலாள வர்க்கப் போராட்டத்தின் சாத்தியத்தையே நிராகரிக்கின்றனர். தொழிலாள வர்க்கத்துக்கு அரசியல் கல்வியூட்டும் அத்தனை முயற்சிகளையும் நிராகரிப்பவர்கள் வெகுஜன புரட்சிகர நனவு இன்மையை சுட்டிக்காட்டுகின்றனர். ஆயினும், அவர்களது ஐயுறவுவாதம் புரட்சிகர வெடிப்புகளுக்கு அடித்தளம் அமைத்துத் தருகின்ற வரலாற்று நிகழ்முறைகள் குறித்த அவர்களது சொந்த அறியாமையையும் அலட்சியத்தையுமே வெளிப்படுத்துகின்றன. சென்ற நூற்றாண்டில் புரட்சிகர வர்க்கப் போராட்டத்தின் மகத்தான மூலோபாய மேதையாக இருந்த லியோன்ட்ரொட்ஸ்கி எழுதியவாறாக:



இவ்வாறாய், ஒரு புரட்சிகர சகாப்தத்தில் வெகுஜனக் கண்ணோட்டங்களிலும் மனோநிலைகளிலும் ஏற்படக் கூடிய அதிவிரைவான மாற்றங்கள், மனித மனத்தின் நெகிழ்வுநிலை மற்றும் இயங்குநிலையிலிருந்து பெறப்படுவதில்லை, மாறாக அதற்கு நேரெதிராய், அதன் ஆழமான பழைமை வாதத்திலிருந்து பெறப்படுகின்றது. புதிய புறநிலைமைகளுக்குப் பின்னே மக்களின் மீது ஒரு பிரளயத்தின் வடிவத்தில் வந்து மோதுகின்ற அந்தத் தருணம் வரையிலும் அந்த நிலைமைகளுக்குக் காலத்தால் மிகவும் பின் தங்கியதாகச் சிந்தனைகளும் உறவுகளும் இருப்பதுதான், ஒரு புரட்சியின் காலகட்டத்தில் பொலிஸ் மூளைக்கு வெறும் வாய்வீச்சாளர்களின் நடவடிக்கைகளின் விளைவாகத் தென்படக் கூடிய சிந்தனைகள் மற்றும் உணர்ச்சிப் பெருக்குகளின் அந்தப் பாய்ச்சல் இயக்கத்தை உருவாக்குவதாய் தெரிகிறது.



டொனால்ட் ட்ரம்ப்பின் வீரசூர நடிப்புகள் அத்தனையும் இருந்தாலும், இறுதி ஆய்வில், அவரது நிர்வாகம், அமெரிக்க முதலாளித்துவத்தை பீடித்திருக்கும் ஆற்றொணா நெருக்கடியின் விளைபொருளே ஆகும். அதன் பொறுப்பற்ற கொள்கைகள் அமெரிக்காவுக்குள்ளும் மற்றும் சர்வதேச அளவிலும் அதனால் கட்டுப்படுத்த முடியாத சக்திகளை இயக்கத்தில் நிறுத்தும்.

.( For all the bombast and braggadocio of Donald Trump, his administration is, in the final analysis, the product of the desperate crisis that afflicts American capitalism. Its reckless policies will set into motion forces both within the United States and internationally that it cannot control.)



அமெரிக்காவை மீண்டும் மகத்தானதாக்க ட்ரம்ப் விடுக்கும் அழைப்பு உண்மையில் வர்க்கப் போர், இராணுவ வன்முறை மற் றும் சர்வாதிகாரம் ஆகியவற்றுக்கான ஓர் அழைப்பாகும். இதற்கு பதிலிறுப்பாய், தொழிலாளர்கள் சர்வதேச ஐக்கியம், சமத்துவம் மற்றும் சோசலிசம் என்ற பெருமிதமிக்க பதாகையை கட்டாயம் விரும்பி ஏந்திக் கொள்ள வேண்டும்.

.( Trump's call to “Make America Great Again” is in reality a call for class war, military violence and dictatorship. In response, workers must embrace the proud banner of international unity, equality and socialism)

(கேள்வி தொடரும்...)




# தமிழ்த் தேசிய எழுச்சி



ஈழத் தமிழினத்தின் தேச விடுதலை பற்றி சிந்தனைப் புரட்சியை முன்னெடுத்தவர்களுள் விடுதலைப் புலிகளின் தத்துவ ஆசிரியரான அன்ரன் பாலசிங்கம் மிக முக்கியமானவர். அரசியல் ஞானம்மிக்க தத்துவ ஆசிரியர்.

ஈழத் தமிழினத்தின் உயரிய வரலாற்றுப் பதிவு ஏடான 'போரும் சமாதானமும்' என்ற நூலை அவர் படைத்திருக்கின்றார். இலங்கைத் தீவில் தமிழ்த் தேசிய எழுச்சி பற்றி அந்நூலில் அவர் குறிப்பிடும் நுட்பமான – நுண்ணியமான – விடயங்களை இக்கட்டுரைத் தொடரில் நாம் அறிந்து கொள்ளலாம்.




36

## ஈழத் தேசிய விடுதலை முன்னணி

இந்திய அரசைப் பகைக்காமல், இந்தியா அரங்கேற்றும் அரசியல் நாடகத்தில் நடித்தால்போதும் என்றும் அவர் கருதினார். ஆயினும், என்மீது சுமத்தப்பட்ட பொறுப்பைச் சரியான முறையில் செயற்படுத்தவேண்டும் என்ற நோக்கில், பேச்சுக்கள் ஆரம்பமாகி முடிவுறும் காலம்வரை நாள் தோறும் கோடம்பாக்கத்திலுள்ள தொலைபேசி மையத்துக்கு நான் சென்று வந்தேன். ஏனைய ஈழத் தேசிய விடுதலை முன்னனித் தலைவர்களும் தினம்தோறும் அங்கு வருவார்கள். திம்புவில் நடைபெற்ற அரசியல் நாடகத்தின் சகல அம்சங்களையும் எமது பிரதிநிதிகள் மூலமாக அறிந்து அவர்களை வழிநடத்தினோம்.

பூட்டான் அரசாங்கத்தின் ஆதரவில் பேச்சுக்கள் நடைபெற்றன. பூட்டான் வெளியுறவு அமைச்சர் லியன்போ சேரிங் அதிகாரபூர்வமாகப் பேசுக்களை ஆரம்பித்து வைத்தார். இந்தியா மத்தியஸ்துவம் வகித்தது. சந்திரசேகரன் உட்பட இந்திய உயர் அதிகாரிகள் நடுவர்களாகப் பணிபுரிந்தனர். ஆனால், அவர்கள் பேச்சுக்களில் பங்குபற்றவில்லை. சமாதானப் பேச்சு ஆரம்பமாகிய சொற்பநேரத்துக்குள் அது ஒரு சொற்போராக வடிவம் எடுத்தது. தமிழ்ப் போராளி அமைப்புகளின் சட்ட ரீதியான தகைமையை கேள்விக்குறிக்கு ஆளாக்கினார்கள் அரச பிரதிநிதிகள். இந்த அமைப்புகளின் உறுப்பினர்களைத் தமிழ் மக்களின் பிரதிநிதிகளாக ஏற்றுக்கொள்ள முடியாது என வாதிட்டார்கள். இதனையடுத்து விவாதம் சூடுபிடித்தது. இரு தரப்பிலிருந்தும் கசப்பான, காரசாரமாக வார்த்தைகள் பரிமாறப்பட்டன. அரச தரப்பின் பண்பற்ற அநாகரிகப் போக்கால் ஆத்திரமடைந்த தமிழ்ப் பிரதிநிதிகள் ஒரு முடிவு எடுத்தனர். அதாவது, தமிழர் தரப்பிலிருந்து சமர்ப்பிக்கப்படும் ஆவணங்களிலும் அறிக்கைகளிலும் 'தமிழ் மக்களின் பிரதிநிதிகள்' என்றே சகல தமிழ் அமைப்புகளும் கைச்சாத்திடுவதெனக் கூட்டாகத் தீர்மானம் எடுத்தனர். அரச பிரதிநிதிகள் வெளிப்படுத்திய பகையுணர்வு, தமிழ்ப் பிரதிநிதிகள் மத்தியில் நல்லுறவையும் ஒருமைப்பாட்டையும் ஏற்படுத்தியது. திம்புப் பேச்சுக்கள் மூலம் ஏற்பட்ட ஓர் ஆக்கபூர்வமான விளைவு என்றால் அது தமிழர் தரப்பு ஒருமைப்பாடுதான்.

சிங்கள அரசு பேச்சுக் குழுவின் தலைவர் ஹெக்டர் ஜெயவர்தனா, ஒரு தீர்வுத் திட்ட யோசனையை முன்வைத்தார். சகல கட்சி மாநாட்டின் போது தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியால் ஏற்கனவே நிராகரிக்கப்பட்ட பழைய, செயலிழந்து செத்துப்போன மாவட்ட அபிவிருத்திச் சபைத் திட்டத்தை அவர் சமர்ப்பித்தார். இதிலிருந்து ஓர் உண்மை தெளிவாகியது. சமாதானப் பேச்சு மூலம் தமிழரின் இனப் பிரச்சினைக்கு ஒரு நியாயமான தீர்வுகாணும் நோக்கம் எதுவும் ஜெயவர்த்தனா அரசுக்கு இருக்கவில்லை என்பது தெட்டத்தெளிவாகியது. தமிழ்ப் பிரதி நிதிகள் எடுத்த எடுப்பில் அரச தரப்பு யோசனையை நிராகரித்தமை மட்டுமல்லாது அதுபற்றி விவாதிக்கவும் மறுத்துவிட்டனர். முந்திய உடன்பாடுகளையும் ஒப்பந்தங்களையும் முறித்துக்கொண்ட நம்பிக்கைத் துரோக வரலாற்றை எடுத்துக்காட்டிய தமிழ் பிரதிநிதிகள், இம்முறையாவது தமிழர்கள் கருத்தில் எடுக்கக் கூடிய, உருப்படியான, நியாயமான தீர்வுத் திட்டம் ஒன்றை முன்வைப்பது சிங்கள அரசின் தட்டிக்கழிக்க முடியாத கடப்பாடு என வாதிட்டனர். தமிழரின் தேசிய இனப் பிரச்சினையின் அடிப்படையான மூலக் கோட்பாடுகளை மட்டும் விதந்துரைப்பதாகச் சுட்டிக்காட்டிய தமிழ்ப் பிரதிநிதிகள், இக் கோட்பாடுகளை அடிப்படையாக வைத்து அரசாங்கம் ஒரு விரிவான - உருப்படியான - தீர்வுத் திட்டத்தை வகுத்துத் தரவேண்டும் என வாதாடினார்கள். தமிழர் தரப்பால் ஏகமனதாக முன்வைக்கப்பட்ட நான்கு அடிப்படைக் கோட்பாடுகள் வருமாறு:

*1) தமிழ் மக்கள் ஒரு தனித்துவமான தேசிய இனக்கட்டமைபைக் கொண்டவர்கள்.*

*2) தமிழ் மக்களுக்கு இனம் காணக்கூடிய தனித்துவமான தாயகம் உண்டு என்பதை ஏற்றுக்கொள்ளுதல்.*

*3) தமிழர் தேசத்துக்கு எவராலும் பறித்தெடுக்க முடியாத சுயநிர்ணய உரிமை உண்டு என்பதை ஏற்றுக்கொள்ளுதல்.*

*4) சகல தமிழ் மக்களுக்கும் முழுமையான குடியுரிமையும் மற்றும் அடிப்படையான உரிமைகளும் உண்டு என்பதை ஏற்றுக் கொள்ளுதல்.*

முதற் சுற்றுப் பேச்சு முடிவடைந்த நாள் அன்று (ஜூலை 13) தமிழ்ப் பிரதிநிதிகள் கூட்டாக விடுத்த திம்புப் பிரகடனத்தில்தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

*"இந்த மூலக் கோட்பாடுகளைப் பேணிப் பாதுகாப்பதற்காக வெவ்வேறு நாடுகள் வெவ்வேறான அரசாட்சி முறைமைகளை வடிவமைத்துள்ளன. எமது மக்களின் அடிப்படை உரிமைகள் மறுக்கப்பட்டமையால் நாம் சுதந்திரமான தமிழரசுக் கோரிக்கையை முன்வைத்து, அதற்காகப் போராடி வந்துள்ளோம். தமிழரின் பிரச்சினைக்குத் தீர்வாக சிறிலங்கா அரச பிரதிநிதிகளால் முன்வைக்கப்பட்ட யோசனைகள் முற்றாக ஏற்றுக்கொள்ள முடியாதவை. ஆதலால், நாம் அவற்றை நிராகரித்துள்ளோம். எனினும், சமாதானத்தில் நாம் பற்றுறுதி கொண்டவர்கள் என்பதால் நாம் முன்மொழிந்த மூலக் கோட்பாடுகளின் அடிப்படையில் ஒரு தீர்வுத் திட்டத்தை சிறிலங்கா அரசு முன்வைக்குமானால் அதனைப் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ள நாம் தயாராக இருக்கிறோம்."*

1985 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 12 ஆம் நாள் இரண்டாவது சுற்றுப் பேச்சு திம்புவில் ஆரம்பமானது. அரச பேச்சுக் குழுவின் தலைவர் ஹெக்டர் ஜெயவர்த்தனா, தான் ஏற்கனவே தயாரித்துக்கொண்டு வந்த அறிக்கையை வாசித்தார். குடியுரிமைக் கோரிக்கையை தவிர்ந்த முதல் மூன்று திம்புக் கோட்பாடுகளை ஏற்றுக்கொள்ள முடியாதவை என அவர் நிராகரித்தார். குடியுரிமை சம்பந்தப்பட்ட கோட்பாட்டை அரசு பரிசீலனைக்கு எடுக்கும் என்றார்.தமிழர் தாயகக் கோட்பாட்டை நிராகரித்த அவர், தமிழ் மக்கள் சிறிலங்கா அடங்கிலும் வாழ்த்துவருகின்றமையால் சிறிலங்காவே தமிழர், சிங்களவர் மற்றும் ஏனைய சமூகத்தவர்களதும் தாயகம் என வற்புறுத்தினார். தமிழ்த் தேசியக் கோட்பாட்டையும் அவர் ஏற்றுக்கொள்ள மறுத்தார். தமிழ் மக்களை ஒரு தேசிய இனமாகக் கொள்ளமுடியாது என்றும், தமிழர்கள் ஒரு சிறுபான்மை இனக் குழுமம் என்றும் வாதிட்டார். அந்நிய குடியேற்ற ஆட்சியின் கீழ் உள்ள தேசங்களுக்கு மட்டுமே சுயநிர்ணய உரிமை உரித்தாகும் என விளக்கம் அளித்த அவர், ஒரு சுதந்திரமான இறையாண்மையுடைய அரச ஆட்சியின் கீழ் உள்ள சிறுபான்மைச் சமூகங்கள் சுயநிர்ணய உரிமை கோரமுடியாது என வலியுறுத்தினார். தனது விளக்க உரையின்



முடிவில் ஹெக்டர் ஜெயவர்த்தனா குறிப்பிட்டவை வருமாறு:

*"திம்பு பிரகடனத்தின் முதல் மூன்று கோட்பாடுகளையும், அவற்றுக்கு வழங்கப்பட்ட சட்டரீதியான அர்த்தத்துடன் மேலெழுந்த வாரியாகப் பார்த்தால், அரசாங்கத்தால் அவற்றை முற்றாக ஏற்றுக்கொள்ள முடியாது. சிறிலங்காவின் இறையாண்மைக்கும் பிரதேச ஒருமைப்பாட்டுக்கும் தீமை விளைவிக்கும் என்பதாலும், ஒன்றுபட்ட சிறிலங்காவுக்குப் பங்கம் ஏற்படுத்துவதுடன், இந்நாட்டில் வாழ்ந்து வரும் ஏனைய சமூகத்தவர்களின் நலன்களுக்கும் விரோதமாக அமையும் என்ற காரணத்தால் இக்கோட்பாடுகள் நிராகரிக்கப்பட வேண்டியவையாகும்."*

அரசாங்கப் பேச்சுக் குழுவின் விட்டுக்கொடாத கடும்போக்கைத் தமிழ்ப் பிரதிநிதிகள் வலுவாகக் கண்டித்தனர். திம்புக் கோட்பாடுகளை ஆதரித்து, தர்க்கரீதியான வாதங்களை முன்வைத்துப்பேசிய அவர்கள், தமிழ் மக்கள் தேசிய இனக்கட்டமைப்பைக் கொண்டவர்கள் என்பதையும், அவர்களுக்கு இனம் காணக்கூடிய, வரலாற்று ரீதியான தாயகப் பிரதேசம் உண்டு என்பதையும், எல்லாவற்றிலும் முக்கியமாக, தமிழ் மக்கள் சுயநிர்ணய உரிமைக்கு உரித்தானவர்கள் என்பதையும் வலியுறுத்தினார்கள். அவர்களது விளக்கவுரையிலிருந்து சில பகுதிகளை இங்கு தருகிறேன்.

*"எமது மக்களின் உறுதியான அரசியற் போராட்டங்களிலிருந்து வரலாற்று ரீதியான படிநிலை வளர்ச்சி பெற்று வடிவம் எடுத்ததுதான் எமது சுயநிர்ணய உரிமைக்கான கோரிக்கை. ஒரு பொதுவான பாரம்பரியமும், பண்பாடும், ஒரு தனித்துவமான மொழியும், தாயக நிலமும் உடையவர்கள் என்பதால், ஈழத்தமிழர்கள் அல்லது தமிழீழ மக்கள் ஒரு தேசிய இன அமைப்பைக் கொண்டவர்களாக விளங்குகின்றனர். அத்தோடு, அவர்கள் அடிமைப்பட்ட மக்கள் என்பதால், அந்நிய ஆதிக்கத்திலிருந்து தம்மை விடுவித்துக் கொள்ளும் உரிமை அவர்களுக்கு உண்டு. இதன் அடிப்படையில்தான் சர்வதேசச் சட்டத்தின் முக்கிய நியமமாக சுயநிர்ணய உரிமை இன்று அங்கீகாரம் பெற்றுள்ளது. இந்த சுயநிர்ணய உரிமையை ஆதாரமாகக் கொண்டுதான் எமது அரசியற் தகைமையை நாமே நிர்ணயிக்கும் உரிமை எமக்குண்டு. அதாவது, சிறீலங்கா அரசுடன் ஒன்று சேர்ந்து இணைந்து வாழ்வதா அல்லது பிரிந்துசென்று சுதந்திரமான தனியரசை நிறுவிக் கொள்வதா என்ற உரிமை எமக்குண்டு. இந்த நான்கு கோட்பாடுகளையும் பகிரங்கமாகப் பிரகடனம் செய்ததிலிருந்து, இக்கோட்பாடுகளின் அடிப்படையில் நாம் பேச்சுக்களை நடத்த விரும்பவில்லை எனக் கருதிவிடக் கூடாது...*

*நாம் பிரகடனம் செய்த மூலக் கோட்பாடுகளின் அடிப்படையில் எம்முடன் பேச்சுக்களை நடத்துவதற்கு சிறீலங்கா அரச பிரதிநிதிகள் தவறிவிட்டனர். பரஸ்பரம் ஆக்கபூர்வமான கருத்துக்களைப் பகிர்ந்துகொள்வோம் என சிறீலங்கா அரச பிரதிநிதிகள் 12இல் விடுத்த அறிக்கையில் உறுதியளித்தபோதும் அவர்கள் அதைக் கடைப்பிடிக்கவில்லை. அதற்குப் பதிலாக 1985 ஓகஸ்ட் 16 ஆம் நாள் அரச பிரதிநிதிகள் 'புதிய யோசனைகள்' என்ற பெயரில் ஒரு திட்டத்தைச் சமர்ப்பித்தனர். மாவட்ட சபைகளுக்கு முன்பு வழங்கப்பட்ட செயற்பாட்டு உரிமைகளை மாகாண சபைகளுக்கு மாற்றிப் பழைய யோசனைகளுக்கு புதிய முலாம் பூசப்பட்டதாக இந்தப் 'புதிய திட்டம்' அமைந்தது. தமிழ் மக்கள் ஒரு தனித்துவமான தேசிய இனம் என்பதை இந்தப் 'புதிய யோசனைகள்' ஏற்றுக்கொள்ளவில்லை. தமிழ்பேசும் மக்கள் தமது தாயக நிலத்துக்கு உரிமையானவர்கள் என்பதை இப் 'புதிய யோசனைகள்' ஏற்றுக்கொள்ளவில்லை. தமிழ் மக்கள் சுயநிர்ணய உரிமை உடையவர்கள் என்பதையும் இந்தப் 'புதிய யோசனைகள்' தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகளுக்கும் உத்தரவாதம் தரவில்லை. ஒட்டுமொத்தத்தில் இந்தப் 'புதிய யோசனைகள்' தமிழ் மக்களின் நியாயபூர்வமான அரசியல் அபிலாசைகளைப் பூர்த்தி செய்யத் தவறிவிட்டன.*

*சிறீலங்கா அரசுடன் பேச்சுக்களை நடத்துவதற்கு அடிப்படையாக நாம் திம்புவில் முன்வைத்த நான்கு மூலக் கோட்பாடுகளும் வெறும் அறிவியற் கருத்தாக்கம் அல்ல. அடிப்படையான மூல உரிமைகள் கோரி, தமிழ் மக்கள் நிகழ்த்திய போராட்டத்தினது யதார்த்த மெய்யுண்மையின் வெளிப்பாடாகவே அவை அமைந்தன. ஆரம்பத்தில், 1950 களில் சமஷ்டி ஆட்சிமுறை கோரி நடைபெற்ற போராட்டம் காலப் போக்கில் அரச ஒடுக்குமுறை தீவிரமடைந்ததைத் தொடர்ந்து சுதந்திரத் தமிழீழ தனியரசுக் கோரும் போராட்டமாக வடிவம் எடுத்தது. இப்பேச்சுக்களில் நாம் பிரகடனம் செய்த மூலக் கோட்பாடுகளின் அடிப்படையில் நியாயபூர்வமான பேச்சுக்களை நடத்துவதற்குத் தயாரா என்பதைத் தெட்டத்தெளிவாகக் கூறுமாறு நாம் சிறீலங்கா அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்கிறோம்."*

(தொடரும்...)

# விஞ்ஞான, கணித பாட ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை

கொழும்பு, ஜன.24

விஞ்ஞானம் மற்றும் கணித பாட ஆசிரியர்களுக்கான வெற்றிடங்களுக்கு பட்டதாரிகள் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர்.

இதற்கான அறிவித்தல் கடந்த வெள்ளிக்கிழமை வெளியான வர்த்தமானியில் வெளியாகியுள்ளது.

கல்வி அமைச்சர் அகில விராஜ் காரியவசத்தின் பணிப்புரைக்கமைய, நாட்டின் அனைத்துப் பாடசாலைகளிலும் விஞ்ஞானம் மற்றும் கணித பாட ஆசிரியர்களுக்கான வெற்றிடங்கள் இந்த வருடத்துக்குள் பூர்த்தி செய்யப்பட இருக் கின்றன என்று கல்வி அமைச்சின் செயலாளர் சுனில் ஹெட்டியாராச்சி தெரிவித்தார்.

போட்டிப் பரீட்சை மூலம் பட்டதாரிகள் இணைத்துக் கொள்ளப்படுவார்கள் என்று அவர் மேலும் தெரிவித்தார்.(எ)

## தினசரி ராசி பலன் 24.01.2017

துர்முகிவருஷம் 2017 ஆம் ஆண்டு தைத்திங்கள் 11 ஆம் நாள் செவ்வாய்க்கிழமை துவாதசி இரவு 2.23 வரை. பின் திரயோதசி. கேட்டை மாலை 4.33 வரை. பின் மூலம். மரணயோகம் மாலை 2.43 வரை. பின்சுபயோகம். ராகுகாலம். மாலை 3.17 முதல் 4.44 வரை. சுபநேரம் பகல் 11.06 முதல் 12.36 வரை. இன்று கரிநாள். இன்று துவசம் செய்ய வேண்டிய திதி. தை மாத தேய்பிறை துவாதசி.

'ஜோதிடமணி' பிரம்மஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா ஜே.பி.

**மேஷம்:** இன்று அலைச்சல் மிகுந்த நாள். சிலர்வேலை தேடி அலைவார்கள். உத்தியோகத்தர்களுக்கு தொழில்ரீதியான அலைச்சல் உண்டாகும். பணம் தட்டுப்பாடாக இருப்பதால் கடன் வாங்க அலைவர்கள். தொழிலாளர்கள் தொழில்தேடி அலைவார்கள்.

**ரிஷபம்:** இன்று சமபலன்கள் காணப்படுகின்றன. எடுக்கும் முயற்சிகளுக்குத் தடை உண்டாகும். உத்தியோகத்தர்களுக்கு வேலைப்பளு, அலைச்சல் அதிகரிக்கும். செய்யும் தொழிலில் பாடுபட்டதன் பலன்குறையும்.

**மிதுனம்:** இன்று யோகமான பலன்கள் காணப்படுகின்றன. பணம்தாராளமாகப் புழங்கும். வெளிநாட்டிலிருந்து வீட்டுக்குரிய ஆடம்பரப் பொருள்கள் வந்து சேரும். பூர்வீக சொத்துகளால் வருமானம் அதிகரிக்கும்.

**கடகம் :** இன்று இன்பமான நாள். பணப்புழக்கம் சரளமாக இருக்கும். உறவினர்களின் ஆதரவு அதிகரிக்கும். உத்தியோக உயர்வுகளால் வருமானம் அதிகரிக்கும். வீடு, காணி வாங்கும் வாய்ப்பு அமையும். இதுவரை நோய்ப்பட்டிருந்தவர்கள் நோய் நீங்கி ஆரோக்கியமடைவார்கள்.

**சிம்மம் :** இன்று சஞ்சலமான நாள். எதிலும் தடுமாற்றம் உண்டாகும். குடும்ப அமைதி குறைவடையும். தொழிலில் அலைச்சல் அதிகரிக்கும். வியாபாரம் மந்தகதியில் நடக்கும். கொடுக்கல், வாங்கல்களைத் தவிர்க்கவும்.

**கன்னி:** இன்று மத்திம பலன்கள் காண்படுகின்றன. பொருள் வரவு சுமாராக இருக்கும். எடுக்கும் முயற்சிகள் தாமத மாகும். புதிய தொழில் முயற்சியைத் தள்ளிப்போடவும். கொடுக்கல், வாங்கலில் அவதானம் தேவை.

**துலாம்:** இன்று உயர்வான பலன்கள் காணப்படுகின்றன. வரவேற்பு அதிகரிக்கும். வியாபாரத்தில் அமோக லாபம் கிடைக்கும். சுயதொழில் ஆதாயத்தைத் தரும். உத்தியோக உயர்வுகள் கிடைக்கும். வெளிநாட்டுப் பயணம் சிலருக்கு அனுகூலமாகும்.

**விருச்சிகம்:** இன்று அதிஷ்டமான நாள். தொழில் விஷய மாய் திடீர் யோகம் உண்டாகும். திட்டமிட்ட வெளிநாட்டுப்பயணம் கைகூடும். அரசு வழியால் சிலருக்கு வீடு, காணி கிடைக்கும்.

**தனுசு:** இன்றுயோசினையானநாள். மனதில்சிந்தனைகுழப்பம் அதிகரிக்கும். பணவரவு குறையும். தொழிற்பிரிவினருக்கு வருமானம் குறையும். சிலருக்கு தொழிலில் வெறுப்பு ஏற்படும். தொழிலை இழக்கவும் நேரும்.

**மகரம்:** இன்று ஆக்கபூர்வமான பலன்கள் காணப்படுகின்றன. பொருளாதாரம் வளமடையும். எடுக்கும் புதிய முயற்சிகள் வெற்றி அடையும். சுயதொழிலில் புதியமுறைகளைக் கையாண்டு லாபமடைவார்கள்.

**கும்பம்:** இன்று விருத்தியான நாள். பணவரவு அதிகரிக்கும். வியாபாரம் விருத்தி அடையும். செய்யும் தொழில் முன்னேற்ற மடையும். மாணவர்கள் கல்வியில் விருத்தி அடைவார்கள்.

**மீனம்:** இன்று இனிமையான நாள். நிதிநிலைமை வளமாக இருக்கும். இல்லத்தில் இனிமை கொலுவிருக்கும். உறவினர், நண்பர்கள் பக்கமாக இருப்பார்கள். ஆடை, ஆபரணச்சேர்க்கை உண்டாகும்.

சந்திராட்டம நாள்: அசுவினி, பரணி, கார்த்திகை முதலாம் பாதம் ஆகிய நட்சத்திரங்களில் பிறந்தோர் இத்தினத்தில் சுப கருமங்களைத் தவிர்க்கவும்.

### சிவனொளிபாதமலைக்கு பருவ காலத்துக்கு வருபவர்களால்

# நல்லதண்ணிப் பகுதி காணிகள் ஆக்கிரமிப்பு; பொலிஸ் நிலையம் அருகில் ஆர்ப்பாட்டம்!



மஸ்கெலியா, ஜன.24

மஸ்கெலியா - நல்ல தண்ணிப் பிரதேசத்தில் சிவனொளி பாத மலையை அண்டிய அரச காணிகள் மற்றும் பொது இடங்களை வெளியாள்கள் ஆக்கிரமித்து வருகின்றமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்றுமுன் தினம் நல்லதண்ணி பொலிஸ் நிலையத்துக்கு அருகில் பிரதேசவாசிகள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் நல்லதண்ணி பிரதேசத்தில் சிவனொளிபாத மலைப் பகுதியில் பருவகால நிகழ்வின் போது வருகை தரும் வெளியாள்கள் பொது இடங்கள் மற்றும் அரச காணிகளை ஆக் கிரமித்துக் கொள்கின்றனர் என்று பொதுமக்கள் தெரிவிக்கும் அதே வேளை, இந்தக் காணி ஆக் கிரமிப்புக்கு அந்தப்பகுதியைச் சேர்ந்த கிராம சேவகர் ஒருவர் வெளியாள்களுக்கு ஆதரவு வழங்கி வருகிறார் என்றும் குற்றம் சுமத்துகின்றனர்.

இது தொடர்பில் அந்தப் பகுதியைச் சேர்ந்த அரச அதிகாரிகள் மற்றும் அரசியல் வாதிகளிடம் பல் வேறுப்பட்ட முறைபாடுகளைச்செய்துள்ளபோதிலும் நடவடிக்கை ஏதும் அவர்கள் மேற்கொண்டமை யாகத் தெரியவில்லை என்று ஆர்ப்பாட்டகாரர்கள் சுட்டிக்காட்டினர். (எ)

### 1869 ஆம் ஆண்டில் உயிரிழந்த

# முதலாவது அமெரிக்க தூதுவரின் கல்லறை காலியில் கண்டுபிடிப்பு

கொழும்பு, ஜன.24

இலங்கைக்கான அமெரிக்காவின் முதலாவது தூதுவராகப் பணியாற்றிய ஜோன் பிளேக் என்பவரின் உடல் அடக்கம் செய்யப்பட்டுள்ள இடத்தை அடையாளம் கண்டுள்ளதாக இலங்கைக்கான அமெரிக்கத் தூதரகம் அறிவித்துள்ளது.

2016ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 16 ஆம் திகதி கொழும்பில் உள்ள அமெரிக்கத் தூதரக அதிகாரிகள் சிலர் காலி நகரில் உள்ள கைவிடப்பட்ட ஒல்லாந்து திருச்சபைக்குரிய மயானம் ஒன்றில் மேற்கொண்ட தேடுதலில் தூதுவர் மற்றும் அவரது மனைவிக்குரிய கல்லறைகளைக் கண்டுபிடித்தனர் என்று தூதரகம் தெரிவித்துள்ளது.




தூதுவர் ஜோன் பிளேக் கல்லறையில் அவர் 1869 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 17 ஆம் திகதி உயிரிழந்தார் என்று எழுதப்பட்டுள்ளதுடன் அவரது மனைவி 1905ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 13 ஆம் திகதி இறந்துள்ளார் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

அமெரிக்கத் தூதரகத்தின் வழிநடத்தலின் கீழ் கல்லறை அமைந்துள்ள நிலம் அமெரிக்கக் கடற்படையின் மெரின் படையினரால் நேற்றுமுன் தினம் காலை துப்புரவு செய்யப்பட்டது.

இதேவேளை, ஒல்லாந்தர் காலத்துக்குரிய இந்த மயானத்தை தற்போது யாரும் பயன்படுத்துவதில்லை என்றும் அது நினைவிடமாகப் பேணப்பட்டு வருகின்றது எனவும் ஒல்லாந்து திருச்சபையின் காலி அநுநாயக்கர் சுனில் பேர்டினட்டிஸ் தெரிவித்துள்ளார். (எ)

# மிருசுவில் வடக்கு மக்கள் பாவனைக்கு கிராமியப் பொதுச்சந்தை கையளிப்பு



யாழ்ப்பாணம், ஜன.24

மிருசுவில் வடக்குப் பகுதி மக்களின் வேண்டுகோளுக்கு அமைவாகக் கிராமியப் பொதுச் சந்தை ஒன்று அமைக்கப்பட்டு மக்களது பாவனைக்காகக் கையளிக்கப்பட்டுள்ளது.


அந்தப்பகுதியில் வாழும் மக்களது தேவைகளை நிறைவு செய்வதற்காகவும் விவசாயிகளின் உற்பத்திகளைச் சந்தைப் படுத்துவதற்காகவும் ஒரு சந்தையை அமைத்துத் தருமாறு பலதரப்பட்டவர்களிடமும் அந்தப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்திருந்தனர்.

இதற்கு அமைவாக ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகமும் நாடாளுமன்ற உறுப்பினருமான டக்ளஸ் தேவானந்தாவின் பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீட்டின் மூலம் இந்த சந்தைத் தொகுதி அமைக்கப் பட்டது. ஈ.பி.டி.பி. யாழ்.மாவட்ட நிர்வாகச் செயலாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான கா.வேலும்மயிலும் குகேந்திரனால் சந்தைத் தொகுதி நாடா வெட்டி திறந்து வைக்கப்பட்டதுடன் மக்களது பாவனைக்கும் கையளிக்கப்பட்டது.

அந்தப்பகுதி சனசமூக நிலையத் தலைவர் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், கட்சியின் தென்மராட்சிப் பிரதேச ஒருங்கிணைப்பாளர் மூர்த்தி மற்றும் பிரதேச மக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (எ)

# மக்களைப் பாதுகாக்க தவறியுள்ளது அரசு

### ரில்வின் சில்வா குற்றச்சாட்டு



கொழும்பு, ஜன.24

அரசு மக்களை பாதுகாக்கத் தவறியுள்ளது என்று ஜே.வி.பி. யின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

மஹரகம பிரதேசத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

தேசிய அரசில் பல்வேறு பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளன என்றும் அதனைத் தீர்த்துக்கொள்ள முடியாத அரசால் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண முடியாது. ஜே.வி.பியாலேயே மக்களின் பிரச்சினைளுக்குத் தீர்வு காண முடியும் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (எ)

# முன்னாள் போராளிகளின் குடும்பங்களுக்கு மன்னாரில் வாழ்வாதார உதவிகள் வழங்கல்

புனர்வாழ்வு பெற்ற போராளிகள், யுத்தத்தில் மரணித்த போராளிகளது குடும்பங்கள், தடுப்பில் உள்ள அரசியல் கைதிகளது குடும்பங்கள் மற்றும் ஏனைய போராட்ட குழுக்களில் இருந்து மரணித்தவர்களது குடும்பங்கள் ஆகியோரது வாழ்வாதாரத்தை உயர்த்தும் நோக்கோடு ஒவ்வொரு குடும்பத்துக்கும் தலா 50 ஆயிரம் ரூபா பெறுமதியான வாழ்வாதார உள்ளீடுகள் வழங்கப்பட்டுள்ளன.



அதன் அடிப்படையில் 2016 ஆம் ஆண்டுக்கான திட்டத்தில் மன்னார் மாவட்டத்தில் அனைத்துப் பயனாளிகளுக்குமான திட்டங்கள் கிடைக்கப்பெற்றுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த உதவிகளை வழங்கும் நிகழ்வு மன்னாரில் அமைச்சரின் உப அலுவலகத்தில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது. இந்த நிகழ்வில் 16 பயனாளிகளுக்கு மீன்பிடி வலைகள், உழுந்து அரைக்கும் இயந்திரம், குளிரூட்டி மற்றும் ஒலி பெருக்கி சாதனம் போன்றவை வழங்கப்பட்டன.

பயனாளிகளுக்குத் உதவிகளை வழங்கி அமைச்சர் பா.டெனிஸ்வரன் கருத்துத் தெரிவிக்கையில்:-


கோழி வளர்ப்பு, அலுமினியம் பொருத்துதல், மாடு வளர்ப்பு, மீன் பிடி சாதனங்கள், சைக்கிள் திருத்துதல் போன்ற திட்டங்களை கடந்த வருடங்களில் பெற்றவர்கள் நாளாந்தம் 500 ரூபா தொடக்கம் ஆயிரம் ரூபா வரையில் வருமானமாகப் பெற்று வருகின்றனர்.

அவர்களைப் போன்று உதவிகளைப் பெற்றவர்கள் அவற்றைச் சரியான முறையில் பயன்படுத்தி வருமானம் பெறவேண்டும். அதன் மூலம் பிள்ளைகளைக் கல்வியில் வளர்க்க வேண்டும். கல்வியே தமிழ் மக்களாகிய எமக்குச் சிறந்த மூலதனம். அதன் மூலமே நிரந்தர அபிவிருத்தியை நாம் பெறமுடியும்.- என்றார்.

(ஐ)

# மன்னாரின் 'கல்விக்குரல்' அமைப்பால் மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள்





மன்னார், ஜன.24

மன்னார் மாவட்ட மாணவர்களின் கல்வி நடவடிக்கையை உயர்த்தும் வகையிலும் வறிய மாணவர்களின் நலனைக் கருத்தில் கொண்டும் மன்னாரின் கல்விக்குரல் அமைப்பால் கற்றல் உதவி வழங்கும் நிகழ்வுகள் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரண்டு இடங்களில் நடைபெற்றன.

முதலாவது நிகழ்வு மன்னார் எழுத்தூர் பாடசாலையிலும், இரண்டாவது நிகழ்வு அடம்பன் பாடசாலையிலும் இடம் பெற்றன. இதன்போது தெரிவுசெய்யப்பட்ட ஒரு தொகுதி மாணவர்களுக்கு ஒரு வருடத்துக்குத் தேவையான கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட மன்னாரின் கல்விக்குரல் அமைப்பின் தலைவர் எஸ்.எம்.டிலான் உரையாற்றுகையில்:-

கடந்த 3 ஆண்டுகளாகச் சேவையாற்றிவரும் மன்னாரின் கல்விக்குரல் அமைப்பால் இந்த வருடம் சுமார் 3 ஆயிரம் மாணவர்கள் நன்மையடையவுள்ளனர்.

இந்த நிலையில், இந்த முறை ஒரு தொகுதி மாணவர்களுக்கு ஓர் ஆண்டுக்குத் தேவையான பெறுமதியான அனைத்து கற்றல் உபகரணங்களும் வழங்கப்படுகின்றன.

மாணவர்கள் பொழுதுபோக்கு அம்சங்களைக் குறைத்துக் கொண்டு தங்களின் குடும்ப நிலையையும் கருத்தில் கொண்டு கல்வி கற்க வேண்டும்.

எம்முடன் இணைந்து கொண்ட ஒவ்வொரு பிள்ளைகளின் பாதுகாவலரும் பிள்ளைகளின் கற்றல் நடவடிக்கை தொடர்பில் அக்கறை காட்ட வேண்டும்.- என்றார்.

இந்த நிகழ்வில் பேசாலை பற்றிமா பாடசாலை அதிபர் அருட் சகோதரர் ஸ்டனிஸ்லோஸ், மன்னார் புனித சவேரியார் ஆண்கள் தேசிய கல்லூரியின் ஓய்வு பெற்ற அதிபர் ஜூட் பிஹிராடோ மற்றும் மன்னார் கல்விக் குரலின் உறுப்பினர்கள் உட்படப் பலர் கலந்து கொண்டனர். (ஐ)

# ஒதியமலை கிராமத்தில் மாதிரி வீட்டுத்திட்டம்

முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேச செயலகப் பிரிவுக்கு உட்பட்ட எல்லைக் கிராமமான ஒதியமலையில் புதிய மாதிரி வீட்டுத் திட்டம் ஒன்று அமைக்கப்படவுள்ளது.



தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையால் நடைமுறைப்படுத்தப்படும் இந்த வீட்டுத் திட்டத்தில் பயனாளிகளுக்குத் தலா அரை ஏக்கர் காணிகள் வழங்கப்பட்டு ஐந்து இலட்சம் ரூபா பெறுமதியான வீட்டுத்திட்டம் வழங்கப்படவுள்ளது. அடிப்படைத்தேவைகளை நிறைவேற்றும் வகையில் பயனாளிகளுக்குத் தலா ஒரு ஏக்கர் வயல் நிலங்களும் வழங்கப்படவுள்ளன.

இந்தத் திட்டத்தின் முதலாவது வீட்டுக்கான அடிக்கல் நடும் நிகழ்வு நேற்று முன்தினம் நண்பகல் இடம்பெற்றது.

இந்தநிகழ்வில்வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவருமான செல்வம் அடைக்கலநாதன் சிறப்பு அதி தியாக கலந்துகொண்டு அடிக்கல்லை நட்டு வைத்தார்.

இந்த நிகழ்வில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வினோநோகராதலிங்கம், தேசிய வீடமைப்பு அபிவிருத்திஅதி காரசபையின் முல்லைத் தீவு மாவட்ட முகாமையாளர் விஜித கமகே, தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் தொழிநுட்ப உத்தியோகத்தர், கிராம அலுவலர் அமைப்பின் பிரதிநிதிகள், பொது மக்கள் உட்படப் பலர் கலந்துகொண்டனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட எல்லைக் கிராமமான ஒதியமலையில் நடைபெற்ற படுகொலை நிகழ்வின் பின்னர் இந்தப் பகுதியில் மக்கள் குறைவாக உள்ளனர். இவ்வாறான வீட்டுத் திட்டங்கள் மூலம் இந்த எல்லைக் கிராமங்கள் பாதுகாக்கப்படும் என்று சமூக ஆர்வலர்கள் தெரிவிக்கின்றனர். (ஐ- 81)

# மீள் எழுச்சி கிராம வீட்டுத் திட்டத்துக்கு கரடிப்பிலவில் அடிக்கல் நடும் நிகழ்வு

ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்புட்ட பழம்பாசி கிராம அலுவலர் பிரிவிலுள்ள கரடிப்பிலவில் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் மீள் எழுச்சி கிராம வீட்டுத் திட்டத்துக்கு அடிக்கல் நட்டு வைக்கப்பட்டுள்ளது. இந்த அடிக்கல் நடும் நிகழ்வு நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் நாடாளுமன்றக் குழுக்களின் பிரதி தலைவருமான செல்வம் அடைக்கலநாதன் சிறப்பு அதிதியாகக் கலந்துகொண்டு அடிக்கல் நடும் நிகழ்வை ஆரம்பித்து வைத்தார்.

இந்த நிகழ்வில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வினோநோகராதலிங்கம், தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் முல்லைத்தீவு மாவட்ட முகாமையாளர் விஜித கே கமகே ஆகியோரும் கலந்து கொண்டனர். (ஐ-81)



# இறம்பைக்குளம் மகளிர் கல்லூரிக்கு வழங்கப்பட்ட காணி துப்புரவு

வவுனியா, ஜன.24

விமானப் படையினரால் பயன்படுத்தப்பட்டு வந்த வவுனியா இறம்பைக்குளம் மகளிர் கல்லூரி மைதானத்துக்குரிய காணியை துப்பரவு செய்து அளவீடு செய்யும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப் பட்டுள்ளன.

நாடாளுமன்ற உறுப்பினர் கே.கே.மஸ்தானின் முயற்சியால் இந்தச் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

வவுனியா இறம்பைக்குளம் மகளிர் கல்லூரி நீண்ட காலமாக மைதானம் இன்றி இயங்கி வந்தது.

அவர்களால் விளையாட்டு நடவடிக்கைக்குப் பயன்படுத்தப்பட்டு வந்த தனியார் காணிகள் இராணுவத்தின் விமானப் படையினரால் சுவீகரிக்கப்பட்டிருந்தது.



இராணுவத்தின் அனுமதி பெற்றே அந்த மைதானத்தில் இதுவரை காலமும் விளையாட்டு நிகழ்வுகள் இடம் பெற்று வந்தன.

இந்த நிலையில், அந்தக் காணியை பாடசாலை மைதானத்துக்கு வழங்குமாறு பாடசாலைச் சமூகம் தொடர்ச்சியாக கோரிவந்தது.

இந்த நிலையில், இது தொடர்பில் கவனம் செலுத்திய வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கே.கே.மஸ்தான், அந்தக் காணியை இராணுவத்திடம் இருந்து விடுவித்து பாடசாலைக்கு பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுத்திருந்தார்.

இராணுவத்தினருடனும் பேச்சு நடத்தியமையை அடுத்து, அவர்கள் அதனை வழங்க இணங்கியிருந்தனர்.

அதனடிப்படையில், மைதானக் காணியை அளவீடு செய்து துப்புரவு செய்யும் பணி தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதனை வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் கே.கே.மஸ்தான் நேரடியாகச் சென்று பார்வையிட்டார்.

(ஐ-100)

### பொலிஸார் தடியடி, கண்ணீர் புகைக்குண்டு வீச்சு, வான் நோக்கிச் சூடு:

# போர்க்களமாக மாறியது நேற்று மெரினா! கலைக்கப்பட்டனர் போராட்டக்காரர்கள்!!



சென்னை, ஜன.24

சென்னை, மெரினா கடற்கரையில் நடைபெற்றுவந்த ஏறுதழுவுதலுக்கு ஆதரவான போராட்டம் நேற்று பொலிஸ்-பொது மக்கள் மோதலாக மாறியது. அதையடுத்து தடியடி நடத்தியும், கண்ணீர்ப் புகைக் குண்டுகளை வீசியும், வானத்தை நோக்கி துப்பாக்கிச் சூடு நடத்தியும் போராட்டக் காரர்களை பொலிஸார் வலுக் கட்டாயமாகக் கலைத்துள்ளனர். இதனால் மெரினா போர்க்களமாக மாறியது.

ஏறுதழுவுதல் போட்டிகளை நடத்த நிரந்தர சட்டம் இயற்ற வேண்டும் என்ற கோரிக்கையுடன் ஏறுதழுவு தலுக்கான ஆதரவாளர்கள் சென்னை மெரினா கடற்கரையில் தொடர் போராட்டம் நடத்தி வந்தனர்.

இந்தநிலையில் சென்னை பொலிஸ் ஆணையாளர் ஜோர்ஜ் உத்தரவுப்படி, போராட்டக்காரர்களைக் கலைந்து செல்லுமாறு நேற்றுக் காலை தொடக்கம் பொலிஸார் அறிவுறுத்தி வந்தனர். ஆனால், அங்கிருந்து கலைந்து செல்ல மறுத்தனர்.

போராட்டத்தைக் கைவிட முடியாது என்றும், தங்களால் உடனடியாக எந்த முடிவும் எடுக்க முடியாது என்றும் இளைஞர்கள் தெரிவித்தனர். மேலும் மெரினாவில் ஆங்காங்கே கூட்டமாக இளைஞர்களும், பெண்களும் கடலில் இறங்கியும் போராட்டத்தைத் தொடர்ந்தனர்.

எங்களை நெருங்கி வந்து கலைக்க முயற்சித்தால் நாம் கடலுக்குள் சென்று விடுவோம் என்றும் அவர்கள் பொலிஸாரிடம் கூறினர். அதை அடுத்து பெண்களையும், குழந்தைகளையும் பொலிஸார் வலுக்கட்டாயமாக வெளியேற்றினர்.

இதற்கிடையே, நேற்றுக் காலை 9 மணியளவில் சென்னை திருவல்லிக்கேணி வீதி வழியாக மெரினா கடற்கரையை நோக்கிச் செல்ல முயன்ற சில போராட்டக் காரர்களைப் பொலிஸார் தடியடி நடத்தி விரட்டியடித்தனர்.

திருவல்லிக்கேணி, ஐஸ் அவுஸ் பகுதிகளில் பரபரப்பும் பதற்றமும் ஏற்பட்டது. போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் கற்களை வீசி தாக்குதல் நடத்தினர்.

வன்முறையின் உச்சக் கட்டமாக 'ஐஸ் அவுஸ்' பொலிஸ் நிலையம் தீ வைத்து எரிக்கப்பட்டது.

அவ்வழியாக மெரினா கடற்கரைக்குச் செல்ல முயன்ற ஏறுதழுவுதல் ஆர்வலரும் நடிகருமான ராகவா லாரன்ஸ் உட்பட பலர் திருப்பி அனுப்பப்பட்டனர்.

இதற்கிடையே, கடற்கரையை ஒட்டியுள்ள மீனவ குப்பங்களைச் சேர்ந்த ஒரு பிரிவினர் போராட்ட களத்தில் குதித்தனர். திருவல்லிக்கேணி மற்றும் பெசன்ட் நகர் பகுதியில் பொலிஸார் மீது சிலர் தண்ணீர் போத்தல்களையும், கற்களையும் வீசி தாக்குதல் நடத்தினர்.

தங்கள் மீதான தாக்குதலுக்குப் பயன்படுத்தப்பட்ட பொருள்களைக் கொண்டே பொலிஸாரும் எதிர்த்தாக்குதல் நடத்தினர். சில பெண் பொலிஸார் அந்தப்பகுதியில் உள்ள வீடுகளின் மீது கற்களை எறிந்து தாக்கினர். இந்த மோதலில் பொலிஸார் ஐவர் காயமடைந்தனர்.

நிலைமை கைமீறிப் போனதால் வானத்தை நோக்கி பொலிஸார் துப்பாக்கிச் சூடு நடத்தினர். அதன் பின்னரும் போராட்டக்காரர்கள் கலைந்து போக மறுத்தனர். இதனால் கண்ணீர்ப் புகைக் குண்டுகளை பொலிஸார் பிரயோகித்துள்ளனர்.

இதனால், மெரினா கடற்கரை மற்றும் சுற்றுப்புற பகுதிகள் போர்க்களமாக மாறியது.

அதையடுத்து கடற்கரைக்குச் செல்லும் அனைத்துப் பாதைகளும் முடக்கப்பட்டுள்ளன என்றும் தெரியவந்துள்ளது.

**போராட்டத்தைக் கைவிட வேண்டுகோள்**

மாணவர்கள், இளைஞர்கள் ஏறுதழுவுதல் போராட்டத்தைக் கைவிட வேண்டும் என்று மத்திய இணை அமைச்சர் பொன்.ராதாகிருஷ்ணன், தமிழக பா.ஜ.க. தலைவர் தமிழிசை சவுந்தரராஜன், அ.தி. மு.க. பொதுச் செயலாளர் சசிகலா உள்ளிட்ட பலர் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (எ)

## போராட்டத்தைக் கைவிடோம்; மாணவர்கள் திட்டவட்டம்



சென்னை, ஜன.24

பொலிஸாரின் வேண்டுகோளை ஏற்கமறுத்த இளைஞர்கள் மற்றும் மாணவர்கள் போராட்டத்தைக் கைவிடமாட்டோம் என்று திட்டவட்டமாகத் தெரிவித்தனர்.

ஏறு தழுவுதலுக்கு ஆதரவாக மெரினா கடற்கரையில் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மாணவர்கள் மற்றும் இளைஞர்கள் அவர்களது போராட்டத்தைக் கைவிட்டு கலைந்து செல்லுமாறு பொலிஸார் வேண்டுகோள் விடுத்திருந்தனர்.

இந்தநிலையில், பொலிஸாரின் வேண்டுகோளை ஏற்க மறுத்த இளைஞர்கள் போராட்டத்தை கைவிடமாட்டோம் என்று திட்டவட்டமாகத் தெரிவித் தனர்.

தற்காலிகத் தீர்வு எங்களுக்கு வேண்டாம் என்றும் நிரந்தரத் தீர்வு தான் வேண்டும் என்றும் அவர்கள் கூறினர்.

மேலும், அடுத்த கட்ட நடவடிக்கை குறித்து இன்று அறிவிக்கப்படும். அடுத்த அறிவிப்பு வெளியாகும் வரை போராட்டம் தொடரும் என்று அவர்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சென்னை மெரினாவில் மட்டுமல்லாமல் மதுரை அலங்கா நல்லூர், புதுச்சேரி உள்ளிட்ட தமிழகத்தின் பல்வேறு இடங்களிலும் இதே கருத்துத்தான் நிலவி வருகிறது. (எ)

## பெப். முதலாம் திகதி அலங்கா நல்லூரில் ஏறு தழுவுதல்!

மதுரை, ஜன.24

மதுரை மாவட்டம் அலங்கா நல்லூரில் அடுத்த மாதம் முதலாம் திகதி ஏறுதழுவுதல் நடத்த கிராம மக்கள் குழுவினர் முடிவு செய்துள்ளனர்.

நேற்றுக் காலை அலங்கா நல்லூரில் நடைபெற்ற மக்கள் குழுக் கூட்டத்தில் ஏறுதழுவுதல் போட்டியைக் காண வரும் மாணவர்களுக்கும், இளைஞர்களுக்கும் தனி இடவசதி செய்து தரப்படும் என்றும் முடிவு செய்யப்பட்டது.

அதன்பின்னர், அடுத்த மாதம் முதலாம் திகதி அலங்காநல்லூரில் ஏறுதழுவுதல் போட்டி நடத்துவது என்று மக்கள் குழுவும் விழாக் குழுவும் முடிவு செய்து, அதற்கான தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

இந்தத் தீர்மானத்தில் கையெழுத்திட்ட கிராம மக்கள், ஏறுதழுவுதல் போட்டியை நடத்தத் தேவையான ஏற்பாடுகளை மேற்கொள்ள மாவட்ட ஆட்சியாளர் வீரராகவராவுக்கு கடிதம் அனுப்பவும் முடிவு செய்துள்ளனர். (எ)

## போராட்டக்காரர்கள் மத்தியில் தேசவிரோத சக்திகள் ஊடுருவல்

### பொலிஸார் எச்சரிக்கை



சென்னை, ஜன.24

ஏறு தழுவுதலுக்கு ஆதரவாகப் போராட்டம் நடத்தி வரும் போராட்டக்காரர்கள் மத்தியில் தேசவிரோத சக்திகள் ஊடுருவி உள்ளன என்று பொலிஸார் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

மெரினா கடற்கரையில் திரண்டிருக்கும் போராட்டக் காரர்களை அப்புறப் படுத்துவதற்காகக் கூடுதல் பொலிஸ் ஆணையாளர், துணை பொலிஸ் ஆணையாளர் ஆகியோர் தொடர்ந்து பேச்சில் ஈடுபட்டு வந்தனர்.

ஆனால் போராட்டக்காரர்கள் எதையும் காதில் வாங்கவில்லை.

இது பற்றி பொலிஸ் துணை ஆணையாளர் தெரிவித்தவை வருமாறு;


அமைதியான அற்புதமான போராட்டத்தை நடத்தி மாணவர்கள் வெற்றி பெற்றுள்ளார்கள். ஆனால், போராட்டக்காரர்கள் மத்தியில் தேசவிரோத சக்திகள் ஊடுருவி உள்ளன.

இதனால் போராட்டம் திசை திரும்பும் சூழ்நிலை உருவாகி இருந்தமையால் அவர்களைக் கலைந்து செல்லுமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

அதற்கான கால அவகாசமும் கொடுக்கப்பட்டது. ஆனால், போராட்டக்காரர்கள் தொடர்ந்து கடற்கரையில் திரண்டு இருக்கிறார்கள். அவர்களிடம் இப்போதும் நாம் கூறுவது அமைதியாகக் கலைந்து செல்லுங்கள் என்பதுதான்.''-என்றார். (எ)

காலைக்கதிர் Kalaikkathir


## ட்ரம்பை முதலில் சந்திக்கவுள்ள உலகத் தலைவராக தெரேசா மே





வொஷிங்டன், ஜன.24

அமெரிக்காவின் புதிய ஜனாதிபதியாகப் பதவி யேற்றுள்ள டொனால்ட் ட்ரம்பை, பிரிட்டன் பிரதமர் தெரேசா மே சந்திக்கவுள்ளார்.

ஜனாதிபதியாகப் பதவியேற்ற பின்னர் முதல் முறையாக டொனால்ட் ட்ரம்ப் சந்திக்கும் முதலாவது வெளிநாட்டுத் தலைவராக தெரேசா மே பதிவாகியுள்ளார்.

ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து வெளியேறிய பின்னரான சுதந்திர வர்த்தக உடன்படிக்கை குறித்து இந்தச் சந்திப்பில் அதிக கவனம் செலுத்தப்படலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ட்ரம்ப், ஜனாதிபதியாகப் பொறுப்பேற்றமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து உலகளாவிய ரீதியில் பல்லாயிரக்கணக்கான பெண்கள் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இந்த நிலையில் மே உடனான சந்திப்பு குறித்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.

வெள்ளை மாளிகையில் நேற்று முன்தினம் நடைபெற்ற தனது முதலாவது ஊடக சந்திப்பில் தெரேசா மேயின் விஜயம் தொடர்பான தகவல்களை ஊடகச் செயலாளர் சீன் ஸ்பென்சர் வெளியிட்டுள்ளார்.

ட்ரம்புக்கும் தெரேசா மேக்குக்கும் இடையிலான சந்திப்பில் நேட்டோ, ஐரோப்பிய ஒன்றியம், பாதுகாப்பு மற்றும் ரஷ்ய குறித்த விடயங்கள் தொடர்பிலும் கலந்துரையாடப்படலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

## ஏமனில் மோதல்கள் உக்கிரம் இரு தரப்பிலும் 70 பேர் பலி!

சனா, ஜன.24

ஏமன் நாட்டில் கிளர்ச்சியாளர்கள் மற்றும் அரசு தரப்புப் படைகள் இடையே தொடர்ந்து கடும் மோதல் நடைபெற்று வருகின்றது. இரு தினங்களாக நடைபெற்ற உக்கிர மோதலில் 70 பேர் உயிரிழந்தனர்.

ஏமனில் அரசுக்கும், ஹவுதி கிளர்ச்சியாளர்களுக்கும் இடையே 2015 ஆம் ஆண்டு மார்ச் மாதம் தொடக்கம் உள்நாட்டுப் போர் நடைபெற்று வருகிறது.

தலைநகர் சனா மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளையும் ஹவுதி கிளர்ச்சியாளர்கள் கைப்பற்றித் தனி அரசு நடத்தி வருகின்றனர்.

எனவே, ஜனாதிபதி மன்சூர் ஹாதி ஏமனை தலைநகராகக் கொண்டு ஆட்சி நடத்தி வருகிறார். இவருக்குச் சவூதி ஆதரவு கூட்டுப்படைகள் ஆதரவு அளித்துள்ளன.

### சவூதி தலைமையிலான கூட்டுப்படை வான் தாக்கு



இதனால் கிளர்ச்சியாளர்களுக்கும், சவூதி கூட்டுப் படை ஆதரவு பெற்ற இராணுவத்துக்கும் இடையே கடும் சண்டை நடைபெற்று வருகின்றது. 21 மாதங்களாக நடைபெறும் உள்நாட்டுப் போரில் இதுவரை 10 ஆயிரம் பேர் பலியாகி உள்ளனர்.

இந்தநிலையில், ஏமனில் கடந்த இரண்டு நாள்களாக கிளர்ச்சியாளர்கள் மற்றும் அரசு தரப்புப்படைகள் இடையே நடைபெற்ற கடுமையான மோதலில் 70 பேர் உயிரிழந்தனர்.

சவூதி தலைமையிலான கூட்டுப் படை அல்-மந்தப் பகுதியில் வான்வெளித் தாக்குதலை நடத்தியது. இந்தத் தாக்குதலில் கிளர்ச்சியாளர்கள் தரப்பில் 52 பேர் கொல்லப்பட்டனர். அதில் அரசு தரப்புப் படையைச் சேர்ந்த 14 பேர் பலியாகினர் என்று தெரிவிக்கப்படுகின்றது. (எ)



தென் அமெரிக்கப் பிராந்தியத்தில் ஏற்பட்டுள்ள சூறாவளி காரணமாக 16 பேர் உயிரிழந்தனர். அத்துடன் இந்தச் சீரற்ற காலநிலையால் நூற்றுக்கணக்கானவர்கள் காயமடைந்தனர். இதனால், தென் அமெரிக்காவின் 7 பிராந்தியங்களில் அவசர நிலைமை பிரகடனம் செய்யப்பட்டுள்ளது என சர்வதேசத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (எ)

## தவறான செய்தி வெளியிட்டோர் விளைவுகளைச் சந்திக்க நேரும்

### ஊடகங்களை எச்சரிக்கிறார் ட்ரம்ப்

வொஷிங்டன், ஜன.24

"எனது பதவி ஏற்பு விழாவில் பொதுமக்கள் குறைந்தளவில் பங்கேற்றனர் என்று தவறான தகவல் அளித்த ஊடகங்கள் அதன் விளைவுகளைச் சந்திக்க வேண்டி இருக்கும் என்று அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

அமெரிக்காவின் 45 ஆவது ஜனாதிபதியாக டொனால்ட் ட்ரம்ப் கடந்த வெள்ளிக்கிழமை பதவி ஏற்றுக் கொண்டார். பதவி ஏற்பு விழாவில் பொதுமக்கள் குறைவாக வருகை தந்திருந்தனர் என்று ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. இது ட்ரம்புக்கு கோபத்தை ஏற்படுத்தி உள்ளது. அவர் அளித்த பேட்டியில் தெரிவித்தவை வருமாறு:

"ஊடகங்களுக்கும் எனக்கும் யுத்தம் நடைபெறுகிறது. பூமியில் பத்திரிகையாளர்கள் மிகவும் நேர்மையற்ற மனிதர்கள். பதவியேற்பைக் காண 2 லட்சத்து 50 ஆயிரம் பேர் வந்திருந்தனர். எனவே, தவறான செய்தியை வெளியிட்டவர்கள் அதன் விளைவுகளைச் சந்திக்க வேண்டி இருக்கும்." என்றார்.

இதற்கிடையே, ட்ரம்புக்கு எதிர்ப்புத் தெரிவித்து வொஷிங்டனில் இருந்து நியூயோர்க் வரை 10 லட்சம் பேர் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

இதில் கலந்து கொண்டவர்கள் ட்ரம்ப்புக்கு எதிராகக் கோஷமிட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (எ)

## பிரிட்டனின் 'ரைய்டன்ட்' ஏவுகணை சோதனை முயற்சி தோல்வியில்!

லண்டன், ஜன.24

பிரிட்டன் மேற்கொண்ட 'ரைய்டன்ட்' ஏவுகணைப் பரிசோதனை தோல்வி அடைந்துள்ளது.

எனினும் தமது நாட்டின் அணு ஆயுதக் கட்டமைப்பு தொடர்பில் நம்பிக்கை உள்ளது எனப் பாதுகாப்பு அமைச்சு கூறியுள்ளது.

ஆயுதங்கள் அற்ற ரைய்டன்ட் ஏவுகணை ஏச்.எம்.எஸ் வென்ஜென்ஸ் என்ற நீர்மூழ்கிக் கப்பலில் இருந்து சோதனை செய்யப்பட்டது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

'ரைய்டன்ட்' ஏவுகணையின் எதிர்காலப் பயன்பாடு குறித்து நாடாளுமன்றத்தில் முக்கிய வாக்கெடுப்பு நடத்தப்படுவதற்குச் சில வாரங்களுக்கு முன்னதாக இந்தச் சோதனை நடத்தப்பட்டுள்ளது.

இந்தப் பரிசோதனையின் செயன்முறை விவரங்களைப் பாதுகாப்பு அமைச்சு வெளியிடாத போதிலும், அது வெற்றிகரமாக அமைந்தது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ரைய்டன்ட் ஏவுகணைகளைப் புதுப்பிக்கும் நடவடிக்கைக்குக் கடந்த ஆண்டு ஜூன் மாதம் பிரிட்டன் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆதரவாக வாக்களித்திருந்தனர்.

இந்தநிலையில் நாடாளுமன்ற உறுப்பினர்களின் கேள்விகளுக்குப் பாதுகாப்பு அமைச்சர் மைக்கல் பலன் பதில் அளிப்பார் என்று எதிர்பார்க்கப்படுவதாக அந்த நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (எ)

### ட்ரம்ப் ஜனாதிபதியாகப் பதவி ஏற்றதை அடுத்து

## ஜெருசலேமில் புதிய குடியேற்றங்கள் அமைக்க அனுமதித்தது இஸ்ரேல்!

ஜெருசலேம், ஜன.24

பலஸ்தீனத்திடம் இருந்து கைப்பற்றப்பட்ட கிழக்கு ஜெருசலேமில் நூற்றுக்கணக்கான குடியேற்றங்களை அமைப்பதற்கு ஜெருசலேம் நகர சபை அனுமதி வழங்கியுள்ளது.

இதன்பிரகாரம் மூன்று பிரிவுகளில் 560 இற்கும் அதிகமான வீடுகள் நிர்மாணிக்கப் படவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் புதிய ஜனாதிபதியாக டொனால்ட் ட்ரம்ப், பதவியேற்று மூன்று நாள்கள் கடந்துள்ள நிலையில் இஸ்ரேலின் இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.

அமெரிக்காவில் ஒபாமா நிர்வாகம் முடிவுக்குவரும் வரை இதற்கான அனுமதியை வழங்குவதை இடை நிறுத்தி வைத்திருந்ததாக ஜெருசலேம் நகரத் தலைவர் கூறியுள்ளார். பலஸ்தீனத்திடம் இருந்து கைப்பற்றப்பட்ட பகுதிகளில் குடியேற்றங்களை அமைப்பதைத் தடுக்கும் தீர்மானம் ஐக்கிய நாடுகளின் பாதுகாப்புப் பேரவையில் நிறைவேற்றப்பட்டிருந்தது.

அமெரிக்காவின் ஜனாதிபதியாக ஒபாமா இருந்த போது கொண்டுவரப்பட்ட இந்தத் தீர்மானத்துக்கு எதிராக வீட்டோ அதிகாரத்தைப் பயன்படுத்துவதை அமெரிக்கா தவிர்த்திருந்தமை இருதரப்பு உறவில்



விரிசலை ஏற்படுத்தியது.

எனினும் இஸ்ரேலுக்கு ஆதரவாகத் தான் செயற்பட போகிறார் என தற்போதைய புதிய ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் உறுதி அளித்த நிலையில், புதிய குடியேற்றத் திட்டங்களை அமைப்பதற்கு ஜெருசலேம் நகர சபை அனுமதி வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ)

# ஒத்த கருத்துடன் பயணிக்க நாம் ஒன்று சேர வேண்டும்

## வர்த்தகத்துறை அமைச்சர் ரிஷாத் பதியுதீன் தெரிவிப்பு

கொழும்பு, ஜன.24

நாம் இருக்கும் இடங்களிலிருந்து கொண்டு எமது சமுதாய நலனுக்கும், ஏனைய சமூகங்களுடன் சேர்ந்து வாழும் ஒற்றுமைக்கும், நாட்டு நலனுக்காகவும் எவ்வாறு செயற்படலாம் என்பது தொடர்பாக ஒத்த கருத்தோடு பயணிக்க நாம் அனைவரும் ஒன்றுபடவேண்டும்.

அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும், கைத்தொழில் மற்றும் வர்த்தகத்துறை அமைச்சருமான ரிஷாத் பதியுதீன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் ஏற்பாட்டில் மீடியா போரத்தின் முன்னாள் பொருளாளர் மர்ஹூம் எச்.எம். பாயிஸின் நினைவேந்தல் நிகழ்வும் பாத்திமா இஸ்ரா எழுதிய 'ஹொந்தம மித்துர' சிங்கள நூல் வெளியீடும் கொழும்பு ஜம்மியத்துல் ஷபாப் கேட்போர் கூடத்தில் மீடியா போரத்தின் தலைவர் என்.எம். அமீன் தலைமையில் அண்மையில் நடைபெற்றன.



இந்த நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இந்த நிகழ்வில் அவர் தொடர்ந்து உரையாற்றும் போது தெரிவித்தவை வருமாறு:

ஊடகவியலாளர்களும், கலைஞர்களும் எமது சமுதாயத்தைப் பொறுத்தவரையில் நிறைய ஆற்றல்களுடன் இருந்தாலும் அந்த ஆற்றல்களை நூறு வீதம் விரும்பிய முறையில், சரியான முறையில் பயன்படுத்த முடியாத துர்ப்பாக்கிய நிலையில் உள்ளனர்.

அரச ஊடகங்கள் மாத்திரம் இருந்த ஒரு யுகம் இருந்தது. அந்தக் காலங்களில் அரசியல் கட்சி அல்லது ஆட்சியில் இருப்போருக்கு எதிராகப் பேசமுடியாத நிலை இருந்தது. எனினும், சமுதாயம் சார்ந்த விடயங்கள் அல்லது சமுதாயத்துக்கு எதிராக அபாண்டமாகப் பேசப்படும் குற்றச்சாட்டுகளுக்கு பதில் அளிக்கக் கூடிய வாய்ப்புக்கள் இருந்துள்ளன. தற்போது தனியார் ஊடகங்கள் தலைதூக்கியுள்ளன.

அரசியல்வாதிகள், தனவந்தர்கள் அதேபோல் கல்விமான்கள், ஊடகவியலாளர்கள் எல்லோரும் ஒரு குடும்பமாக ஒன்று சேர்ந்து சமுதாய நலன்களுடைய விடயங்களிலே ஒத்த கருத்தோடு, கட்டமைப்போடு செயற்பட வேண்டிய தேவைப்பாடு இந்தச் சமுதாயத்துக்கு உள்ளது.

அந்த வகையில் நம் நாட்டிலே அதிகமாகப் பேசப்படும் மொழி சிங்களம். சுதந்திரத்துக்கு முன்னைய காலத்திலிருந்தே இஸ்லாமிய சமூகம், பெரும்பான்மை சிங்கள சமுதாயத்தோடு ஒற்றுமையாக வாழ்ந்த வரலாறும் உள்ளது.

ஒத்த கருத்தோடு இந்த நாடு பிளவுபட்டு விடக் கூடாது என்று எங்களுடைய முன்னாள் தலைவர்களெல்லாம் ஏனைய தலைவர்களோடு சேர்ந்து போராடியமை போல், சுதந்திரத்துக்குப் பின்னர் இருந்து மரணித்த பல தலைவர்களும் நாட்டின் ஒருமைப்பாட்டுக்காக, ஒற்றுமைக்காக நாட்டின் நலனுக்காக உழைத்திருக்கிறார்கள்.- என்றார். (ஐ)

### அத்துரலிய தேரரின் வெற்றிடத்துக்கு ஐ.தே.கவில் பனிப்போர்!

ஐக்கிய தேசியக் கட்சியின் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினரான அத்துரலிய ரத்ன தேரர் நாடாளுமன்றத்தில் சுயாதீனமாகச் செயற்படப்போகிறார் என்று அண்மையில் அறிவித்துள்ள நிலையில், அவரது இடத்துக்கு ஐக்கிய தேசியக் கட்சியின் பிரபலங்கள் சிலருக்கிடையில் பனிப்போர் இடம்பெற்று வருகிறது என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

ரத்தன தேரர் சுயாதீனமாகச் செயற்பட முடிவெடுத்த பின் அவரது இடம் ஐக்கிய தேசியக் கட்சியில் அர்ப்பணிப்புடன் செயற்பட்டுவரும் ஒரு வருக்கே வழங்கப்படவேண்டும் என்று ஒரு சாரார் பிடிவாதமாக இருக்கின்றனர் என்று தெரியவருகின்றது.

இது தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சியின் மத்திய நிறைவேற்றுக் குழுவில் கலந்துரையாடப்பட்டுள்ளது என்றும் கட்சித் தலைவரும் பிரதமருமான ரணில் விக்கிரமசிங்கசுவிஸ் பயணத்தை முடித்துவிட்டு நாடு திரும்பியதும் இறுதித் தீர்மானம் எடுக்கப்படும் எனவும் ஐக்கிய தேசியக் கட்சி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (ஐ)

### மன்னாரில் நாளை சில இடங்களில் மின்சாரத்தடை

யாழ்ப்பாணம், ஜன.24

மன்னார் பிரதேசத்தில் சாந்திபுரம் நானாட்டானில் இருந்து அச்சங்குளம் வரை, எருவிட்டான் ஆகிய இடங்களில் நாளை புதன்கிழமை காலை 8.30 மணி முதல் மாலை 5 மணிவரை மின்சாரம் தடைப்படும் என்று மின்பொறியியலாளர் அறிவித்துள்ளார். (இ)

### கொள்ளையர்கள் மீது துப்பாக்கிச் சூடு; ஒருவர் படுகாயம்!

கொழும்பு, ஜன.24

கடுவலை - வெலிவிட்ட பிரதேசத்தில் தொலைத் தொடர்பு சேவைகள் வழங்கு நிறுவனம் ஒன்றில் கொள்ளையிட்டு தப்பிச்சென்ற நபரொருவர் மீது பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டுள்ளனர்.

இதன்போது காயமடைந்த 27 வயதான சந்தேக நபர், தற்போது பொலிஸ் பாதுகாப்பின் கீழ் முல்லேரியா மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

நேற்று முன்தினம் இரவு இந்த நபர் உட்பட மேலும் இரண்டு பேர் அந்த நிறுவனத்தில் நுழைந்து உரிமையாளரான பெண்ணிடம் கத்தியொன்றைக் காட்டி மிரட்டி தங்க நகைகள், கையடக்கத் தொலைபேசிகள் மற்றும் பணம் என்பவற்றைக் கொள்ளையிட்டுள்ளனர்.

இதன்போது எதிர்பாராத விதமாக அங்கு வந்த பொலிஸார், தப்பி ஓடிய சந்தேக நபர்களைக் கைது செய்ய முற்பட்டனர். இதன்போது மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் ஒருவர் காயமடைந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ஐ)

### பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம், ஜன.24

கொட்டடி சனசமூக நிலையத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் எதிர்வரும் 29 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு சனசமூக நிலையத்தில் இடம்பெறவுள்ளது.

2016 ஆம் ஆண்டுக்கான ஆண்டறிக்கை வாசிக்கப்படுவதுடன் 2017 ஆம் ஆண்டுக்கான புதிய நிர்வாக உறுப்பினர்களும் தெரிவுசெய்யப்படவுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.(ஐ-21)

### இலங்கை பிரஜை ஒருவர் குவைத் நாட்டில் கைது!

சட்ட விரோதமான முறையில் மதுபான போத்தல்கள் வைத்திருந்த இலங்கை பிரஜை ஒருவர் குவைத் நாட்டில் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்ட இலங்கைப் பிரஜையிடம் இருந்து 64 மதுபான போத்தல்கள் மீட்கப்பட்டுள்ளன என்று அந்த நாட்டு தகவல்கள் தெரிவிக்கின்றன.

கைதுசெய்யப்பட்டவர் சந்தேகத்துக்கு உரிய வகையில் சொகுசுக் கார் ஒன்றில் நீண்ட நேரம் அமர்ந்திருந்த நிலையில், அந்த நாட்டு பாதுகாப்பு தரப்பினர் சோதனைகளை மேற்கொண்டுள்ளனர்.

இதன்போ, அவரிடம் இருந்து மதுபான போத்தல்கள் மீட்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

### கொழும்புக் கோட்டைப் பகுதியில் தகராறு செய்த சீனப் பிரஜை கைது!

கொழும்புக் கோட்டைப் பகுதியில் உள்ள உணவகம் ஒன்றில் ஏற்பட்ட தகராறு தொடர்பாக சீனப் பிரஜை ஒருவர் நேற்று முன்தினம் இரவு கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸாருக்குக் கிடைத்த தகவல் ஒன்றை அடுத்து இந்த சீனப் பிரஜை கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று கோட்டைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தகராறில் ஏற்பட்ட மோதல் காரணமாகக் காயமடைந்த சிலர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்டுள்ள சீனப் பிரஜை நேற்று கோட்டை நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தப்பட்டார். கோட்டை பொலிஸார் சம்பவம் தொடர்பான விசாரணைகளை நடத்தி வருகின்றனர். (ஐ)

# ஊழலில் ஈடுபடும் அரசியல்வாதிகளை காப்பாற்ற நடவடிக்கை எடுக்கப்படாது

## ராஜாங்க அமைச்சர் சுஜீவ சேனசிங்க தெரிவிப்பு

கொழும்பு, ஜன.24

ஊழல் மோசடிகளில் ஈடுபடும் அரசியல்வாதிகளைக் காப்பாற்ற நடவடிக்கை எடுக்கப்பட மாட்டாது என்று ராஜாங்க அமைச்சர் சுஜீவ சேனசிங்க தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு;

ஊழல் மோசடிகளில் ஈடுபட்ட தரப்பினருக்கு எதிராகப் பொலிஸ் துறையும், நீதிமன்றமும் விசாரணை நடத்தி நடவடிக்கை எடுக்கும்.

தற்போதைய அரசு எந்தவகையிலும் நீதிமன்ற விசாரணைகளில் தலையீடுசெய்யாது.

கடந்த அரசின் ஆட்சிக்காலத்தில் நீதிமன்ற விசாரணைகளில் தலையீடு செய்யப்பட்டது. தற்போதைய அரசு அவ்வாறு தலையீடு செய்யாது.

இதேவேளை, வசீம் தாஜுதீனின் கொலை வழக்கு விசாரணைகள் துரிதப்படுத்தப்பட வேண்டும். இந்தக் கொலையை யார் செய்தார்கள் என்பது இரகசியமானதல்ல. இந்தக் கொலையுடன் மஹிந்த ராஜபக்ஷவுக்குத் தொடர்பு உண்டு.-என்றார். (எ)

### தனி நபரது பலத்தைப் பெற நடவடிக்கைகள் முன்னெடுப்பு

#### வாசுதேவ நாணயக்கார எம்.பி. குற்றச்சாட்டு

கொழும்பு, ஜன.24

நாட்டில் பலம் பகிரப்படுவதை விட, இதன் மூலம் ரணில் தலைமையிலான தனி நபரது பலத்தைப் பெற்றுக் கொள்வதற்கு முன்னெடுப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன என்று நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார குற்றஞ்சாட்டியுள்ளார்.

கொழும்பில் நேற்று இடம் பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

இவ்வாறான ஒரு நிலை ஏற்படுமாயின் அதற்கு எதிராகச் செயற்பட உள்ளோம்.

இதேவேளை, ஜனாதிபதியை அவமதிக்கும் செயற்பாடாகவே, அதிஷ்ட இலாபச் சீட்டு விடயத்தில் நிதியமைச்சரின் செயற்பாட்டைக் கருதுகிறோம்.

ஜனாதிபதி அதிஷ்ட இலாபச் சீட்டு விலையைக் குறைக்க ஆலோசனை கூறும்போது நிதியமைச்சர் 30 ரூபாவில் இருந்து 20 ரூபாவாகக் குறைக்க முடியாது என்று குறிப்பிட்டுள்ளார்.

எதிர்காலத்தில் மக்கள் நிலை என்ன என்பது தொடர்பாகச் சந்தேகம் ஏற்படுகிறது.

நாடாளுமன்றத்தில் கோப் அறிக்கை விவாதத்தைத் திசை திருப்பும் வகையில் ரணில் திட்டமிட்டுச் செயற்படுகிறார்.-என்றார். (ஐ)



# ஆயிரம் ஓட்டங்களைக் கடந்த நான்காவது இலங்கை வீரர்

# அஞ்சலோ மத்யூஸ்!

ஆயிரம் ஓட்டங்களைக் கடந்த நான்காவது இலங்கை வீரர் என்ற பெருமையை இலங்கை அணித் தலைவர் அஞ்சலோ மத்யூஸ் தனதாக்கிக் கொண்டுள்ளார்.

இவர் ஜோகன்னர்ஸ் பேர்க்கில் இடம்பெற்ற இலங்கை மற்றும் தென்னாபிரிக்கா அணிகளுக்கு இடையிலான இரண்டாவது இருபதுக்கு 20 போட்டியிலேயே இந்தச் சாதனையைத் தனதாக்கிக் கொண் டுள்ளார்.

இந்தப் போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றிப்பெற்ற தென்னாபிரிக்கா அணி முதலில் துடுப்பெடுத்தாடியது. இதன்படி, அந்த அணி 19.3 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 113 ஓட்டங்களை பெற்றது. பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 19.3 ஓவர்களில் 7 விக்கெட்டுக்களை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.

துடுப்பாட்டத்தில் ஆட்டமிழக்காமல் 54 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டார் அணித் தலைவர் அஞ்சலோ மத்யூஸ். அவர் போட்டியின் ஆட்டநாயகனாகத் தெரிவானார். மேலும், ஆயிரம் ஓட்டங்களைக் கடந்த நான்காவது இலங்கை வீரர் என்ற சிறப்பையும் பெற்றுள்ளார்.

இதன்படி, மூன்று போட்டிகள் கொண்ட இந்தத் தொடரில் ஒன்றுக்கு ஒன்று என்ற ரீதியில் இரு அணிகளும் சமநிலை பெற்றுள்ளன. அத்தோடு இலங்கை அணி இந்த ஆண்டில் முதல் வெற்றியைச்சுவீகரித்துக் கொண்டது.

இதன்மூலம் 3 போட்டிகள் கொண்ட இத்தொடரில் தற்போது இரு அணிகளும் 1:1 விகிதத்தில் சமநிலையில் உள்ளன.

## மத்யூஸ் நாடு திரும்புகிறார்?

கொழும்பு, ஜன.24

காயம் காரணமாக இலங்கை அணித் தலைவர் அஞ்சலோ மத்யூஸ் தென்னாபிரிக்காவிலிருந்து இலங்கைக்குத் திரும்புவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

தென்னாபிரிக்காவுக்கு எதிரான சர்வதேச இரண்டாவது இருபதுக்கு 20 நேற்று முன்தினம் தென்னாபிரிக்காவின் ஜோகன்னஸ்பேர்க் நகரில் நடைபெற்றது.

இதன்போது மத்யூஸின் காலில் காயம் ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாகவே அவர் நாடு திரும்பவுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

இருந்த போதிலும் அவர் தனிப்பட்ட காரணத்துக்காக நாடு திரும்பவுள்ளார் என்று ஸ்ரீலங்கா கிரிக்கெட் நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

இதன்படி எதிர்வரும் இருபதுக்கு 20 போட்டியில் தினேஸ் சந்திமால் இலங்கை அணியின் தலைவராகச் செயற்பட உள்ளார் என்றும் ஸ்ரீலங்கா கிரிக்கெட் நிறுவனம் தெரிவித்துள்ளது.

தென்னாபிரிக்காவுடனான அடுத்த இருபதுக்கு 20 போட்டி நாளை கேப்டவுனில் இடம்பெறவுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.





தைப்பொங்கல் தினத்தை முன்னிட்டு சாந்தை விநாயகர் விளையாட்டுக்கழகம் கிளித்தட்டு விளையாட்டுப் போட்டியை நடத்தியுள்ளது. இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வேலும்மயிலும் குகேந்திரன் கலந்து சிறப்பித்துள்ளார்.

## ஈரான் கர பந்தாட்ட போட்டியில் இலங்கை

கொழும்பு, ஜன.24

ஈரானில் நடைபெறவுள்ள 23 வயதுக்கு உட்பட்ட ஆண்கள் ஆசிய கர பந்தாட்டப் போட்டியில் இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தி அணி ஒன்றை களம் இறக்க இலங்கை கர பந்தாட்டச் சம்மேளனம் தீர்மானித்துள்ளது.

ஹெய்யன்துடுவ இளைஞர் சேவைகள் மன்ற கரபந்தாட்டப் பயிற்சி நிலையத்தில் இதற்கான போட்டிகள் நேற்று முன்தினம் நடைபெற்றுள்ளன.

பயிற்றுவிப்பு அமைப்பிலிருந்து வீரர்கள் இதற்காகத் தெரிவு செய்யப்படவுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# தேசிய மட்டத்தில் சாதனையை நிலைநாட்டிய கிளிநொச்சி மாவட்ட வீரர்கள் கௌரவிப்பு!

கிளிநொச்சி, ஜன.24

தேசிய மட்ட விளையாட்டுப் போட்டிகளில் சாதனையை நிலைநாட்டி தங்கம்,வெள்ளி, வெண்கலம் பதக்கங்களை வென்ற கிளிநொச்சி மாவட்ட வீர, வீராங்கனைகள் கௌரவிக்கப் பட்டுள்ளனர்.

இந்த நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை கிளிநொச்சியில் இடம்பெற்றது. நிகழ்வில் பிரதம விருந்தினராக கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் எஸ். சத்தியசீலன் கலந்து கொண்டார்.

இந்த நிகழ்வில் தேசிய மட்ட மேசைப் பந்தாட்டத்தில் தங்கம் வென்ற பாலகிருஷ்ணன் தனுசியா, வெள்ளிப் பதக்கம் வென்ற ரசீந்திரன் தமிழ்மகள் மற்றும் கோலூன்றிப் பாய்தலில் வெண்கலம்



வென்ற யோகநாதன் சுகிர்தா ஆகியோர் கௌரவிக்கப்பட்டுள்ளனர்.

இந்த வீரர்கள் தேசிய மட்டத்தில் சாதனை படைத்துள்ளனர். இது கிளிநொச்சிக்குப் பெருமை ஆகும் என்று மேலதிக அரச அதிபர் சத்தியசீலன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

கிளிநொச்சி மாவட்டத்தில் முதன் முதலாக றோல் போல் விளையாட்டை அறிமுகப்படுத்தி அதனை முதல் முதலாக நேரடியாகப் பார்க்கும் வாய்ப்பை ஏற்படுத்தித் தந்த ஏற்பாட்டாளருக்கு நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன்.

அத்துடன், கிளிநொச்சி மாவட்டத்துக்குப் பெருமை சேர்க்கும் வகையில் 2016 இல் தேசிய மட்டத்தில் மேசை பந்தாட்டத்தில் தங்கப் பதக்கம் வென்ற மாணவி பாலகிருஷ்ணன் தனுசியா, தேசிய மட்டத்தில் வெள்ளிப் பதகம் வென்ற ரசீந்திரன் தமிழ் மகள் மற்றும் கோலூன்றி பாய்தலில் வெங்கலப் பதக்கம் வென்ற யோகநாதன் சுகிர்தா ஆகியோரைக் கௌரவிக்கும் நிகழ்வும் பாராட்டத்தக்கது.

விளையாட்டுகளுக்கு பெற்றோர் அதிக ஊக்கத்தை வழங்கி வருகின்றனர். அது மகிழ்ச்சிக்குரியது. இந்த விளையாட்டு வீரர்களை நான் மனதாரப் பாராட்டுகிறேன்.

குறிப்பாக, றோல் போல் விளையாட்டில் இலங்கையின் தேசிய அணியில் கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த இரண்டு வீராங்கனைகள் உள்வாங்கப்பட்டுள்ளனர்.


அவர்கள் பங்களாதேஷ் நாட்டில் இடம்பெறுகின்ற உலக றோல் போல் போட்டியில் பங்குபற்றவுள்ளனர். அவர்களுக்கும் கிளிநொச்சி மாவட்டம் சார்பாக வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன் என்றும் தெரிவித்துள்ளார்.

(க-70,21)

# தொடரைக் கைப்பற்றியது நியூசிலாந்து; பங்களாதேஷ் அணி மீண்டும் தோல்வி!

கிறைஸ்ட்சர்ச், ஜன.24

பங்களாதேஷ் அணிக்கு எதிரான இரண்டாவது டெஸ்டில் 9 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்ற நியூசிலாந்து அணி, தொடரைக் கைப்பற்றியுள் ளது. நியூசிலாந்து சென் றுள்ள பங்களாதேஷ் அணி, இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொட ரில் பங்கேற்றது.



முதல் போட்டியில் நியூசிலாந்து வென்றது. இரண்டாவது டெஸ்ட் கிறைஸ்ட்சர்ச் நகரில் இடம்பெற்றது.

முதல் இன்னிங்ஸில் பங்களாதேஷ் 289 ஓட்டங்களை எடுத்தது. இரண்டாம் நாள் முடிவில் முதல் இன்னிங்ஸில் நியூசிலாந்து அணி 7 விக் கெட்டுகள் இழப்புக்கு 260 ஓட்டங்களை எடுத்திருந் தது. மூன்றாம் நாள் ஆட்டம் நேற்று முன்தினம் மழை காரணமாக கைவிடப் பட்டது.

நான்காம் நாள் ஆட்டம் நேற்று இடம்பெற்றது. முதல் இன்னிங்ஸைத் தொடர்ந்த நியூசிலாந்து அணிக்கு டிம் சவுத்தீ (17 ஓட்டங்கள்) ஏமாற்றினார். அபாரமாக ஆடிய ஹென்றி நிகோல்ஸ் (98 ஓட்டங்கள்) சதமடிக்கும் வாய்ப்பை இழந்தார்.

வோக்னர் (26 ஓட்டங் கள்) ஆட்டமிழந்தார். முதல் இன்னிங்ஸில் நியூசிலாந்து அணி 354 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது . பவுல்ட் (7 ஓட்டங்கள்) ஆட்டம் இழக்காமல் இருந்தார். பங்களாதேஷ் சார்பில் சாகிப் அல்ஹசன் 4 விக் கெட்டுகளை வீழ்த்தினார்.

பின் இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்த பங்களாதேஷ் அணி, நியூசிலாந்தின் பந்துவீச்சில் திணறியது.

சவுத்தீ வேகத்தில் தலைவர் தமிம் இக்பால் (8 ஓட்டங்கள்), சாகிப் அல் ஹசன் (8 ஓட்டங்கள்), ருபெல் ஹொசைன் (7 ஓட்டங்கள்) ஆட்ட மிழந்தனர். பவுல்ட் பந்தில் நஜ்முல் ஹொசைன் ஷான்டோ (12 ஓட்டங் கள்), மெஹதி ஹசன் மிராஸ் (4 ஓட்டங்கள்) வெளியேறினர்.

வோக்னர் பந்தில் சபீர் ரஹ்மான், நுருல் ஹசன் 'டக்-அவுட்' ஆனார்கள். டஸ்கின் அகமது (33 ஓட்டங்கள்), கம்ருல் இஸ்லாம் ரபி (25 ஓட்டங்கள்) ஆறுதல் தந்தனர்.

இரண்டாவது இன்னிங் ஸில் பங்களாதேஷ் அணி 173 ஓட்டங்களில் சுருண் டது. நியூசிலாந்து சார்பில் சவுத்தீ, பவுல்ட், வோக்னர் தலா 3 விக்கெட்டுகள் கைப்பற்றினர்.

பின், 109 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற சுலப இலக்குடன் 2 ஆவது இன்னிங்ஸை ஆரம்பித்தது நியூசிலாந்து அணி. ஜீத் ரவால் (33 ஓட்டங் கள்) கைகொடுத்தார். பின் இணைந்த டாம் லதாம் (41 ஓட்டங்கள்), கிராண்ட் ஹோம் (33 ஓட்டங்கள்) அணியை வெற்றிக்கு அழைத்துச் சென்றனர்.

இரண்டாவது இன்னிங் ஸில் நியூசிலாந்து அணி ஒரு விக்கெட்டுக்கு 111 ஓட்டங்களை எடுத்து வெற்றி பெற்றது.

ஆட்டநாயகன் விருதை நியூசிலாந்தின் சவுத்தீ வென் றார். இந்த வெற்றியின்மூலம் இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரை நியூசிலாந்து அணி 2-0 என முழுமையாகக் கைப்பற்றி கிண்ணத்தை வென்றுள்ளது.

## 17 போட்டிகளில் 1000 ஓட்டங்கள்: விராட் கோஹ்லி புதிய சாதனை

கொல்கத்தா, ஜன.24


விராட் கோஹ்லி அணித்தலைவராக இருந்து 17 போட்டிகளில் 1000 ஓட்டங்களைக் கடந்து புதிய சாதனை புரிந்துள்ளார்.

இதன்மூலம் தென்னா பிரிக்க அணியின் தலைவர் டி வில்லியர்ஸ் சாதனையை அவர் முறிய டித்துள்ளார். டி வில்லி யர்ஸ் 18 போட்டிகளில் இந்தச் சாதனையை புரிந்து உள்ளார்.

இங்கிலாந்து அணியின் தலைவர் குக் 21 போட்டி களிலும், வில்லியம்ஸ் 20 போட்டிகளிலும் இந்தச் சாதனையை நிகழ்த்தி இருந்தனர்.

இங்கிலாந்து அணிக்கு எதிரான மூன்றாவது ஒரு நாள் போட்டியில் கோஹ்லி 55 ஓட்டங்களை எடுத் ததன் மூலம் இந்தச் சாத னையைப் புரிந்துள்ளார்.

## இந்தியா, இங்கிலாந்து அணிகள் சாதனை!



கொல்கத்தா, ஜன.24

இந்தியா-இங்கிலாந்து இடையேயான 3 ஒரு நாள் தொடரில் மொத்தம் 2090 ஓட்டங்கள் குவிக்கப்பட் டுள்ளன.

3 போட்டிகள் கொண்ட ஒரு நாள் தொடரில் இவ்வளவு அதிகமான ஓட்டங்கள் குவிக்கப் படுவது இதுவே முதல் முறையாகும். இதற்கு முன்னர் ஆசியக் கோப்பையில் 1892 ஓட்டங்களும், இந்தியா - தென்னாபிரிக்கா அணிகள் மோதிய 3 ஒரு நாள் தொடரில் 1884 ஓட்டங்களும் குவிக்கப் பட்டு இருந்தன.

இந்த 2090 ஓட்டங்கள் குவிப்பில் 6 முறையும் 300 ஓட்டங்களுக்கு மேல் எடுக் கப்பட்டது. ஓர் ஒவருக்குச் சராசரியாக 7 ஓட்டங்கள் இந்தத் தொடரில் எடுக்கப் பட்டுள்ளன.



## ஆஸ்திரேலியா ஓபன் டென்னிஸ்: காலிறுதியில் செரீனா வில்லியம்ஸ்

மெல்போர்ன், ஜன.24

ஆஸ்திரேலியா ஓபன் டென்னிஸ் போட்டியில் செரீனா வில்லியம்ஸ் 7-5, 6-4 என்ற நேர்செட் கணக் கில் பார்போராவை வீழ்த்தி காலிறுதிக்கு தகுதி பெற்றுள்ளார்.

கிராண்ட்சிலாம் போட்டி களில் ஒன்றான ஆஸ்தி ரேலிய ஓபன் டென்னிஸ் போட்டி மெல்போர்ன் நகரில் நடைபெற்று வருகிறது.

உலகின் இரண்டாம் நிலை வீராங்கனையும், ஆஸ்திரேலிய ஓபன் பட்டத்தை 6 முறை வென்றவருமான செரீனா வில்லியம்ஸ் (அமெரிக்கா) 4 ஆவது சுற்று ஆட்டத் தில் செக் குடியரசைச் சேர்ந்த 16 ஆம் நிலை வீராங்கனை பார்போராவை எதிர் கொண்டார்.

இந்தப் போட்டியில் செரீனா வில்லியம்ஸ் 7-5, 6-4 என்ற நேர்செட் கணக்கில் எளிதில் வென்று காலிறுதிக்குத் தகுதி பெற்றுள்ளார். செரீனா 11 ஆவது முறையாக அவர் ஆஸ்திரேலியா ஓபனில் காலிறுதிக்கு முன்னேறி இருக்கிறார்.

செரீனா வில்லியம்ஸ் காலிறுதி ஆட்டத்தில் 9 ஆம் நிலை வீராங்கனை யான ஜோகன்னாவை (இங்கிலாந்து) சந்திக் கிறார். அவர் 4 ஆவது சுற்றில் 30 ஆவது வரிசை யில் இருக்கும் மக ரோஹவை 6-1, 6-4 என்ற நேர்செட் கணக்கில் எளிதில் வென்றார்.

மற்ற காலிறுதி ஆட்டத்தில் முகுருஜா (ஸ்பெயின்)- கோகோ வான்ட்வெக் (அமெரிக்கா) வீனஸ் வில்லியம்ஸ் (அமெரிக்கா)- அனஸ் டசியா (ரஷியா) மோது கின்றனர்.

ஆண்கள் பிரிவை பொறுத்தவரை, உலகின் முதல்நிலை வீரரான அன்டிமுர்ரே (இங்கி லாந்து), இரண்டாம் நிலை வீரரான ஜோகோவிச் (செர்பியா) ஆகியோர் அதிர்ச்சிகரமாக தோல் வியடைந்துள்ளனர்.

# காப்பாற்ற வேண்டிய கடற்படையினரே காயப்படுத்தியமை கண்டிக்கத்தக்கது

## மீனவரின் பாதுகாப்பை உறுதிப்படுத்தக் கோருகிறார் விந்தன்

கச்சதீவில் கரையொதுங்கிய நெடுந்தீவு மீனவர்களைக் கடற்படையினர் மோசமாகத் தாக்கி காயப்படுத்திய சம்பவம் காட்டுமிராண்டித்தனமான செயற்பாடு என வடக்கு மாகாண சபை உறுப்பினர் விந்தன் கனகரட்ணம்தெரிவித்துள்ளார். கடற்படையினரின் இந்தச் செயலைத் தான் வன்மையாகக் கண்டிக்கிறார்என்றும்அவர்தெரிவித்தார்.

கடலுக்குச் சென்றவர்களுக்கு ஏதாவது ஆபத்து என்றால் அவர்களைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு கடற்படையினருக்கு உண்டு. அந்தப் பொறுப்பைத் தட்டிக்கழித்த அவர்கள், எரிபொருள் தீர்ந்த நிலையில் கரையொதுங்கிய மீனவர்களைத் தாக்குவது மனிதாபிமானம் இல்லாத செயலாகும் என்றும் அவர் கூறினார்.

நெடுந்தீவில் இருந்து கடலுக்குச் சென்ற மீனவர்கள் எரிபொருள் தீர்ந்த நிலையில், கச்சதீவில் கரையொதுங்கினர். கச்சதீவு என்பது இலங்கை – இந்திய மீனவர்களுக்குப் பொதுவான இடம்.

1974 ஆம் ஆண்டு செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில் இருதரப்பு மீனவர்களுக்கும் அந்த உரிமை உண்டு.

மேலும், கச்சதீவுப் பிரதேசம் நெடுந்தீவு பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்டது. நெடுந்தீவில் உள்ள 6 கிராம சேவையாளர் பிரிவுகளில் ஜே/2 கிராம சேவையாளர் பிரிவுக்கு உட்பட்டது. எரிபொருள் தீர்ந்தால் மீனவர்கள் அங்கு கரையொதுங்குவதில் தப்பு ஏதுமில்லை என்றும் விந்தன் தெரிவித்தார்.



மீனவர்கள் தாக்கப்பட்ட விடயத்தில் உடனடியாக நெடுந்தீவு கடற்படை அதிகாரி தலையிட்டு மீனவர்களுக்கு நியாயம் பெற்றுக்கொடுக்க வேண்டும். இனிமேல் இவ்வாறான ஒரு மோசமான செயற்பாடு நடைபெறாமல் இருப்பதை உறுதிப்படுத்த வேண்டும். – என்றும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார். (ம)

### எதிரணிக் கூட்டத்துக்கு சுதந்திரக் கட்சி எதிர்ப்பில்லையாம்

கூட்டு எதிரணியின் நுகேகொடை பேரணிக்கு சிறிலங்கா சுதந்திரக் கட்சி எந்த எதிர்ப்பையும் தெரிவிக்கவில்லை என சமூக வலுவூட்டல் மற்றும் நலனோம்புகை அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

கூட்டு எதிரணி சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் எதிரி அல்ல. நுகேகொடையில் பேரணியை நடத்துவதற்கு கூட்டு எதிரணிக்கு ஜனநாயக உரிமை உண்டு.

சிறிலங்கா சுதந்திரக் கட்சி ஒற்றுமையாக இருக்க வேண்டும் என்றேகட்சி ஆதரவாளர்கள் தெரிவிக்கின்றனர் எனவும் எஸ்.பி.திஸாநாயக்க கூறியுள்ளார். (ஒ)

# அக்கராயன் மக்களின் தேவைகளை பிரதிபலித்து வெளிப்படுத்துவது யார்?

கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் நடைபெறும் இணைப்புக்குழுக் கூட்டங்களில், அக்கராயன் பிரதேசத்தின் குறைபாடுகள், தேவைகள் குறித்து வெளிப்படுத்தச் சந்தர்ப்பம் வழங்கப்படுவதில்லை என்று சுட்டிக்காட்டப்படுகிறது.

கடந்த சனிக்கிழமை நடைபெற்ற இணைப்புக்குழுக் கூட்டத்தில் இது குறித்துக் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டது; குற்றஞ்சாட்டப்பட்டது.

நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாணசபையின் அங்கத்தவர்கள், அரச அதிகாரிகள் கலந்து கொள்ளும் கூட்டங்களை மட்டும் நடத்துவது குற்றம் என்றும் –

மக்கள் மன்றங்களின் பிரதிநிதிகள் அழைக்கப்படாமல், இணைப்புக்குழுக்கூட்டங்களை நடத்துவது கண்டிக்கத்தக்கது என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அக்கராயன் குளம், மாவட்டத்தின் பெரும் குளங்களில் இரண்டாவது இடத்தில் இருந்த போதிலும் அந்தப் பிரதேசத்தின் தேவைகள் குறித்தும் மக்களின் நலன்கள் குறித்தும் கவனம்,அக்கறைகாட்டப்படாது புறக்கணிப்பது மிகுந்த பாகுபாடு என்றும் அந்தப்பிரதேச மக்கள் கவலையும் கண்டனமும் தெரிவித்துள்ளனர்.

# காணாமல் ஆக்கப்பட்டோரைக் கண்டறிவதற்கான அலுவலகம் அமைப்பது தொடர்பில் விளக்கமளிப்பு

கிளிநொச்சி, ஜன.24

காணாமல் ஆக்கப்பட்டவர்களைத் தேடிக் கண்டுபிடிப்பது தொடர்பான அலுவலகம் அமைப்பது தொடர்பாக விளக்கமளிக்கும் கலந்துரையாடல் ஒன்று நேற்று வவுனியா பிரதேச செயலகத்தில் பிரதேச செயலாளர் கா.உதயராசா தலைமையில் நடைபெற்றது.



காணாமல் ஆக்கப்பட்டோருக்காக அமைக்கப்படவிருக்கும் அலுவலகம் தொடர்பாக மேற்படி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கிராமங்களில் இருந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளுக்கு மனித உரிமைகள் சம்பந்த மானவிரிவுரையாளர் றிக்கி பெனாண்டோ விளக்கமளித்தார்.



NCEASL நிறுவனம் ஏற்பாடு செய்த மேற்படி நிகழ்வில் 70 குடும்பங்களைச் சேர்ந்த காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் கலந்துகொண்டனர்.

(ம – 100)

# சிங்கக் கொடியோடு நந்திக் கொடிக்கும் முக்கியத்துவம் கொடுத்தால்தான் சகவாழ்வு

## தேசியம் குறித்து விளக்குகின்றார் அமைச்சர் மனோ கணேசன்



இலங்கையராக வாழ வேண்டுமாயின் எமது மதம், மொழி என அனைத்து அம்சங்களும் சிங்கள பௌத்தம் சார்ந்ததாக இருக்க வேண்டும் என்ற நிலைப்பாடு மாறிவிட்டது.

எனவே, இன்று சிங்கக் கொடிக்குக் கொடுக்கப்படுகின்ற முக்கியத்தும் நந்திக்கொடிக்கும் வழங்கப்பட வேண்டும் எனத் தேசிய சகவாழ்வு, நல்லிணக்கம் மற்றும் அரச கரும மொழிகள் அமைச்சர் மனோ கணேசன் தெரிவித்தார்.

கொழும்பு கதிரேசன் வீதி, கதிர்வேலாயுத சுவாமி ஆலயத்தில் அறநெறிப் பாடசாலையை அங்குரார்ப்பணம் செய்து வைக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் நடைபெற்றது.

இதில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கூறியவை வருமாறு:-

தற்போது நாம் இலங்கையராகச் சிங்கக் கொடியை முன்னிலைப்படுத்துவதில் மாத்திரம் திருப்தியடையாமல் நந்திக் கொடியையும் உள்வாங்கித் திருப்தியடைய வேண்டும். அதுவே சமத்துவம். உண்மையான தேசியமும் அதுவேயாகும்.

ஆனால் இன்று சிலருக்கு சிங்கம் மாத்திரமே தேசியமாக உள்ளது. சிங்கம் மட்டும் தேசிய அல்ல. ஆனால், சிங்கத்தைத் தேசியம் என்று கருதி திருப்தியடைந்துவிடுவார்கள்.

சிங்கம் மட்டும் தேசியம் என்று கருதுபவர்கள் சிங்கத்தின் பால் சரணடைந்து விட்டனர். அது தேசியமல்ல.

மற்றும் சிலர் நந்தியை மாத்திரம் முதற்கொண்டு செயற்படுகின்றனர். அதுவும் கிடையாது. நந்தி மட்டும் தேசியம் என்றால் அதனை இனவாதம் அல்லது தீவிரவாதம் என்றே கருத வேண்டும்.

எனவே இரண்டையும் சமமாகக் கருத வேண்டும். ஒரு புறம் நந்தி, மறுபுறம் சிங்கம் என்ற கோணத்திலிருந்து நாம் பார்க்க வேண்டும்.

இவை இரண்டும் இருந்தால் மாத்திரமே நாம் இந்த நாட்டில் இந்துவாகவும் தமிழனாகவும் இலங்கையனாகவும் வாழ முடியும். அவற்றில் குழப்பங்களை ஏற்படுத்துவதில் அர்த்தமில்லை.

ஆனால், நாம் இலங்கையர் என்பதனால் இந்து என்பதையும் தமிழர் என்பதையும் விட்டுக் கொடுக்கவும் முடியாது. தமிழர் என்ற காரணத்துக்காக இலங்கையர் என்றதை விடுக்கவும் தேவையில்லை.

முன்பு நாம் இலங்கையராக இருக்க வேண்டுமாயின் சிங்களவராக இருக்க வேண்டும், சிங்கள மொழி பேசவேண்டும் என்று நிலைமை இருந்தது. அவ்வாறான நிலைமை இன்று இல்லை.

சிங்களவர் முதல் தர இலங்கையர் என்றும் மற்றையவர் அடுத்தடுத்த தரத்தில் உள்ளவர்கள் என்ற கருத்தையும் நாம் இன்று தகர்த்துள்ளோம்.

ஆகவே, இன்று தமிழனாகவும் இந்துவாகவும் இருக்கின்ற அதேவேளை நாம் இலங்கையராகவும் இருக்க வேண்டும். இந்த அறிவு சகலருக்கும் இருக்க வேண்டும்.

இந்த அறிவு அரசாங்கத்துக்கும் உள்ளது. அரசாங்கத்தின் ஜனாதிபதிக்கும் இது தொடர்பில் அறிவுள்ளது. பிரதமருக்கும் அமைச்சரவைக்கும் இந்த அறிவு உள்ளது. துறைசார் அமைச்சருக்கும் உள்ளது.

அதனால் சிங்கக் கொடியை உயர்த்தித் தேசியத்தைப் போற்றினாலும் எமது இனம், மதம் என்ற தனித்துவத்தை மறந்து விடக்கூடாது.

தமிழருக்கும் – ஈழத்தமிழர், மலையகத் தமிழர் என்று வேறுபாடு உள்ளது. அவை வரலாறு. அவையும் இருக்கத்தான் வேண்டும். அந்த தனித்துவங்கள் உள்வாங்கப்படுவது சிறந்தது.

ஆனால், இலங்கையராக இருக்க வேண்டும். இந்த ஆட்சி மொழிகள் இன்று எமது நாட்டின் ஆட்சி மொழியாக உள்ளன.

பறங்கிய, ஆபிரிக்கர்கள், மலையாளத்தைச் சேர்ந்தவர்கள் என 19 இனத்தவர் இலங்கையில் உள்ளனர்.

எனவே, சிங்கள பௌத்தம் மட்டுமல்ல, அதனுடன் 19 மதங்கள், 3 மொழிகளைச் சேர்ந்தால் தான் அது இலங்கையாக இருக்கும்.

சிங்களம், பௌத்தம் மாத்திரம் இலங்கையர் என்ற நிலைப்பாட்டைத் தூக்கியெறிந்துவிட்டோம். இதனைச் சிங்கள தலைவர் மத்தியிலும் கூட நாம் கூறியுள்ளோம்.

மாறாக தமிழர்கள் மத்தியில் பேசிவிட்டு தமிழ்த் தேசிய வாதத்தைத் தூண்டிவிட்டு செயற்பட நாம் தயாராக இல்லை. – என்றார்.

# திருமலையில் நீரில் மூழ்கி மூவர் உயிரிழப்பு!



கொழும்பு, ஜன.24

திருகோணமலை, மூதூர் பகுதியில் கடலில் நீராடச்சென்ற மாணவர்கள் மூவர் நேற்று நீரில் மூழ்கி மரணமடைந்துள்ளனர்.

இந்த மூவரும் திஹாரிய பிரதேசத்திலிருந்து ஜமாஆத் சமய நிகழ்வுக்காக மூதூர் ஹதீப் நகருக்குச் சென்றிருந்த போதே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்தவர்களின் சடலங்கள் மீட்கப்பட்டு மூதூர் தள வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளன.

இவ்வருடம் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை எழுதவுள்ள பாடசாலை மாணவர்களான முஹம்மட் பியாஸ் முஹம்மட் இக்ராம் (19 வயது), காதர் ஹசன் அப்துல்லாஹ் (17 வயது), மற்றும் முஹம்மட் நௌாட் முகாஷ் (19வயது) ஆகியோரே உயிரிழந்தவர்கள் எனப் பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (ஒ)

# பாடசாலைகளுக்காக தபால் முத்திரைகள் இனி வெளிவரா

கொழும்பு, ஜன.24

பாடசாலை நூற்றாண்டு விழாக்களுக்கு இனி வரும் காலங்களில் தபால் முத்திரை வெளியிடப்படாது என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

நேற்று நடைபெற்ற கொழும்பு விசாகா கல்லூரியின் நூற்றாண்டு விழா நிகழ்வில் கலந்துகொண்டுஉரையாற்றும் போதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார்.

விசாகா கல்லூரியின் நூற்றாண்டு விழாவையொட்டி நேற்றுத் தபால் தலை வெளியிடப்பட்டது.

இலங்கையில் பாடசாலை நூற்றாண்டு விழாவை முன்னிட்டு தபால் தலை வெளியிடப்படும் இறுதிப் பாடசாலையாக விசாகாக் கல்லூரி அமையும் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன் இதன்போது தெரிவித்துள்ளார். (ஒ)

காலைக்கதிர்
Kalaikkathir

# டெங்கு நோயின் தாக்கம் அதிகரிப்பு: கட்டுப்பாட்டு நடவடிக்கை போதாது

## சில இடங்களில் விழிப்புணர்வு தொடங்கவில்லை

(எஸ்.நிதர்சன்)

டெங்கு நோயின் தாக்கம் அண்மைக்காலமாக அதிகரித்து வருகின்ற நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் இந்த வருடம் பிறந்ததிலிருந்து திங்கட்கிழமை வரை டெங்கு நோயால் பாதிக்கப்பட்ட 291 பேர் சிகிச்சை பெற்றுள்ளனர் என வைத்தியசாலைப் புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

இதைவிட தெல்லிப்பழை, சாவகச்சேரி, பருத்தித்துறை, ஊர்காவற்றுறை ஆதார வைத்திய சாலைகளிலும் பலர் சிகிச்சை பெற்றுள்ளனர் எனவும் தெரிய வருகின்றது. அதையும் சேர்த்தால் இந்த எண்ணிக்கை நானூறுக்கும் அதிகமாகும் எனவும் சுகாதாரத்துறை தெரிவிக்கின்றது.

யாழ்.போதனா வைத்திய சாலையிலும் ஏனைய ஆதார வைத்தியசாலைகளிலும் காய்ச்சலால் பாதிக்கப்பட்ட பலர் விடுதிகளில் தங்கிச் சிகிச்சை பெற்று வருகின்றனர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

யாழ்.மாவட்டத்தில் கடந்த 2016 ஆம் ஆண்டு 12 மாதங்களிலும் சேர்த்து 1272 பேர் மட்டுமே டெங்கு நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர். அதில் மூவர் உயிரிழந்தனர். ஆனால், இந்த வருடம் ஜனவரி மாதம் 22 ஆம் திகதிக்குள் 400 இற்கும் அதிகமானோர் இந்த நோயால் பாதிக்கப்பட்டிக்கின்றமை மோசமான நிலைமை எனவும் சுகாதாரப் பிரிவு தெரிவிக்கின்றது.

டெங்கு நோயின் தாக்கம் தீவிரமாக அதிகரித்து வருவதால் மத்தியசுகாதாரத்திணைக்களம் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை தீவிரப்படுத்தியிருக்கின்ற போதிலும் யாழ்.மாவட்டத்தில் உள்ள சில பிரதேசங்களில் இதுவரை கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் இடம் பெறவில்லைஎனத்தெரியவருகின்றது.

மேலும், டெங்கு நோய் அதிகமாகப் பரவுகின்ற இடங்களில் மக்களுக்கான விழிப்புணர்வு நடவடிக்கை போதுமானதாக இல்லை என்றும் குற்றம்சாட்டப்படுகின்றது. சில பிரதேசங்களில் மக்கள் தற்போதைய டெங்கு நோய்ப் பரவல் தொடர்பாக இது வரை அறிந்திருக்கவில்லை எனவும் தெரியவருகின்றது.

சுகாதாரத்துறை, ஏனைய அரச, அரச சார்பற்ற நிறுவனங்களையும் ஒருங்கிணைத்து டெங்கு கட்டுப்பாட்டு நடவடிக்கையைத் தீவிரப்படுத்த வேண்டும் எனவும் கோரிக்கை முன் வைக்கப்பட்டுள்ளது.

எனினும், டெங்கு நோயைக் கட்டுப்படுத்துவதற்கு தாங்கள் பல்வேறு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகிறார்கள் எனவும் அதற்கு போதிய ஒத்துழைப்பு கிடைக்கவில்லை எனவும் யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி க.நந்தகுமாரன் தெரிவித்துள்ளார். (ம)

## கச்சதீவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) டுக்கவுள்ளனர் என நெடுந்தீவு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தினர் நேற்றிரவு தெரிவித்துள்ளனர்.

மேற்படி சம்பவம் தொடர்பாக மேலும்தெரியவருபவை வருமாறு :-

நெடுந்தீவில் இருந்து கடந்த சனிக்கிழமை பிற்பகல் கடற்றொழிலுக்குச் சென்ற மூன்று மீனவர்கள் ஆழ்கடலில் மீன்பிடி வலைகளைப் பாயவிட்டனர். பின்னர் அதிகாலை வேளை மீன்பிடிப்பதற்காக வலைகளைத் தேடியபோது அவை அலையுடன் அள்ளுண்டு காணாமற்போயிருந்தன.

மீனவர்கள் மூவரும் வலைகளைத் தேடி அலைந்தனர் எனவும், அதனால் அவர்களின் படகின் எரிபொருள் தீர்ந்தது. கடலில் தத்தளித்த அவர்களின் படகு மறுநாள் ஞாயிற்றுக் கிழமை இரவு கச்சதீவில் கரையொதுங்கியது.

அங்கு இருந்த கடற்படையினர் மீனவர்களைப் பிடித்துக் கொட்டன்களால் கடுமையாகத் தாக்கினர் எனவும், இதனால் அவர்களுக்கு உள்காயங்கள் ஏற்பட்டன என்றும் ஒருவருக்கு கையில் வெடிப்பு ஏற்பட்டது என்றும் தெரியவருகின்றது.

தாங்கள் மீனவர்கள் என்பதை உறுதிப்படுத்தியபோதிலும் அதைப் பொருட்படுத்தால் கடற்படையினர் தங்களைத் தாக்கினர் எனவும் ஞாயிறு இரவு முழுவதும் தங்களுக்கு எதுவித உணவும் வழங்காமல் தடுத்து வைத்திருந்துவிட்டு திங்கட்கிழமை அதிகாலை விடுவித்தனர் என்றும் பாதிக்கப்பட்ட மீனவர்கள் தெரிவித்தனர்.

எரிபொருள் தீர்ந்ததாலேயே தாங்கள் கரையொதுங்கினர் என்பது கடற்படையினருக்குத் தெரிந்தபோதிலும் தாங்கள் திரும்பி வருவதற்கு அவர்கள் எரிபொருளைக் கூட வழங்கியிருக்கவில்லை என்றும் மீனவர்கள் தெரிவித்தனர்.

தங்கள் படகில் இருந்த பாயை விரித்து அதன் உதவியுடன் கடலுக்குச் சென்று பின்னர் ஆழ்கடலில் தொழில் செய்துகொண்டிருந்த சில மீனவர்களின் உதவியுடன் நேற்று திங்கட்கிழமை பகல் நெடுந்தீவை அடைந்தனர் எனவும் அவர்கள் தெரிவித்தனர்.

நெடுந்தீவு கிழக்கைச்சேர்ந்த தியோகுப்பிள்ளை ஞானராசா, சகாயன் செல்வன், மரியதாஸ் வசந்தராஜா ஆகிய மீனவர்களே கச்சதீவில் கரையொதுங்கி கடற்படையினரால் தாக்கப்பட்டவர்களாவர்.

இவர்களில் மரியதாஸ் வசந்தராஜா என்ற மீனவருக்கே கையில் காயம் ஏற்பட்டுள்ளது. ஏனையோர் கடுமையான உள்காயமடைந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (ம)

## 35 கிலோ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) மறைத்துக் கடத்திச் சென்ற 3 பேர் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மன்னார் பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்து மன்னார் – தலைமன்னார் பிரதான வீதி 2ஆம் கட்டைப் பகுதியில் வைத்து இவர்கள் மூவரும் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டனர்.

இதன்போது காரில் மறைத்து வைக்கப்பட்டிருந்த சுமார் 35 கிலோ எடை கொண்ட கேரளக் கஞ்சாப் பொதிகள் மீட்கப்பட்டன.

## தவறான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) படைத் தத்துவங்களைக் குறிக்கும் விதத்தில் தேசியக் கொடியின் நான்கு மூலைகளிலும் இருக்கும் நான்கு அரச இலைகளும் நெடுந்தாரகையில் பறந்த தேசியக் கொடியில் இருக்கவில்லை என்று அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

ஆனால், சரியான தேசியக் கொடியே ஏற்றப்பட்டது என்றும், அதில் நான்கு மூலைகளிலும் மஞ்சள் நிறத்தில் தலா ஒவ்வொரு அரச இலைகள் இருந்தன என்றும் விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன. (உ)

## அர்ஜுனா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) அர்ஜுன மகேந்திரன், தற்போதைய மத்திய வங்கி ஆளுநர் இந்திரஜித் குமாரசுவாமி உள்ளிட்ட பலருடன்சேர்ந்து ஒவ்வொருசெவ்வாயும்வியாழனும் நிதி அமைச்சில் நடைபெறும் கூட்டங்களில் பங்குபற்றுகின்றார் என ஊழல் தடுப்பு முன்னணி ஜனாதிபதிக்கு எழுதிய கடிதத்தில் தெரிவித்துள்ளது. (உ)

## வடமராட்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) தேவையுடைய இளைஞரே மரணமடைந்தவராவார். இவர் கடந்த வருடம் மார்ச் மாதம் 5 ஆம் திகதி 16 லட்சம் ரூபாவை முகவர் ஒருவருக்கு வழங்கி இலங்கை விமான நிலையத்தில் இருந்து ஆபிரிக்காவுக்குச் சென்றுள்ளார்.

அங்கு ஸியாரா லியோன் என்ற நாட்டில் தங்க வைக்கப்பட்ட நிலையில் அவரை சுவிஸ் நாட்டுக்கு அனுப்புவார் எனத் தெரிவித்த முகவர் எனினும் காலத்தை இழுத்தடிப்புச் செய்தார் எனக் கூறப்படுகின்றது. இதனால் மேற்படி இளைஞர் முகவருடன் முரண்பட்டார் எனவும் இதன்போது முகவர் இளைஞனைத் தாக்கினார் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

படுகாயமடைந்த இளைஞன் அங்குள்ள வைத்தியசாலை ஒன்றில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளார் என்று வடமராட்சியில் உள்ள உறவினர்களுக்கு முதலில் தகவல் வழங்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் அவர் மரணமடைந்தார் எனநேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை உறவினர்களுக்குக் கூறப்பட்டுள்ளது.

இது தொடர்பில் உறவினர்கள் நேற்று திங்கட்கிழமை நெல்லியடிப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

கொழும்பு வத்தளையைச் சேர்ந்த நபர் ஒருவரும், கொக்குவிலைச் சேர்ந்த மற்றொரு நபரும் இணைந்தே தமது மகனை வெளிநாட்டுக்கு அனுப்பினர் எனப்பெற்றோர் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளனர்.

மேலும் உயிரிழந்த இளைஞனின் சடலத்தை இலங்கைக்கு அனுப்புவதாயின் பதினைந்து லட்சம் ரூபா பணத்தை அனுப்பி வைக்குமாறு அங்கிருந்துகோரப்பட்டுள்ளதுஎனவும் அந்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இலங்கையில் இருந்து சென்ற பல இளைஞர்கள் ஆபிரிக்காவில் நிர்க்கதியான நிலையில் இருக்கின்றனர் எனவும் தெரிய வருகின்றது.

வடமராட்சியில் இருந்து அண்மையில் வெளிநாட்டுக்குச் சென்ற நிலையில் கொலை செய்யப்பட்ட இரண்டாவது இளைஞர் இவர் என்றும் வடமராட்சித் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ம-40)

## சு.க.முதல்வர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) ரங்களை அவர் கேட்டறிந்தார் எனத் தெரிவிக்கப்பட்டது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் அனுமதியுடன் மேற்படி சு.க. முதலமைச்சர்கள் மஹிந்தவைச் சந்தித்தனர். ஆனால் அந்தச் சந்திப்பு சூடான வாதப் பிரதிவாதங்களோடு முடிவுற்றது என்பது தெரிந்ததே. (உ)

## நித்தம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) சேர்க்கப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தின் போது முச்சக்கர வண்டியொன்றும் சேதமடைந்துள்ளது என தெரிவிக்கப்படுகின்றது. (ஒ)

## முஸ்லிம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) மாலை கொழும்பு நுகேகொடையில் ஏற்பாடு செய்துள்ள கூட்டத்தின் போது அணி மாறி, அந்த மேடையில் தோன்றுவார் என கொழும்பில் தகவல்கள் வெளியாகியுள்ளன.

தற்போது அணி மாறுவது குறித்து கூட்டு எதிரணியின் தலைவர் மஹிந்த ராஜபக்ஷவுடன் அவர் பேச்சு நடத்தி வருகின்றர் என்றும் கூறப்படுகின்றது. (உ)

## ஆசிரியர்களின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) வார காலத்துக்கு ஒத்தி வைக்கப்பட்டிருப்பதாக இலங்கை ஆசிரியர்சங்கவட்டாரங்கள்தெரிவித்தன.

வெளிமாவட்டங்களில் தமது சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்தவர்கள் என்று தெரிவிக்கும் ஆசிரியர் குழுவினர் தமக்குரிய இடங்களுக்கு இடமாற்றம் வழங்கக் கோரி கடந்த 10 ஆம் திகதி மாகாணக் கல்வி அமைச்சுக்கு முன்பாக கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

அப்போது இடம்பெற்ற சில சம்பவங்களை அடுத்து, அந்தப் போராட்டத்தில் ஈடுபட்ட மூன்று ஆசிரியர்களுக்கு வடமாகாணக் கல்விப் பணிப்பாளரால் பணித்தடை உத்தரவு வழங்கப்பட்டதாகக் கூறப்படுகின்றது.

அந்தப் பணித்தடை உத்தரவை விலக்கி, ஆசிரியர்களின் ஜனநாயக உரிமையைப் பாதுகாக்க வலியுறுத்தி நேற்று இலங்கை ஆசிரியர் சங்கத்தின் சார்பில் கவனவீர்ப்புப் போராட்டம் நடைபெற்றது.

கைதடியில் உள்ள வடக்கு மாகாண சபை அலுவலகத்துக்குமுன்னால்நேற்றுக்காலை முதல் நடைபெற்ற இந்தப் போராட்டத்தில் இலங்கை ஆசிரியர் சங்கத்தின் தலைவர் ஸ்டாலினும் சுமார் நூறு ஆசிரியர்களும் பங்குபற்றினர்.

மதியம் அளவில் ஸ்டானினையும் மற்றும் சில ஆசிரியர் பிரதிநிதிகளையும் முதலமைச்சர் தமது அலுவலகத்துக்கு அழைத்துப் பேசினார்.

மாகாணக் கல்வி அமைச்சரும், அவரின் செயலாளரும் நாட்டில் இல்லாத நிலையில் இவ்விடயம் குறித்துத் தம்மால் ஆராயமுடியாமல் இருக்கின்றது என முதலமைச்சர் ஆசிரிய பிரதிநிதிகளிடம் கூறினார்.

அதனால், இந்த விடயம் குறித்துப் பரிசீலித்து முடிவெடுக்கத் தமக்கு ஒரு வார கால அவகாசம் வழங்கும்படி எழுத்து மூலம் முதலமைச்சர், பிரதிநிதிகளிடம் கோரினார். அதனையடுத்து தங்கள் போராட்டத்தை ஒரு வாரத்துக்கு ஒத்திவைக்க ஆசிரியர்கள் தீர்மானித்தனர் என்று தெரிவிக்கப்பட்டது. (உ)

## கிழக்குப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) பல்கலைக்கழக நிர்வாகம் ஏறாவூர் பொலிஸ் நிலையத்தில் வழங்கிய முறைப்பாட்டையடுத்தே இவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

விடுதி வசதிகளை வழங்குமாறு கோரி கிழக்கு பல்கலைக்கழக மாணவர்கள் கடந்த ஐந்து தினங்களாக பல்கலைக்கழகத்தை முற்றுகையிட்டுப் போராட்டங்களை நடத்தி வருகின்றனர்.

இந்த நிலையில் கிழக்குப் பல்கலைக்கழகத்தின் மாணவர் ஒன்றியத்தின் முக்கிய உறுப்பினர்கள் பத்து பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ)

## விசுவமடுவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) பாதிக்கப்பட்ட 39 மாணவர்களும் 7 ஆசிரியர்களும் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

நேற்று திங்கட்கிழமை பகல் 11.30 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

மேற்படி பாடசாலையில் கற்றல் – கற்பித்தல் நடவடிக்கைகள் இடம்பெற்றுக் கொண்டிருந்தபோது குளவிக்கூடு கலைந்து குளவிகள் ஆங்காங்கே பறக்கத் தொடங்கின. பாடசாலைகளுக்குள் புகுந்த குளவிகள் மாணவர்களையும் ஆசிரியர்களையும் துரத்தித் துரத்திக் கொட்டின. இதனால் அவர்கள் ஆங்காங்கே சிதறி ஓடிப் பாதுகாப்பு தேடினர்.

எனினும், 39 மாணவர்களும், 7 ஆசிரியர்களும் குளவிக் கொட்டுக்கு இலக்காகினர். இவர்கள் அம்புலன்ஸ் மூலம் தர்மபுரம் வைத்திய சாலைக்குக் கொண்டு செல்லப்பட்டு சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டனர்.

இவர்களில் ஆரம்பப்பிரிவு மாணவர்கள் இருவர் கிளிநொச்சி பொது வைத்திய சாலைக்கு மாற்றப்பட்டனர்.

மாணவர்களினதும் ஆசிரியர்களினதும் பாதுகாப்பைக் கருத்தில் கொண்டு மேற்படி இரு பாடசாலைகளும் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளன என அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-70,81)

## மைத்திரி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) தற்போதைய அரசின் கெடுதியான செயற்பாடுகள் காரணமாக அரசியலிலிருந்து விலக முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது. – என்றார்.

கடந்த அரசின் காலத்தில் வேலைவாய்ப்புக்களை வழங்கவில்லை, முகத்தைப் பார்த்துச் சிரிக்கவில்லை, கிளைக் கூட்டங்களில் கலந்து கொள்ளவில்லை என மக்கள் தற்போது என் மீது குற்றம் சுமத்துகின்றனர்.

நாடாளுமன்றத்தில் தலைகளை மாற்றும் நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அது பற்றிக் கூற முடியாத விடயங்கள் உள்ளன.

2015 ஜனாதிபதித் தேர்தலில் மைத்திரிபால சிறிசேன வெற்றி பெறுவதற்கான ஆதரவைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வழங்குவதற்கு நிபந்தனை விதித்திருந்தது. அந்த நிபந்தனைப்படி, கூட்டமைப்பு சமர்ப்பித்த திட்டத்தின் அடிப்படையில் இப்போது புதிய அரசமைப்பு நிறைவேற்ற முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன.

இந்த அரசமைப்பு யோசனைத் திட்டத்தால் நாட்டின் ஒற்றையாட்சி முறைமைக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளது. – என்றார் அவர்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 24.01.2017 இல் அச்சிடப்பட்டுவெளியிடப்பெற்றது.